பக்கங்கள் : 22+VIII=30

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 07 ஞாயிற்றுக்கிழமை (20.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :114

'போரும் சமாதானமும்' நூல் அறிமுக விழாவில் பாலகுமாரன் உரை

# தமிழர்களின் விடுதலைத் தீயை

# உணராத சக்தியாக ஜே.வி.பி.

## நெருக்கடிமிக்க இந்த சூழலை வெல்ல மக்களிடம் அறிவியல் மாற்றம் வேண்டும்



யாழ்ப்பாணம்,மார்ச்20

தெற்கில் என்றும் இருந்திராத அளவுக்கு இனவாத நெருப்பைக் கக்கிக் கொண்டிருக்கிறது ஜே.வி.பி. தமிழ் இளைஞர்கள் மத்தியில் கனன்று எழுந்த விடுதலைத் தீயை விளங்கிக் கொள்ளாத - உணர்ந்துகொள்ளாத - ஜே.வி.பி. மீண்டும் ஒரு புரட்சிக்குத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கின்றது. இந்தச் சூழலை அறிவியல் ரீதியாக விளங்கிக்கொள்ளவேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையுமாகும்.

- இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற ஆங்கில நூலின் அறிமுக விழா நேற்றுமாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள வந்திருந்தார் பாலகுமாரன். பாலசிங்கத்தின் நூலின் அறிவியல் விடயங்களைச் சுட்டிக்காட்டி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாலகுமாரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று தமிழ்ச் சமூகம் ஒரு நெருக்கடியை நோக்கி நகர்கிறது. இந்த நெருக்கடிமிக்க சூழலைப் புரிந்துகொள்ளவேண்டியது - உணர்ந்து கொள்ளவேண்டியது தமிழ் மக்கள் அனைவரதும் தலையாய கடமையாகும்.

இந்தத் தமிழ்ச் சமூகம் நேற்றைய சமூகம் அல்ல: நாளைய - துடிப்புடன் வாழவேண்டிய

(18ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே சூரியகாந்தியில்

- கடலில் போட்டுவிட்டு குளத்தில் தேடுகிறார் ஜனாதிபதி!
- வான்வழிப் பாதுகாப்புச் சிக்கல்: விழிபிதுங்கும் நிலை அரசுக்கு!
- தேசிய சினிமா விருதுகளும் சில சிந்தனைச் சிதறல்களும்.....
- ஹெலியை கைகளால் அடித்து நொறுக்கிய ரத்வத்த குழுவினர்.
- படைப்பாளிகள் சேர்ந்து இயங்குவதே பலம்! - நந்தியின் செவ்வி.
- கலோராஸ் எரிமலை மீது ஒரு துணிகரப் பயணம்.....
- 2014இல் மற்றொரு சுனாமி?

## 'ஹன்டர்' மோதி குடும்பஸ்தர் மரணம்!

கிளிநொச்சி,மார்ச்20

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் நேற்று இடம்பெற்ற 'ஹன்டர்' வாகனம் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

நேற்று முற்பகல் 9 மணியளவில் முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சைக்கிளைச் செலுத்திவந்தவரான. அக்காகுடியிருப்பு, வள்ளிபுனத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் ஜெயபாலன் (வயது44) என்பவரே உயிரிழந்தார்.

இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை எதிரேவந்த ஹன்டர் ரக வாகனம் இவர் மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

குடியியல் - புவியியல் - வரலாறு

## தரம் 7 தமிழ் மாணவர்களுக்கான 3 பாட நூல்கள் அச்சிடப்படவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்20

இந்த ஆண்டு தொடக்கம் 7ஆம் தர மாணவர்களுக்குப் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் வரலாறு, குடியியல், புவியியல் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் இன்னமும் தமிழ்மொழியில் அச்சிட்டு வெளியிடப்படவில்லை. புதிய கல்வி ஆண்டின் முதலாம் தவணை முடிவடைய உள்ளபோதிலும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு இன்னமும் இந்தப் பாட நூல்கள் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.



சிங்கள மொழிமூல மாணவருக்காக வெளியிடப்பட்ட பாட நூல்களின் அட்டைகள்

ஏழாம் தரத்துக்கு இதுவரை நடைமுறையில் இருந்த சமூகக்கல்வியும் சுற்றாடலும் என்னும் பாடத்துக்குப் பதிலாகவே முன்னர் 1970 ஆம் ஆண்டுகளில் நடைமுறையில் இருந்ததுபோன்று - வரலாறு, புவியியல், குடியியல் ஆகிய மூன்று பாடங்களையும் இவ்வாண்டு ஜனவரி முதல் அறிமுகம் செய்வது என்று கடந்த வருடம் முடிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்த முடிவுப்படி இந்த மூன்று பாடங்களுக்குமான பாடநூல்கள் சிங்கள

(18ஆம் பக்கம் பார்க்க)



ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழு நேற்று சூரிச் விமான நிலையத்தை வந்தடைந்தபோது ஆதரவாளர்கள் புலிக்கொடி அசைத்து மலர்ச்செண்டு வழங்கி வரவேற்ற காட்சி. சுவிஸ் அதிகாரிகளுடன் அரசியல் குழுவினர் நாளைமறுதினம் பேச்சுக்களை ஆரம்பிப்பர்.

## குடாநாட்டின் மீது ஏப்ரலில் சூரியன் உச்சம் கொடுக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்20

சூரியன் மத்திய கோட்டுக்குமேலே உச்சம் கொடுப்பதன் காரணமாகக் குடாநாட்டில் அடுத்த மாதம் கடும் வெப்பக் காலநிலை நிலவும் என்று வளி மண்டலவியல் திணைக்களத்தின் யாழ். பிராந்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது.

அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலங்கைக்கு மேலாக சூரியன் உச்சத்துக்கு வருகின்றது. இந்தக் காலப் பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நண்பகல் 12 மணி 41 நிமிடத்துக்கு சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இக்காலப்பகுதியில் ஒவ்வொரு தினங்களிலும் வெவ்வேறு பிரதேசங்களின் மேலாக சூரியன்

(18ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடி நகைக்கடையில் 400 பவுண் நகைகள் சூறை

கரவெட்டி,மார்ச்20

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றிலிருந்து பெருந்தொகையான தங்க நகைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன.

வெள்ளிக்கிழமை இரவுவேளை மர்மமான முறையில் கடைக்கூரை பிரிக்கப்பட்டு நகைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன என்று நெல்லியடி பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நெல்லியடிச் சந்திக்கு மிக அருகில் அமைந்துள்ள இந்த நகைக் கடை வெள்ளிக்கிழமை இரவு வழமைபோல மூடப்பட்டு மறுநாள் காலை திறக்கப்பட்டபோது நகைகள் சூறையாடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

கடையின் கூரை உடைக்கப்பட்டு வானம்

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருத்துவ மாணவர் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு விரைவில் கிட்டும்!

## சகல தரப்பினரையும் விட்டுக்கொடுத்துச் செயற்பட அழைக்கிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,மார்ச்.20

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி யாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறி இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பான பிரச்சினைக்கு சுமூகமாகத் தீர்வுகாண்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. எனவே, இப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் மிகுந்த விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் செயற்படவேண்டுமென யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்குவதற்கென அவர் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சைக் கற்கைநெறியை மீள ஆரம்பிப்பதற்கு நான் அனைத்து வழிகளிலும் என்னாலான நடவடிக்கைகளை மிகவும் நிதானமாகவும், சரியான முறையிலும் மேற்கொண்டு வருகின்றேன்.

இதற்கென நான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடனும் பல தடவைகள் பேசியுள்ளேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாகவே டாக்டர் கே.குணானந்தன் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்குத் தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டார். மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு நான் தனிப்பட்ட ரீதியில் விடுத்த வேண்டுகோளையடுத்து அவர் டாக்டர் கே.குணானந்தனைத் தற்காலிகமாக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றுமாறு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் எனக்குத் தொலைநகல் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்கமைய உடனடியாக அவருக்கு இடமாற்றம் வழங்கி அதற்கான பதிலை உடனேயே நான் மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்தேன்.

இதனைவிட டாக்டர் கே.குணானந்தனை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வரவேண்டாம் எனக்கூறுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. ஏனெனில் அவர் தொடர்ந்தும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றமுடியும் என்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியுள்ளது. அதேவேளை, சத்திர சிகிச்சை நிபுணர்கள் கற்கை நெறிகளை நடத்துமாறும் நான் கூற முடியாது. அதற்கும் எனக்கு அதிகாரமில்லை. ஏனெனில் அவர்கள் சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையை துணைவேந்தர் சமரசமான முறையில் தீர்த்துவைக்க முடியுமென மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கருதுகின்றார். அவ்வாறு தீர்வு காணப்படுவதற்கென நான் எடுத்த அனைத்து சமரச முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன. பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் செயலாற்றுவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். இல்லாவிடில் கல்வி அமைச்சர் ஜனாதிபதி போன்றோருடன் பேசுவதன் மூலமே தீர்வு கிட்டும்.

இதற்கென நடவடிக்கைக் குழுவொன்றைத் தற்போது அமைத்துள்ளோம். அந்தக் குழுவினர் அடுத்த சில தினங்களில் உரிய தரப்புகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவார்கள். இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

இதேவேளை, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நானும் தனிப்பட்ட ரீதியில் செயலாற்றுகின்றேன். டாக்டர் கே.குணானந்தனுக்கு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பீடாதிபதிப் பதவியை வழங்கி அவரை அங்கு நிரந்தரமாகக் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரை நான் பலமுறை கோரியுள்ளேன். அத்துடன் குணானந்தனை அங்கு நிரந்தரமாக்குவதற்கு வசதியாக யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள சத்திரசிகிச்சை சிரேஷ்ட விரிவுரையாளருக்கான ஆளணி வெற்றிடத்தை(Cadre) கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு வழங்குவதற்கான ஒப்புதலையும் நான் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளேன். இவ்வாண்டுக்கான ஆளணி உருவாக்கத்தின்போது அதனை மீள வழங்குவது என்ற அடிப்படையிலேயே இந்த ஒப்புதலை அளித்துள்ளேன்.

இந்தப் பிரச்சினை இதுவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று சிலர் கூறுகின்றனர். மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குத் தெரியாமல் நான் இவற்றையெல்லாம் எப்படிச் செய்திருக்கமுடியும்.

இதனை மாணவர்களும் சமுதாயமும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

அதனை விடுத்து துணைவேந்தர் எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையெனக் குற்றஞ்சாட்டுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

தீர்வைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. விரைவில் தீர்வு ஒன்று கிடைக்குமென நான் நம்புகின்றேன்.

- இவ்வாறு துணைவேந்தர் தெரிவித்தார்.

(ஐ-8)









விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' (War and Peace) என்ற ஆங்கில நூலின் அறிமுக வைபவம் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தேசியக் கொடி ஏற்றுவதையும் போராளிகள் கொடிவணக்கம் செலுத்துவதையும் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதிகளை சோ.தங்கன், பேராசிரியர் மோகனதாஸ், வே.பாலகுமாரன் ஆகியோர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பிரபா, நேசன்)

# விஞ்ஞான விந்தைகளை சித்திரிக்கும் கண்காட்சி

**யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சி எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. அதை யொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.**

1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி காலஞ்சென்ற பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கமானது தற்போது பதினான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. ஆரம்ப காலம் தொட்டு சிறந்த தலைவர்களின் பங்களிப்பினாலும், செயலாளர்களின் தன்னலமற்ற சேவையினாலும் எமது மண்ணின் வளங்கள், கலாசாரம், அறிவு ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைத்து விருத்தியடையச் செய்யும் நோக்கத்தில் சிறிதளவேனும் தளர்வின்றி இந்தச் சங்கம் வீறுநடைபோடுகின்றது.

யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இக்கண்காட்சிப் போட்டியில் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றித் தமது திறமையை வெளிப்படுத்தலாம். போட்டிக்காக வரும் கண்காட்சிப் பொருள்களின் எண்ணிக்கைக்கு எல்லை கிடையாது. ஒரு பாடசாலையில் இருந்து எத்தனை கண்காட்சிப் பொருள்களும் போட்டிக்கு அனுமதிக்கப்படும். இதிலே சிறந்ததாக தெரிவுசெய்யப்படும் முதல் ஐந்து காட்சிப்பொருள்களுக்குப் பரிசில்களும், தரமானதாகத் தெரிவுசெய்யப்படும் முதல் பத்து கண்காட்சிப் பொருள்களுக்கு சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்தக் கண்காட்சியினை நடத்தத் தேவையான நிதியினை தன்னலங்கருதாது சேவையாற்றும் நிறுவனம் ஒன்றும் இடவசதியினை

## புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் கொக்குவில் இந்துவில் நடக்கும்

பாடசாலைகளும் வருடாவருடம் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு வருடமும் பாடசாலைகளைப் பிரபல்யப்படுத்தும் நோக்குடன் வேறு வேறு பாடசாலைகளைத் தெரிவுசெய்யும் இச் சங்கம் 2005ஆம் ஆண்டு கொக்குல் இந்துக் கல்லூரியினைத் தெரிவுசெய்துள்ளது. கே.கே.எஸ். பிரதான வீதியில் இப்பாடசாலை அமைந்துள்ளமை சிறப்பான தொன்றாகும்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி பற்றி...**

1910 ஆம் ஆண்டு அமரர் ஈ.செல்லையா அவர்களினால் நிறுவப்பட்ட கொக்குவில் இந்துக்கல்லூரி 2010ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடவிருக்கின்றது. அதிபர் பொ.கமலநாதனின் வழிநடத்தலில் சிறப்பாக இயங்கி வரும் இப்பாடசாலையில் ஆயிரத்து 740 பிள்ளைகளும், பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 70 ஆசிரியர்களும் பணியாற்றிவருகின்றனர்.

பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவரும் இப்பாடசாலை ஒழுக்கத்திலும், விளையாட்டுத்துறை, இலக்கியத் துறை, மன்றச் செயற்பாடுகள், சேவைகள் போன்றவற்றிலும் சிறந்து விளங்குகின்றது. மேலும் இடைநிலைக் கல்வி நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் இக்கல்லூரியும் கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்டிருப்பதும் பாராட்டுக்குரியதொன்றாகும்.

யாழ். விஞ்ஞான சங்கத்திற்கு ஆரம்பம் முதலே அனைத்து ஒத்துழைப்பினையும் நல்கிய இந்துக் கல்லூரிக்கு மா.சுப்பிரமணியம் என்ற பழைய மாணவர் அண்மையில் புதிதாக நிர்மாணித்துக்கொடுத்த மூன்று மாடிக்கட்டடத்தில் இந்த விஞ்ஞான கண்காட்சி நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும். ★

## வடக்கின் பெரும் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பரணம், மாரர்ச்20

வடக்கின் பெரும் கிரிக்கெட் மோதல் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான 99ஆவது கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்றுக் காலை ஆட்டம் ஆரம்பமானபோது தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

55ஆவது ஓவர்களில் 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மத்திய கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஆட்டத்தில் சிறந்த களத் தடுப்பாளராக செல்ரன் (சென்ரல்), சிறந்த பந்துவீச்சாளராக தயான் (சென்ரல்), சிறந்த துடுப்பாட்ட வீரராக மயூரதன் (சென்.ஜோன்ஸ்), சகலதுறை ஆட்டக்காரராக மதன்ராஜ் (சென்.ஜோன்ஸ்), ஆட்டநாயகனாக மயூரதன் (சென்.ஜோன்ஸ்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த இரண்டு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-3-190)

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## அரசின் சதி நாடகம் அம்பலமாகும் காலம் இது!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைக் கையாளவேண்டிய பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியும் இழுபடப்போவதாகவே தென்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக, அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் முன்வைத்த ஆலோசனைத் திட்டத்தைத் தாம் ஏற்றுக்கொள்கிறார்கள் எனப் புலிகள் அறிவித்துவிட்டனர். ஆனால், அரச தரப்புத்தான் இழுத்தடிக்கின்றது. இத்திட்டத்துக்குப் பச்சைக்கொடி காட்டாமல் ஆரம்பத்தில் காலத்தைக் கடத்திய அரசுத்தரப்பு, இப்போது நோர்வே பிரேரித்த திட்டத்தில் மாற்றம் செய்யவேண்டும் என அடம்பிடிக்கின்றது. இதனால், இந்த விவகாரமும் இழுபடப்போகின்றதாகவே தோன்றுகின்றது.

யுத்தநிறுத்தம் நான்காவது ஆண்டுக்குள் பிரவேசித்துவிட்டது. ஆனால், அதற்கு முந்திய இரண்டு தசாப்தகால யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழருக்கு யுத்தப் பாதிப்புகள் மற்றும் பேரழிவுத் தாக்கங்களிலிருந்து விமோசனம் அளிப்பதற்கான - அவர்களின் அவசர, அத்தியாவசிய மனிதாபிமானத் தேவைகளைக் கவனிப்பதற்கான - இடைக்கால நிர்வாகம், கானல் நீராக இழுபட்டுச் செல்கின்றது. அதுதான் அப்படி என்று பார்த்தால், ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு மக்களுக்கான மீள்கட்டுமானப் பணியும் காலவரையின்றி இழுபடுகின்றது.

அமைதி முயற்சிக்கான இந்தக் காலத்தில் - யுத்தநிறுத்த வேளையில் - சமாதானத்தை எட்டுவதற்கான ஆக்கபூர்வமான எத்தனம் எதையும் எடுப்பதில் அரசு கரிசனைகொள்வதாகத் தெரியவில்லை. ஆனால், அதற்கு மாறாக மறுபுறத்தில் - மறைவில் - தமிழர் தரப்பை இராணுவ ரீதியில் பலமிழக்கவைத்து, அவர்களின் வலுவை உடைக்கச் செய்வதற்கான இரகசிய முயற்சிகள் - சதித்திட்ட நகர்வுகள் - காதும் காதும் வைத்தாற்போல அரசுத் தரப்பினால் முன்னெடுக்கப்படுகின்றன என்த் தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

தான்செய்த மிகமோசமான குற்றங்கள் காரணமாக - சமூகவிரோதச் செயற்பாடுகள் காரணமாக - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து துரத்தப்பட்ட கருணா என்ற தனி மனிதப் பிறழ்வு, விடுதலைப் போராட்ட சக்திகளுக்கு மத்தியில் செல்லாக்காசாகிப்போன பின்னர், அந்தப் பெயரை வைத்துக்கொண்டு தனது கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றது அரசின் புலனாய்வுத்துறை.

வடக்கு - கிழக்கை அண்டிய தமிழர் தாயகப் பிரதேசத்தில் - குறிப்பாகக் கிழக்கை அண்டிய அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - அரசுத்தரப்பின் ஆசீர்வாதத்தோடும், ஒத்துழைப்பு - வழிகாட்டல் - உதவிகளோடும் சமூகவிரோதக் கும்பல் ஒன்று கருணாவின் பெயரில் முகாமிட்டு, தரித்திருந்து, திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன. அடுத்த ஓரிரு தினங்களில் பல விடயங்கள் - அரசின் சதி, நாசவேலைத் திட்டங்கள் பற்றிய பல உண்மைகள் - அம்பலத்துக்குவரும் என உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கின்றார்கள் எனப் புலிகளுக்கு எதிராகச் சர்வதேசம் எங்கும் போய் 'பிலாக்கணம்' பாடும் இலங்கை அரசு, ஈழத் தமிழர்களின் பலமாகவும், வலுவாகவும், இராணுவ சக்தியாகவும், ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளாகவும் விளங்கும் புலிகளை அழிப்பதற்காக, வயதில் குறைந்த தமிழ்ச் சிறுவர்களையும்கூட தன் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலில் ஒன்றிணைத்து ஓர் கூலிப்படையை - சமூகவிரோதக் கும்பலை - உருவாக்கியிருப்பது பற்றிய திடுக்கிடும் தகவல்கள் - உள்வீட்டு உண்மைகள் - விலாவாரியாக வெளிவர இருக்கின்றன எனத் தெரிகிறது.

முன்னர் சமூகவிரோதக் குழுக்களாகச் செயற்பட்ட பல்வேறு இயக்கங்களில் இருந்து இயங்கி, பின்னர் அவற்றையெல்லாம் விட்டுத் துறந்து சாதாரண வாழ்க்கைக்குப் போனவர்களையும்கூட சேர்த்துப் பிடித்து இழுத்துத் தனது கூலிப்படை ஒன்றை வலுவாக அமைப்பதற்கு அரசின் புலனாய்வுப் பிரிவு பகீரதப்பிரயத்தனம் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்தத் தகவல்கள் சர்வதேச சமூகத்துக்கு விரைவில் வெட்ட வெளிச்சமாகும் - அம்பலமாகும் - சாத்தியங்கள் தோன்றுகின்றன. அப்போது இலங்கை அரசின் பொய்வேடம் கலையும்; சூழ்ச்சிச் சதித்திட்டம் வெளிச்சத்துக்கு வரும்; கொடூர முகம் அம்பலமாகும்.

அரசினதும் அதன் புலனாய்வுப் பிரிவினதும் இந்த மறைமுகச் சதித்திட்ட செயற்பாடு அமைதி வழியில் இணக்கத் தீர்வுகாண்பதற்கான சமாதான முயற்சிகளுக்கும், அதற்கு வாய்ப்பான சூழ்நிலையைத் தந்திருக்கும் யுத்த நிறுத்தத்துக்கும் பேராபத்தை விளைவிக்கக்கூடியது என்பதை அரசு கவனத்தில் கொள்வது நல்லது.

## வடமராட்சியில் 112 தற்காலிக வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச்20

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வெற்றிலைக்கேணி, இடைக்காடு மற்றும் விநாயகபுரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட 112 தற்காலிக வீடுகள் உரியவர்களிற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி, இடைக்காடு ஆகிய பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட 37 தற்காலிக வீடுகளும், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 20 தற்காலிக வீடுகளுமாக மொத்தம் 57 வீடுகள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

வெற்றிலைக்கேணி மக்கள் கூட்டமைப்புத் தலைவர் யோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அருட்திரு. நேசன் அடிகளார், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவன முகாமையாளர் கால்ட், வெற்றிலைக்கேணி கிராமசேவையாளர் சிவலிங்கம் ஆகியோர் சுடர்களை ஏற்றினர்.

தொடர்ந்து கடற்புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி சலீம், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா பாடசாலை அதிபர் இந்திரலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் சிவஞானம், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனத் திட்ட இணைப்பாளர் அருளானந்தம் ஆகியோர் வீடுகளுக்கான திறப்புக்களை உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

விநாயகபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகளும் அன்றையதினம் கையளிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்ட 25 தற்காலிக வீடுகளும், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட 30 தற்காலிக வீடுகளுமாக மொத்தம் 55 வீடுகள் இவ்வாறு கையளிக்கப்பட்டன.

வெற்றிலைக்கேணி மக்கள் கூட்டமைப்புத் தலைவர் யோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான செஞ்சேரன், தில்லையம்பலம் ஆகியோர் சுடர்களை ஏற்றினர்.

பங்குத்தந்தை நேசன் அடிகளாரின் சிறப்புரை இடம்பெற்றது. தொடர்ந்து சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனப் பிரதிநிதி நடா, கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாகச் செயலாளர் சுப்பிரமணியம் ஆகியோர் வீடுகளுக்கான திறப்புகளை உரியவர்களிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில், சுனாமிப் பேரலை அனர்த்தச் செயலணிக்குழுச் செயலகத்தின் இணைப்பாளர் சுடர்மணி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், சர்வதேச அகதிகள் நலனுக்கான கிறிஸ்தவ நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(த-204)

## தமிழ்த்தினப் போட்டியில் இம்முறை நாட்டுக்கூத்துக்கு முக்கியத்துவம்

வலி.தெற்கு.மார்ச்20

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இவ்வருடம் நடைபெறவுள்ள தமிழ் மொழித்தினப் போட்டிகளில், வடக்கு - கிழக்கு பாரம்பரிய கூத்துக்கலைகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் நாட்டுக்கூத்துப் போட்டிகள் தனித்துவமாக நடைபெறவுள்ளன என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார்.

சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கூடாகவும் பாடசாலை அதிபர்களுக்கு இதனை அவர் அறிவித்திருக்கிறார்.

நாட்டுக்கூத்துக்கள் - வடமோடிக் கூத்து, தென்மோடிக்கூத்து (ஆட்டக்கூத்து), சிந்துநடைக்கூத்து, இசைநாடகம், விசேட கூத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு போட்டிக்குமான விதிமுறைகள் அடங்கிய சுற்றுநிருபங்களும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(த-152)

## பெண்களுக்கான இலக்கியப் போட்டிகள்; வானதி வெளியீட்டகம் நடத்துகின்றது

யாழ்ப்பாணம், மார்ச்20

கப்டன் வானதியின் பதின்னான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் எழுத்தாக்கப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தமிழர் தாயகத்தில் உள்ள பெண் படைப்பாளிகளின் ஆற்றலை மேன்மேலும் வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் கவிதை, சிறுகதை, கட்டுரை, குறுநாவல் மற்றும் ஓவியப்போட்டிகள் என்பன நடத்தப்படவிருக்கின்றன.

படைப்புகள் அனைத்தும் தமிழர் தேசிய விடுதலை, சமூக விடுதலை என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டிருக்க வேண்டும்.

கவிதைப் போட்டியில் பங்கொள்பவர் மரபுக் கவிதைகளாயினும், புதுக்கவிதைகளாயினும் தட்டச்சுத் தாளில் 60 வரிகளுக்கு மேற்படாமலும் -

சிறுகதைகள், தட்டச்சுத்தாளில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் -

குறுநாவல்கள் 60 பக்கங்களுக்கு மேற்படாமலும் -

கட்டுரைகளாயின் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும். ஓவியங்கள் அனைத்தும் தட்டச்சுத் தாளில் மட்டும் வரையப்பட்டு அனுப்பப்பட வேண்டும் -

போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆக்கங்கள் அனைத்தும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 'இலக்கியப் போட்டி 2005, கப்டன் வானதி வெளியீட்டகம், இல. 61, கனகபுரம், கிளிநொச்சி' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-13)

### கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த

## குவேனியும் 2 போராளிகளும் கிளிநொச்சிக்குத் திரும்பினர்

கொழும்பு,மார்ச் 20

கொழும்பிலுள்ள அப்பலோ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகளும் நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி திரும்பினர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் கிளிநொச்சி திரும்பிய இவர்களுக்கு, ஓமந்தை வரை இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

கடந்த மாத இறுதியில் அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியில் ஒட்டோவில் பயணம் செய்துகொண்டிருந்தபோது தம்பட்டையில் இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுடப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, துணைப் பொறுப்பாளர் அகநிலா மற்றும் சசிமதி ஆகிய பெண் போராளிகள் படுகாயமடைந்தனர் என்பதும் -

அதையடுத்து சிகிச்சைக்காக அவர்கள் கொழும்புக்குக் கொண்டு விரையப் பட்டிருந்தனர் என்பதும் - தெரிந்தவையே.

(த)

### உதயாக்கு

நல்ல மனிதனை ஏன் பார்க்க முடிவதில்லை தெரியுமா? எல்லோரும் அந்த வேடத்தைப் போட்டுக் கொண்டிருப்பதால் தான்.

-ஹிலே.

### நாளை

*பங்குனி 08*
*திங்கட்கிழமை*
*21.03.2005*
*திதி : ஏகாதசி*
*முன் இரவு 10.16 வரை*
*நட்சத்திரம் : பூசம்*
*பிற்பகல் 5.03 வரை*
ஏகாதசி விரதம்
*சுபநேரம் : 12.17 - 01.47*
*ராகுகாலம் : 07.47 - 09.17*
*(யாவும் பழைய நேரப்படி)*

## மீன் வியாபாரிகளுக்கும்: நிவாரணம் கிடைக்குமாம்!

கரவெட்டி.மார்ச்20

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மீன்வியாபாரிகளுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நஷ்டஈடுகள் - இழப்பீடுகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றபோதிலும் தமக்கு எத்தகைய கொடுப்பனவுகள் - உதவிகளும் வழங்கப் படவில்லை என்று மீன்வியாபாரிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக அவர்கள் பல்வேறு தரப்பினரிடமும் தமது கவலையை - முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர். இதுதொடர்பான விரிவான செய்தி ஒன்று கடந்த 15 ஆம் திகதி உதயனிலும் வெளியாகியிருந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சூரியகுமார், பாதிக்கப்பட்ட மீன் வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்க கடற்றொழிலாளர் சங்கங்களும் சமாசமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

எனவே, பாதிப்புற்ற மீன்வியாபாரிகள் கடற்றொழில் சங்கங்களுடனும் சமாசத்துடனும் தொடர்புகொள்ளலாம் என்றார்.

(த-70)

## மின்மானிக்கும் இனிமேல் மாதாந்தக் கட்டணம் அறவீடு!

### முப்பது ரூபா கறப்பதற்கு யோசனை

கொழும்பு.மார்ச் 20

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கேற்ப மின்சாரக் கட்டணங்களையும் அதிகரிப்பது குறித்து ஆராய்ந்துவரும் மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சு மின்மானிகளுக்காக விசேட கட்டணமொன்றை அறவிடுவதற்கும் உத்தேசித்திருக்கிறது.

ஒவ்வொரு மின்மானிக்கும் மாதாந்தம் 30 ரூபா அறவிடப்படவேண்டுமென்ற யோசனையை மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது சமர்ப்பித்துள்ளார்.

இந்த் யோசனையை அமைச்சர்கள் சிலர் எதிர்த்துள்ளபோதிலும், இந்த விடயத்தில் ஜனாதிபதியின் ஆலோசனையைப் பெற்று அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மின்சாரக் கட்டணத்திற்குப் புறம்பாகவே இந்த மின்மானிக்கான கட்டணம் மாதாந்தம் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படவுள்ளது.

(த)

# UCMAS SRILANKA யூசிமாஸ்





யுனிவர்சல் கான்செப்ட் மென்டல் அரித்மெடிக் சிஸ்டம்

UCMAS SRILANKA

## அபாகஸ் பயிற்சி

*Corporate office*
**GENESIS ACADEMY LANKA PVT.LTD.**
A BOI Approved Co *National Franchisee For*
**UC MAS MENTAL ARITHMETIC SRILANKA**
*Corporate Office : # 50,2/3, II Floor, Colombo Plaza, Galle Road, Colombo - 6, Sri Lanka.*
*Tel :011 4527676*
*Email :enquiry@ucmaslanka.com*
*Website : www.ucmaslanka.com*
In collaboration with: Akademi Sempoa &Mental Aritmetik - U C MAS Sdn.Bhd.,Malaysia.

உலகில் முதல்முறையாக திரு.Dino wong ஆல் ஆரம்பிக்கப்பட்ட அபாகஸ் பயிற்சி UCMAS என்ற பெயரில் 1993 ஆம் ஆண்டு மலேசியாவில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் இது. இன்று உலகில் படிப்படியாக உயர்ந்து 15,00,000 இலட்சத்திற்கும் மேலான சிறுவர், சிறுமியர்களுக்கு அபாகஸ் பயிற்சி அளித்து நம்பர் (1) இடத்தைப் பெற்றுள்ளது.
இன்று UCMAS நிறுவனம் முதல் நிறுவனமாக ISO 9001:2000 Quality Management Systems Certificate By BM Trade (U.K.) சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும்.
அதுமட்டுமல்லாமல் UCMAS சீனாவில் இயங்கி வரும் ஜுசாவான் அசோசியேசனின் கூட்டமைப்புப் பெற்றது.
UCMAS நிறுவனம் மலேசியா மற்றும் Indonesia வில் கல்வி அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு பள்ளி கல்வியின் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்ட ஒரே நிறுவனம் UCMAS திட்டம் மட்டுமே உலகின் இரண்டு பெரிய மனக்கணித மற்றும் அபாகஸ் நிறுவனங்களாகிய சைனீஸ் யூடிலிட்டி அபாகஸ் ரிசர்ச் சொசைட்டி (தைவான்) (Chinese Utility Abacus Research Society Taiwan) மற்றும் தைவான் மனக்கணித அசோசியேசன் (Taiwan mental arithmetic Association, Taiwan) அங்கீகாரம் பெற்றது.

UCMAS only organization seleeted by the Ministry of Education, Malaysia to train Government Teachers Training College teachers in order to successfully implement in School in the year 2000 as school Curriculum in Malaysia.
Collaboration with Akademi Sempoa & Mental Arithmetic UCMAS Sda Bhd Malaysia & Zhusuan Association, China.
Member- The world Association for the Education of Younger Children USA (NAEYC)
Member- WAMMA (World Abacus Association of Mental Arithmetic,China)
I n Corporation - China Board Calculation Association,China.
The curriculam is planned and designed according to the International standard equipment to the Association of Chinese Zhusuan,China.
The syllabus is guided by PPK Malaysia (Curriculam Department, Ministry of Education, Malaysia) and BPG,Malaysia (Teacher Training Department, Ministry of Education, Malaysia)

**UCMAS Know how is guided by professors of China.**
**UCMAS 5-13 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு**

### UCMAS பயிற்சி மூலம் ஏற்படும் நன்மைகள்

| | | | |
|---|---|---|---|
| ஒரு முகப்படுத்தப்பட்ட சிந்தனை | (Concentration) | தெளிவாகப் புரிந்துகொள்ளல் | (Understanding) |
| புகைப்பட நினைவாற்றல் | (Photographic Memory) | துல்லியமும், வேகமும் | (Accuracy & Speed) |
| தெரிந்துகொள்ளல் | (Comprehension) | படைக்கும் திறன் | (Creativity) |
| தற்சார்பு நிலை | (Self Reliance) | தன்னம்பிக்கை | (Selfconfidence) |
| கவனித்தல் | (Listening Skills) | | |

யூசிமாஸ் பயிற்சிபெற்ற சிறுவர், சிறுமியர் கணிதத்தில் மட்டுமல்லாமல் எல்லாப் பாடத்திலும் முதன்மையாக விளங்குகிறார்கள்.
UCMAS சிறுவயதிலேயே குழந்தைகளின் மூளையின் முழுத்திறன் வளர்ச்சிக்கான பயிற்சியை அளிக்கிறது.
UCMAS இலங்கையில் BOI அங்கீகாரம்பெற்ற ஒரே நிறுவனம்
UCMAS உங்கள் குழந்தையினுள்ளே புதைந்து கிடக்கும் அறிவாற்றலைக் கண்டுகொள்ள UCMAS நிறுவனத்தின் தலைமை அலுவலகம் வருடத்திற்கு ஒருமுறை அகில உலக அபாகஸ் போட்டி மற்றும் கிரேடிங் (Grading Examination) நடத்துவதால் அபாகஸ் பயிற்சியின் தரம் சிறந்து விளங்க வழிவகுக்கிறது. அத்துடன். குழந்தைகளிடம் தன்னம்பிக்கை மற்றும் எதையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தையும் அளிக்கிறது.
உலகெங்கும் பரவியிருக்கும் UCMAS இன் அபாகஸ் பயிற்சி இலங்கையில் Genesis Academy Lanka Pvt. Ltd கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
20 வயதிற்கும் மேற்பட்ட அபாகஸ் பயிற்சி நிறுவனங்களில் முதல் இடம் வகிக்கிறது UCMAS
உலகில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் அபாகஸ் பயிற்சி முறையை அறிமுகப்படுத்தியுள்ளது UCMAS. இன்றே உங்கள் குழந்தைகளையும் UCMAS பயிற்சித் திட்டத்தில் இணைத்து முழுப்பயனையும் பெறுங்கள்.

**இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் கீழ்வரும் முகவரிகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.**

தொடர்புகளுக்கு:

**ஞானக்குழந்தை கல்விக்கழகம்**
சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**S.கெங்கேஸ்வரன்**
சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய். 0777797136, 0777794606

**அபாகஸ் என்றால் UCMAS**
**UCMAS என்றால் ABACUS**

**R & B UCMAS**
**Mental Arithmetic Academy**
*Mobile No:* 0773 164 399 *E.mail:* rbucmasjf@sltnet.lk.

**அபாகஸ் பயிற்சி என்ற பெயரில் போலி நிறுவனங்களை நம்பி ஏமாறாதீர்கள்**
**அங்கீகாரம் உள்ளதா என்று அறிந்து செயற்படுங்கள்**

(C/41600) (50-11-14-13)

# கலையும், கல்வியும் ஒருங்கே கைகூடிய கல்வியியலாளன் பேராசிரியர் மௌனகுரு



**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நினைவாக வருடம்தோறும் வழங்கப்படும் சம்பந்தன் விருது கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி.மௌனகுருவின் 'அரங்கியல்' என்னும் ஆய்வு நூலுக்காக வழங்கப்படுகிறது. யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று நடைபெறும் விழாவில் இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.**

**கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி தமிழர்களுக்கே உரிய தனித்துவமான கலை வடிவமான கூத்தினை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருவபவர் பேராசிரியர் சி.மௌனகுரு. கூத்தினை பழமை பேணியும் அதே வேளை நவீனப்போக்குகளுக்கு ஏற்ப வடிவமைப்பதிலும் அவற்றில் தானும் பங்குகொண்டு பாரப்போரை பரவசப்படுத்துவதிலும் ஆளுமை மிக்கவர் பேராசிரியர் மௌனகுரு.**

**இந்தக் கட்டுரையில் பேராசிரியர் மௌனகுருவின் பல்வகைப்பட்ட திறமைகள் குறித்து விவரிக்கிறார் அவரது ஆசிரியரும், முதுநிலைப் பேராசிரியருமான அ.சண்முகதாஸ்.**

**1955** ஆம் ஆண்டு மட்டக்களப்பு வந்தாறு மூலை அரசினர் மத்திய கல்லூரியில் ஒன்பதாம் தரத்திலே படித்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஆண்டு ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பெற்றவர்களாக எங்கள் கல்லூரிக்கு வந்தவர்களுள் மௌனகுருவும் ஒருவர். குழந்தை முகம், ஆனால படிப்பென்று தொடங்கினால் என்னைப் போல அவரும் நித்திரை தூங்கத் தொடங்கிவிடுவார் பின்னர்....

1959ஆம் ஆண்டு பேராதனையில் அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி அரங்கிலே "அருச்சுனன் தபசு" வடமோடிக் கூத்திலே சிவவேடனாக மௌனகுரு ஆடிய காட்சி கண்டு பரவசப்பட்டேன். பின்னர்.....

1961 ஆம் ஆண்டு மௌனகுருவும் என்னுடைய துணைவியார் மனோன்மணியும் மாணவர்களாக இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு வந்தனர். இருவரும் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றனர். என்னுடைய மாணவர்களுமாயினர்.

பல்கலைக்கழகத்துக்கு வருவதற்கு முன்னரே மௌனகுரு அறியப்பட்ட ஒருவராகிவிட்டார். கூத்து அவரைப் பலருக்கும் அறிமுகப்படுத்தியது. மட்டக்களப்பு அமிர்தகழியில், கா.சி.ஆனந்தன் போன்ற இளைஞர்களுடன் மௌனகுருவும் தங்கள் கைகளைக் கீறி இரத்தம் எடுத்துத் தமிழுக்காகத் திலகமிட்டவர்கள். இவர்களுடைய படங்களெல்லாம் அன்றைய பத்திரிகைகளிலே வெளிவந்தன.

பல்கலைக்கழகத்திலே மாணவனாக மௌனகுரு வந்து சேர்ந்தவுடனே பேராசிரியர் வித்தியானந்தன் பல்கலைக்கழக மாணவரைக் கொண்டு ஒரு வடமோடிக் கூத்தினை மேடையேற்ற விரும்பினார். மௌனகுரு "கர்ணன் போர்" கூத்துப் பிரதிகளையும் வில்லிபாரதத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு கூத்து நாடகப் பிரதியை உருவாக்கினார். அவர் அக்கூத்திலே கர்ணனாக நடித்து ஆடினார். நான் கண்ணனாக வேடமிட்டேன். மௌனகுருவைப் போல் நளினமாகவும், அழகாகவும், பாத்திரத்தினுடைய குணநலனுக்கேற்றதாகவும், தாளத்துக்கு இம்மியும் பிசகாமல் ஆடுபவர் எவரையும் நான் காணவில்லை. மேடையிலே இருவரும் தோன்றிய சந்தர்ப்பத்திலே அவருடைய கம்பீரமான கலைமலிந்த ஆட்டத்தைக்கண்டு நான் என் தொழில் மறந்ததுண்டு.

பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் வித்தியானந்தனுக்கு உதவியாக "கர்ணன் போர்", "நொண்டி நாடகம்", "இராவணேசன்", "வாலிவதை" என்னும் நாடகங்களின் பிரதிகளைத் தயாரித்ததுடன், முதல் மூன்று கூத்துக்களிலும் முதன்மைப் பாத்திரமேற்று ஆடியவர். கவித்துவம் இயல்பாக உள்ளதால், மௌனகுருவின் கூத்துப் பிரதிகள் மிகச் சிறப்பாக அமைந்தன.

மௌனகுரு பட்டதாரியாகிய பின்னர் "சங்காரம்" என்றொரு கூத்தினைத் தயாரித்து மேடையேற்றினார். இது ஈழத்துத் தமிழ்க் கூத்து வரலாற்றிலே ஒரு புதிய போக்கினை உருவாக்கியது. வழக்கமாக இதிகாச புராணக்கதைகளையே கூத்துக் கதைகளாகக்கொள்வர். ஆனால், மௌனகுரு இயல்பாக சமூகத்திலே தலைதூக்கக் கூடிய சாதி, வர்க்கம் போன்ற சிக்கல்களுக்கு உருவம் கொடுத்து வடமோடி தென்மோடிக்குரிய பாடல், ஆடல், அரங்கு முதலியனவற்றைப் பயன்படுத்திப் புதிய பாணியிலே கூத்தினை அரங்கேற்றினார்.

கலையிலே பரிசோதனைகள் செய்ய வேண்டுமென்பது மௌனகுருவின் விருப்பமான எண்ணமாகும். ஒரு தடவை, கார்த்திகா கணேசர், பணிபரத் ஆகியோருடன் இணைந்து கூத்து ஆடல், பரத நாட்டியம், கண்டிய நடனம் ஆகியனவற்றை இணைத்து ஒரு நிகழ்ச்சி மௌனகுருவாலே அளிக்கை செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்திலே மௌனகுரு கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிலே ஈடுபட்ட காலத்தில் தார்சீசியஸ், ஜெனம் போன்ற கலைஞர்களுக்கு வடமோடிக் கூத்தின் ஆட்டங்களைப் பழக்கினார். யாழ்ப்பாணத்திலே மேடையேறிய பல நாடகங்களிலே தேவைக் கேற்றதாகவும் பொருத்தமாகவும் வடமோடிக் கூத்து ஆடல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மௌனகுரு இதற்குக் காரணமாக இருந்தார்.

மௌனகுரு காமஞ் செப்பாது கண்டது மொழியும் தன்மையுடையவர். கூத்திலே வில்லிலே அம்பு பூட்டிவிடும் அதே பாணியிலே நூல் விமர்சனங்களையும் செய்வார். தப்பாது சிலவேளைகளில் தைக்கும். பல நூல் விமாசனக் கூட்டங்களிலே நான் இதனை அவதானித்திருக்கிறேன். இவ்விமர்சனக் கணைகளைத் தாங்க முடியாதவர்கள் இவரைச் சில நூல்விமாசனக் கூட்டங்களுக்குத் தவிர்ப்பது உண்டு.

யாழ்ப்பாணத்திலே நீண்ட காலம் பணிபுரிந்த மௌனகுருவும், அவரது துணைவியார் சித்திரலேகாவும் கிழக்குப் பல்கலைக்கழகம் தொடங்கியபொழுது தங்கள் பிரதேசத்துக்குப் பணிபுரியக் கூடிய வாய்ப்பினை எண்ணி அங்கு சென்றனர். கலை, இலக்கியப் பண்பாடு தொடர்பாக மௌனகுரு திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தனக்குத் தெரிந்த வித்தைகளெல்லாவற்றையும் இளைய தலைமுறையினருக்குக் கையளித்து வருகின்றார். பண்பாட்டு நடைமுறைகள் எச்சங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதிலே அயராது பணிபுரிகின்றார். அதேவேளையில், கையில் இருக்கும் கலைமுதுசத்தை நவீன உலக நடைமுறைகளுக்கு ஏற்ப எப்படி அறிக்கை செய்யலாம் என்பது தொடர்பாக இளைய சமூகத்தினருக்கு வழிகாட்டியாக இருக்கின்றார். கிழக்குப் பல்கலைக்கழகம் இவருடைய கலைத் தொண்டாலே பெருமையுறும். கிழக்கிலங்கை மக்கள் இவருக்கு நன்றியுடையவர்களாக இருப்பர்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
முதுநிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தன்னுடைய அயராத உழைப்பினாலேயே முதுகலைமாணிப் பட்டம், கலாநிதிப் பட்டம் ஆகியனவற்றைப் பெற்ற மௌனகுரு பேராசிரியராக இன்று பணியாற்றுகிறார். *அவரைக் காலம் பல தடவை வஞ்சித்துள்ளது. துன்பத்தையும் துயரத்தையும் அமைதியாகத் தாங்கிக்கொள்ளும் மௌனகுருவின் மனத்துக்குள்ளே ஓர் அசுரத் தனமான முயற்சியாற்றல் உண்டு. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என அது பணியாற்றும். விதியையும் வெல்லவல்ல முயற்சி அது. மௌனகுருவின் உயர்ச்சிக்கு அதுதான் காரணம்.* ✣

# தமிழர் பெருமையைப் பேணிப் பாதுகாக்க இணுவிலில் ஓர் அரும்பொருள் காட்சியகம்

"**நா**வலர் போற்றிடும் நல்லிணுவைத் திருவூர்"

ஏழிசை வாழ்ந்திடும் இணுவையம்பதி'

என இயலிசை வாரிதி மகா வித்துவான் அமரர் ந.வீரமணி ஐயர் அவர்கள் மனமாரப் பாடிய திருவூர் இது. பண்டு தொட்டுப் பல சீரும் மேவியது. இங்கு உறையும் தெய்வங்களின் திருவருள் பொலிந்தது.

இயற்கை அன்னை அரவணைக்க, எழில் பொங்க கலைமகளும், திருமகளும் கொலுவிருக்கின்றனர். இதன் பயனாக அருட் செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம் ஆகியன நிறைந்துள்ளன.

முத்தமிழ் வித்தகர்களும் பெருகியுள்ளனர். பெருஞ்சித்தர் பெரிய சந்நியாசியாரின் (சுப்பிரமணியம்) வழி வந்த சமயத் தொண்டும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வழி வந்த சைவமும் தமிழும் மேலோங்கியுள்ளன.

நாவலர் பெருமானின் தூண்டுதலில் இணுவிலில் சைவப்பிரகாச வித்தியாசாலை முதன் முதலில் உதயமாவதற்கு ஆரம்பகாலத்தில் இருந்த திண்ணைப் பள்ளிகள் உதவின.

இணுவையின் வடபால் சேர் பொன். இராமநாதன அவர்களின் சொந்த முயற்சியால் மருதனார் மடம் குறிச்சியில் பெண்கள் பாடசாலை தோன்றியது. இசை மரபு பேணி கல்விக் கூடத்துக்கு அருகே இசை நடனக்கல்லூரியும் உதயமானது.

இணுவில் கிழக்கில் நூறு வருடங்களுக்கு முன் அமெரிக்க மிஷனறிச் சமூகத்தினால் கிறிஸ்தவ ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டது. இணுவில் மேற்கில் சைவமகாஜன வித்தியாசாலையும் ஆரம்பமானது. காலப்போக்கில் சகல பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்ற போது அமெரிக்க மிஷன் பாடசாலை இணுவில் மத்திய கல்லூரியின் (சைவமகாஜன வித்தியாசாலை) ஆரம்பப் பிரிவாக மாறியது.

காலப்போக்கில் ஆங்காங்கே அச்சு இயந்திரங்கள் தோன்றின. உள்ளூரிலும் வெளியூர்களிலிருந்தும் பற்பல நூல்கள் வெளிவந்தன. மக்களும் நூல்களை விரும்பிக் கற்றனர். பல நூலகங்கள் தோன்றின.

## இன்று திறந்து வைக்கப்படுகிறது

இவ்வாறான நூல்களின் பாவனையால் யாழ். மக்களின் கல்வியறிவு நன்கு பிரகாசித்தது. யாழ். நகரில் ஏறக்குறை ஒரு லட்சம் நூல்களைத் தன்னகத்தே கொண்ட பொது நூலகமொன்று யாழ்.மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

யாழ்மக்கள் இலங்கை வாழ் மக்களிற் சிறந்த கல்வித்தரத்தை அடைந்திருந்தனர். இதனைக் கண்டு மனம் பொறுக்காத பேரினவாதிகளின் சதியினால் யாழ்.நூலகத்தை தீயிட்டு அழித்தனர். மக்கள் பெரும் வேதனை அடைந்தனர். அந் நூல் நிலையம் நெடுங்காலத்தின் பின் வெளிநாடுகளைச் சேர்ந்த பலரது அனுதாப அலை வீசியதால் மெல்ல மெல்லப் புனர்வாழ்வு பெற்று இன்று இயல்பு நிலைக்கு வந்துள்ளது.

ஆரம்பத்தில் இணுவில் கிராம மக்கள் கல்வியின் பேரில் பணநெருக்கடி காரணமாக மேலதிக நூல்களை எடுத்துப்படிக்க முடியவில்லை. சிறப்படைந்த ஊர்களின் மாணவர்களுக்கு இணையாக தமக்குப் போதிய நூல் வசதி இல்லாத நிலையை எவரும் சிந்திக்கத் தவறுவதில்லை.

இணுவையூர் மக்கள் லண்டன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் இணுவை மக்களுக்கான ஒன்றியத்தை அமைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் இணுவில் கிராமத்தின் மத்தியில் ஒரு சிறந்த நூலகத்தை அமைக்க முன் வந்தனர்.

'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுகன் அவர்களை லண்டன் வாழ் இணுவையூர் மைந்தர்களை நேரிற் கண்டு, ஆர்வத்தை அறிந்து இணுவிலில் நூலகம் அமைக்கும் பொறுப்பை அவருக்கு வழங்கினர்.

முத்தமிழ்ச் சங்கத் தலைவனாக அமர்ந்தும், ஒளவைப் பிராட்டிக்குச் சுடச்சுட நாவற்பழம் நல்கியும், நற்றமிழ் கேட்டு மகிழ்ந்த முருகன் - இணுவைக் கந்தன் - தனது காலடியில் நூலகம் அமைத்து,

நூல்கள் பல நயக்கும் பாங்கில் திருவிளையாடல் புரியப் புகுந்த தெய்வீகப் பிரதேசம் எனலாம். இணுவையூரில் இணைந்த இரு குளங்கள் இருந்தன. இக்குளத்தைச் சூழவுள்ள இடத்தில் கனிதரும் தருக்களும் மூங்கில், கரும்பு, தென்னை, பனை போன்ற மரங்களும் ஓங்கி வளர்ந்து சோலையாகக் காட்சியளித்தன.

தெய்வீகச் சூழலும், நில வளமும், நீர் வளமும் பொங்கும் இந் நூலகக் காணியில் இக் கூட்டம் அமைந்தது. எமது பெரும்பேறாகும். இக்கட்டுமானப் பணிக்கெனச் சிறந்த பெரியார்களைக் கொண்ட சபையொன்று உருவானது. இச்சபையினரின் சேவை சிறப்பானது.

இம்மண்டபமானது தன்னகத்தே நூலகத்தையும் நம் முன்னோரது பாவனையிலுள்ள (எதிர் காலத்தில் இவை பாவனையிலிருந்து அருகிச் செல்லும்) பொருள்ளைக் கொண்ட அருங்காட்சியத்தையும் உள்ளடக்கியது.

இங்கு வாழ்ந்த பல பெரியார்கள் தமது அறிவு விருத்திக்காக அரும்பாடுபட்டுத் தேடிய நூல்கள் பலவற்றையும் பாதுகாத்து வைத்திருந்தனர்.

இவற்றுள் செந்தமிழ் இலக்கணம், இலக்கியம், புராண வசனங்கள், சைவசித்தாந்தம், சோதிடம், சங்கீதம், நடனம், வரலாற்று ஆய்வுகள் போன்றன முக்கியமான தேடற்கரிய நூல்களும அடங்கும்.

**மூ.சிவலிங்கம்**

எம்மணில் நடமாடும் நூலகங்களாக அறிவின் மிக்கோர் உலாவருவது மிகச்சிறப்பானது.

நூல்களிலிருந்து அறிவதை விட நடமாடும் கற்றோரின் உரையாடலில் அநேக பொருள் பொதிந்திருக்கும். இச்சிறப்பு இணுவிலில் தாரளமாக இருப்பது திருவருளாகும்.

மேற்குறிப்பிட்ட நூல்கள் மற்றும் தேடி எடுக்கப்பட்ட அரும் பொருள்கள் இந்த மண்டபத்தை அலங்கரிப்பது எமது போறாகும். ★



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தேசிய நிலையில் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலைப்பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதலாவது இடத்தையும், தேசியரீதியில் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்ட யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் குமாரவடிவேல் குருபரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து தங்கப் பதக்கமும் சான்றிதழும் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (எ)

ஜி.சீ.ஈ. உயர்தரப பரீட்சையில் தேசிய நிலையில் அதிசிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில், புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி கலைப் பிரிவு மாணவி செல்வி மயில் வாகனம் வதன கீர்த்தனா (மாவட்ட நிலை 02 தேசியநிலை 07) ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து தங்கப் பதக்கம், சான்றிதழ் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (எ)



## உடுவில் கிழக்கில் திருத்தப்படாத வீதி

வலி.தெற்கு,மார்ச்20

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோயிலடியில் இருந்து உடுவில் லவ் லேன் வீதியைத் தொடுக்கும் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையான வீதி புனரமைக்கப்படாமையால் பயணிகள் பலரும் இடர்களை எதிர் நோக்குகின்றனர்.

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி ஒரு முனையில் இருந்தும், லவ் லேன் பகுதியின் மற்றொரு முனையில் இருந்தும் வீதிகள் புனரமைக்கப்பட்டுத் தார் ஊற்றப்பட்டுப் பலகாலம் கழிந்த நிலையிலும் இடையிலுள்ள எஞ்சிய ஒரு பகுதி புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இடைப்பட்ட பகுதியின் புனரமைப்புப் பணிகளுக்காகக் கற்கள் பறிக்கப்பட்டுள்ளபோதிலும் நீண்ட பல நாள்களாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வீதி திருத்தப்படாமல் கற்கள் மட்டும் பறிக்கப்பட்டிருப்பதால் வாகனங்கள் பயணிப்பது கடினமாகவுள்ளது.

இரவு வேளைகளில் இவ்வீதி வழியால் செல்பவர்கள் வீதியில் காணப்படும் பள்ளங்கள் மீதும் கற்குவியல்கள் மீதும் இடறுப்பட்டு விழுந்தெழும்பவேண்டி ஏற்படுகிறது.

உடுவிலில் இருந்து இணுவில், தாவடிப் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய குறுகிய தூர வீதியாக இது காணப்படுவதால் பொதுமக்களின் போக்குவரத்து இவ்வீதியில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன், உடுவில், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் இவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, புனரமைப்புச் செய்யப்படாது எஞ்சியுள்ள பகுதியை விரைவில் புனரமைப்புச் செய்து, போக்குவரத்துக்கு வசதிசெய்து தருமாறு இப்பகுதி மக்கள் வலிகாமம் தெற்குப் பிரதேச் சபைச் செயலரிடம் கோரியுள்ளனர். (த-152)

## ஸ்கந்தாவில் மீண்டும் மாணவர் விடுதி

வலி.தெற்கு,மார்ச்20

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் முன்னர் இயங்கிய மாணவர் விடுதி மீண்டும் இயங்கவுள்ளது எனக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தெரிவித்தார்.

ஆறாம் ஆண்டு தொடக்கம் ஜி.சீ.ஈ. உயர் தர வகுப்புகள் வரை கல்லூரியில் பயிலும் மாணவர்கள் இவ்விடுதியில் தங்கியிருந்து கல்வியைத் தொடரமுடியும்.

விரைவில் ஆரம்பமாகவுள்ள கல்லூரி விடுதியில் தங்கிக் கல்வி கற்கவிரும்பும் யாழ். குடாநாட்டு மாணவர்களையும் வெளி இடங்களிலுள்ள மாணவர்களையும் அதிபருடன் உடனடியாகத் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்கிவந்த ஸ்கந்தா விடுதி, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் செயலிழந்துபோனது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் பலகாலமாக இவ்விடுதியில் தங்கியிருந்தனர். தொடர்ந்து இடம்பெற்ற மக்கள் இடப்பெயர்வு காரணமாக விடுதிப் பாவனை முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது ஸ்கந்தாவின் பழைய மாணவர் சங்கம், மாணவர் விடுதியை மீண்டும் ஆரம்பிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பல லட்சம் ரூபா செலவில் மாணவர் விடுதிக்கான புதிய கட்டடங்கள் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (த-152)

## காரைநகர் மயானத்தைப் புனரமைக்கக் கோரிக்கை

காரைநகர்,மார்ச்21

காரைநகர், சாம்பலோடை இந்துமயானம் மற்றும் அந்தியேட்டி மடம் என்பனவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காரைநகரில் உள்ள பொது அமைப்புகள் காரைநகர் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்துமயானம், அந்தியேட்டி மடம் மற்றும் மயானத்திற்குச் செல்லும் பாதை என்பன நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன.

இதனால், இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். எனவே, இதனைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (த-73)


### அச்சு இயந்திரங்கள் விற்பனை

அச்சு இயந்திரங்கள் அதி உயர் பாவனைத் தரத்தில் விற்பனைக்குண்டு. பார்வையிட விரும்புவோர் எந்தநேரத்திலும் இவ்வியந்திரங்கள் செயற்படும்போது அச்சகத்திற்கு நேரில் வரலாம்.

- Heidel berg - SORDZ. D.Z.
- SOLNA 425 Model 70 Four Colour
- Hydel berg 5 BD cylinder

தொடர்புகொள்க:
SHEPHERD - 0773060944
Sai - 0777484192


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

அன்னை நாகா பூட்சிற்றியின் 2ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஹேமாஸ் பார்மஸியூட்டிக்கல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் இலவச நீரிழிவுப் பரிசோதனையும் சிகிச்சையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ். சத்திரத்துச்சந்திக்கு அருகிலுள்ள அன்னை நாகா பூட்சிற்றியில் இடம்பெறும். (த-203)

### கண்ணீர் அஞ்சலி

ஸ்கந்தாவின் மைந்தன் அமரர் **ஜெகசோதி துஷ்யந்தன்**

ஸ்கந்தாவின் வெற்றிக்கு வித்தாகி,
வீரர்களின் போருக்கு அணித் தலைவராகி,
உதைபந்தாட்டம், கரபந்தாட்டத்தில் உன்னத வீரராய்த் திகழ்ந்த
**அமரர் ஜெகசோதி துஷ்யந்தனின்** மறைவு கேட்டு
ஆழ்ந்த துயருற்றோம். எம் கல்விச் சமூகம், அவரை இழந்து வாடும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.** (43295) (24-14)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

### கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபை அங்கத்தவரும்
எமது சபையின் மூத்த உறுப்பினருமான
**சரவணமுத்து கந்தையா** (செல்வராசா)

*அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருப்பாதங்களில் சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திப்போமாக.*

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலன சபையினர்.

(43301) (24-14)

### மரண அறிவித்தல்

**கார்த்திகேசு தம்பிப்பிள்ளை**



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு தம்பிப்பிள்ளை 17.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் சிவராசா (கனடா), இராசமணி (கனடா), மகேஸ்வரி, நாகேஸ்வரி (நவல்ட் பாடசாலை ஆசிரியர்), இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா (கனடா), கந்தசாமி, வீரசிங்கம், செல்வராசா (கனடா), நவராசா(கனடா), காலஞ்சென்ற சுதன் (கனடா), கமலராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*
(43282)(22-14-24)

தகவல்:
மு.வீரசிங்கம்
(மருமகன்).


## VACANCY - ACCOUNTS CLERK

Ideal candidates should have full qualification in the relevant field more than two years.

Experience and Computer Literacy is essential.

Please Forward your CV to reach on or before 31st March 2005 to the following Address.

**Principal,**
**Nuffield School for the Deaf and the Blind,**
**Kaitadi.**

(C/41588)(26)

## ஆய்வுகூட பயிலுநர் தேவை

முன்னணிப் பரிசோதனைக் கூடமொன்றில்
கடமையாற்ற பயிலுநர் தேவை.


தகுதி: **க.பொ.த. உயர்தரம் (விஞ்ஞானம்)**
கொழும்பில் அல்லது கண்டியில் சம்பளத்துடன்
கூடிய பயிற்சி வழங்கப்படும். (3 மாதங்கள்)
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

இடம்:
**டேடன்ஸ் சம்பந்தர் ஆய்வுகூட சேவை**
(யாழ். இலங்கை வங்கிக்கு அருகில்)
**574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
நேரம்: நண்பகல் 12 மணி - ஒரு மணி, 20-03-2005 ஞாயிறு

(43300) (24-14)


### 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 - 07 - 1933



உதிர்வு
26 - 03 - 1999

திருமதி **வேலாயுதர் அன்னலட்சுமி**
திதி: 20-03-2005

எங்கள் குலவிளக்கே பாசமிகு அன்னையே
மறைந்து ஆறு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு என்றும் எம் மனதைவிட்டகலாது
உங்கள் ஆத்மசாந்திக்காக நாம் என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"பிருந்தாவனம்"*
*கைதடி வடக்கு,*
*கைதடி.* (43308) (24-14)

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை
யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

### புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 5மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

### Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத தணனிப் பயிற்சி.

March 31ம் இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 18/03/2005
Batch II - 19/03/2005
Batch III - 26/03/2005
Batch IV - 02/04/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647

# சோஷலிசம் தடம்புரளத் தொடங்கிய கையோடு பிரிந்து செல்லும் உரிமையும் பலியிடப்பட்டது



மு.திருநாவுக்கரசு

**ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.**

**எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.**

**இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.**

**அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -**

**சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.**

**அதன் நான்காவது பகுதியை இங்கு வாசியுங்கள்**

1922ஆம் ஆண்டு மேற்படி இரு தலைவர்களின் தலைமையில் ஐரிஸ் அரசு தென் அயர்லாந்தில் அமைக்கப்பட்டது. ஆனால், D.வலெரா தலைமையில் ஐரிஸ் உள்நாட்டு யுத்தம் அதே ஆண்டு ஆரம்பமாகி 1923ஆம் ஆண்டுவரை நீடித்தது. இது ஐரிஸ்காரருக்கு எதிரான ஐரிஸ்காரரின் யுத்தம், கிறபித் 1922 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இயற்கை மரண மெய்தினார். அதே மாத இறுதிப்பகுதியில் கொலின்ஸ் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். ஆனால், வட அயர்லாந்தைப் ,பிரிட்டனுடன் இணைத்ததான அந்தப் பிழையான ஒப்பந்தம் இன்றுவரை தோற்கடிக்கப்பட முடியாததாகவே உள்ளது. தென் அயர்லாந்திலிருந்து வட அயர்லாந்து வெட்டிப்பிரிக்கப்பட்டதுடன் வட அயர்லாந்து தனது வீரியத்தை இழந்தது. மொத்தத்தில் ஐரிஸ் போராட்டமே வீரியத்தை இழந்தது. சூழ்ச்சியும், நயவஞ்சகமும், தந்திரமும் இதில் அரை வெற்றியீட்டின. அதாவது, பிரிந்துசெல்லும் உரிமையைத் தவிர்க்க முடியாதவாறு ஏற்றுக்கொள்ளவேண்டிய சர்வதேச சூழலே அப்போது நிலவியது. ஆனால், அச்சூழலைக் கையாண்டவிதத்தில் பிரிட்டிஷ் தலைமை உள்ளதற்குள் சாதகத்தைத் தேடிக்கொண்டது. அதேவேளை, ஐரிஸ் தலைமையோ அந்த ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டதன் மூலம் என்றும் மீளமுடியாத ஒரு வரலாற்றுத் தவறை இழைத்துவிட்டது.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் இப்போதும் காலனித்துவ அடிமை நாடுகளாகவே இருந்தன. இங்கு இன, மத முரண்பாடுகள் இருந்த போதிலும் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை என்பதைப் பற்றிய இந்நிலை பெரிதாகத் தோன்றவில்லை. 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர் தமது நலனின் பொருட்டு பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்துவிட்டனர். இதனை அண்டிய காலத்தில் இந்தியாவில் இந்து, முஸ்லிம் முரண்பாட்டின் நிமித்தம் பிரிந்துசெல்லும் உரிமைக் கோட்பாடு கூர்மையடையத் தொடங்கியது.

முஸ்லிம்களைச் சமதையாக நடத்த மறுத்ததும் அவர்களை ஒடுக்க முற்பட்டதுமான பிராமணிய ஆதிக்கந்தான் பாகிஸ்தான் பிரிந்து செல்லவேண்டியதற்கான அடித்தளத்தை இட்டது. முஸ்லிம்களை வரலாற்று எதிரிகளாகவும் பகைவர்களாகவும் பார்த்த இந்து மனப்பாங்கு அவர்களுக்குப் பிரிந்து செல்வதைத் தவிர வேறு மாற்றுவழிகளை விட்டுவைக்கவில்லை.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரிப்பது மேற்குலகின் நலன்களுக்கு உகந்ததென பிரித்தானியா கருதியதாலும், இது விடயத்தில் தீர்க்கமான பாத்திரம் வகிக்கத்தக்க விதத்தில் இந்தியாவின் ஆட்சிப்பீடத்தில் பிரித்தானியா இருந்தமையாலும் இந்தியாவிலிருந்து இரு முனைகளில் (கிழக்கு, மேற்கு) பாகிஸ்தான் பிரிவது விரைவில் சாத்தியமானது. ஆனால், மிகவும் துயரகரமான இரத்தக் களரியோடுதான் இது அரங்கேறவும் நேர்ந்தது. காலனித்துவ ஆதிக்கத்திற்கெதிராக விடுதலைக்காகப் போராடிய இந்திய தேசம் பிரிந்து செல்லும் உரிமையைச் சுமுகமான முறையில் நிறைவேற்றத் தவறியமை ஒரு வரலாற்றுத் துயரந்தான்.

பாகிஸ்தான் பிரிந்துசெல்வதை விரைவுபடுத்தியதில் சர்வதேச சூழலிற்கு, குறிப்பாக பிரித்தானியாவின் பாத்திரத்திற்கு ஒரு முக்கிய பங்குண்டு.

### பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை சோஷலிச சித்தாந்தத்தின் பிரசவமே

பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமையை முதலில் மாக்ஸும் பின்பு அதி சிறப்பாக லெனினும் முதன்மைப்படுத்தினர். இந்த வகையில் பிரிந்துசெல்லும் சுயநிர்ணய உரிமை என்பது அதிகம் சோஷலிச சித்தாந்தத்தின் பிரசவந்தான். ஆனால், சோஷலிசத்தின் தாயகமெனப்படும் ரஷ்யாவில் லெனினின் பின்பு சோஷலிசம் தடம் புரளத்தொடங்கியதோடு, பிரிந்து செல்வதற்கான உரிமையும் பலியிடப்படலாயிற்று.

லெனின் காலத்திற் பிரிந்துசென்ற அரசுகளுக்குப் புறம்பாக, மாறாக இரண்டாம் உலக மகாயுத்த காலத்திலும் பின்பும் ரஷ்ய சாம்ராச்சியத்தின் அண்டை அரசுகள் பலாத்காரமாய் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டதுடன், உள்நாட்டிலும்தேசிய இனங்கள் விழுங்கி ஏப்பமிடப்பட்டன.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது அப்பட்டமான ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றிவந்த ஜேர்மானிய அரசிற்கு ரஷ்ய அரசு யுத்த விமானங்களை விற்பனை செய்

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 4

தது. அத்துடன், ரஷ்யாமீது கிற்லர் படையெடுக்க இருப்பதான ரஷ்ய உளவுத்துறைத் தகவல்களையெல்லாம் ஸ்ராலின் புறந்தள்ளியதுடன் கிற்லர் தம்மைத் தாக்கமாட்டார் என உறுதிபடக் கூறியும் வந்தார். ஸ்ராலினின் இப்போக்கைக் கியூப ஜனாதிபதி காஸ்ரோ தீக்கோழியுடன் ஒப்பிடுகிறார். இதனை காஸ்ரோவின் வார்த்தைகளிலேயே பார்ப்போம். "நெருப்புக் கோழியை நினைவுபடுத்துவதாக அவரது நடவடிக்கை இருந்தது. எல்லைக்கு அருகில் முப்பது லட்சம் துருப்புக்களை ஜெர்மானியர் குவித்தனர். நெருப்புக் கோழி குழிக்குள் தலையை விட்டுக்கொள்வதைப்போல் அப்போது ஸ்டாலின் இந்த இராணுவக் குவிப்பிற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமில்லாதது போல் இருந்தார். ரஷ்ய எல்லைகளை ஒட்டிய பகுதிகளில் துருப்புக்கள் மட்டுமன்றி பத்தாயிரக்கணக்கான கவச வண்டிகளும் ஆயிரக் கணக்கில் டாங்கிகளும் விமானங்களும் குவிக்கப்பட்டிருந்தன. ஒரு ஞாயிறன்று அவர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். அந்த நேரத்தில் பல அதிகாரிகளும் சிப்பாய்களும் விடுமுறையில் இருந்தனர். அவர்கள் உடனடியாகத் தரையில் இருக்கக்கூடிய அனைத்து விமானங்களையும் அழித்தனர். அது ஒரு நம்பமுடியாத கதை.

ரஷ்யாவிடமிருந்து ஜேர்மனி கொள்வனவு செய்திருந்த அதே விமானங்களினாலேயே ரஷ்யாவும் கிழக்கைரோப்பிய நாடுகளும் தாக்கப்பட்டன. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஏனைய நாடுகளை விடவும் அதிகளவிலான மக்கள் தொகையைப் பலியிட்ட நாடு ரஷ்யா தான். அத்துடன், கிழக்கைரோப்பாதான் பெருமளவு உயிர், உடைமை இழப்புக்களுக்கு உட்பட்ட பிராந்தியமுமாகும். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ரஷ்யா நின்றுபிடித்தது என்பதல்ல இங்குள்ள முக்கிய விடயம். ஸ்ராலினின் தொடர் தவறுகளுக்கு மக்கள் பெரும் விலை செலுத்தவேண்டி வந்ததென்பதும், மக்கள் அநாவசியமாகப் பலியிடப்பட்டனர் என்பதுந்தான் முக்கியவிடயம். இத்தகைய தோல்விக்கு ஏதுவான தவறிலிருந்து இன்னொரு மூர்க்கமான தவறு நிறைந்த கொள்கையை ரஷ்யா பின்பற்றத் தொடங்கியது. அந்த மூர்க்கமான கொள்கைதான் தேசிய இன உரிமை மீறல்களுக்கான தத்துவமாகவும் அமைந்தது.

அதாவது, ரஷ்யாவைத் தாக்க கிட்லருக்கு வாய்ப்பையும், வழிவாய்க்கால்களையும் ஸ்ராலின் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். அத்தவறினால் ஏற்பட்ட இழப்பையும், தோல்வியையும் எதிர்கொள்ள ஸ்ராலின் தரைவழிப் பாதுகாப்புத் திட்டமொன்றை உருவாக்கினார். ரஷ்யாவைப் பாதுகாப்பதன் பொருட்டான ரஷ்ய பாதுகாப்பு வியூகத்திற்கேற்ப ரஷ்யாவின் அண்டை அயல நாடுகளும் தேசிய இனங்களும் ஆக்கிரமிப்புக்குள்ளாகத் தொடங்கின.

### அண்டை நாடுகளை அரணாகப் பாவித்து.....

ரஷ்யாவை அதன் எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பது என்பது ரஷ்யாவின் அண்டை நாடுகளை ரஷ்யாவிற்கான அரணாகப் பாவித்துத் தரைவழி இராணுவக் கட்டமைப்பை வளர்ப்பதென்பதாய் அமைந்தது.

இதனால், ரஷ்யாவின் அண்டை நாடுகளைப பலாத்காரமாக இணைக்கும் அரசியல் இராணுவ வியூகம் உருவானது. பிரிந்து செல்லும் உரிமையை மீறல், பிரதேச விஸ்தரிப்பு, அயல் நாடுகள் மீதான இராணுவ ஆக்கிரமிபபுக்கள், தேசிய இன ஒடுக்கமுறைகள் ஆகிய அனைத்திற்கும் இத்தகைய பாதுகாப்புத் திட்டத்தையே நியாயமாகக் காட்டி அதனை ஒரு நியாயபூர்வமான சித்தாந்தமாக உருவகித்துக் காட்டினார். இத்தகைய விஸ்தரிப்பு வாதத்தினதும், தேசிய இன உரிமை மீறல்களினதும் ஆக்கிரமிப்பினதும் இறுதி உதாரணமாய் ஆப்கானிஸ்தான் மீதான சோவியத்தின் படையெடுப்பு அமைந்தது. எனவே, 1979 ஆம் ஆண்டு ஆப்கான்மீது மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான இராணுவ ஆக்கிரமிப்பு பல தசாப்தங்களாக நிகழ்ந்துவந்த விஸ்தரிப்பு வாதப் போக்கின் இறுதி அம்சமே தவிர புதிய தொன்றல்ல.

கட்டாய பிரதேச இணைப்பிற்கும், தேசிய இன உரிமை மீறல்களுக்கும் பாதுகாப்புக் கொள்கையைக் காரணம் காட்டுவது போல நிலமானிய முறையை ஒழிக்கவும், நவீன மயமாக்கலை மேற்கொள்ளவும், புரட்சிக்குத் தூண்டவும் இத்தகைய பிரதேச இணைப்புகள் உதவுமென்று பல சப்பைக் கட்டுக் காரணங்களைக் காட்டுவது வழக்கம். இவ்வாறாக லெனின் காலத்திலிருந்த விளக்கங்களுக்கு எதிராக லெனின் பின்வருமாறு கூறினார். "கட்டாய பிரதேச இணைப்புகளை இவ்வாறு நியாயப்படுத்துவது மாக்சியமல்ல, ஸ்ருதுருவேவாதம். 1880களில் ரஷ்யாவிலிருந்த நிலையை நினைவில் வைத்திருக்கும் ரஷ்ய சமூக ஜனநாயகவாதிகளுக்கு இந்த மாதிரி மாக்சியத்தைத் திரித்துக் கூறுவது நன்கு தெரியும்." "சோஷலிசத்தின் கீழ் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை அமுலாக்க மறுப்பது சோஷலிசத்திற்குத் துரோகம் செய்வதாகும் என்பதை நாம் வலியுறுத்தியிருக்கிறோம்' இதில் முதலாவது மேற்கோளில் லெனின கூறவந்த விடயம் என்னவெனில் பழைய ரஷ்யப பேரரசு மனப்பாங்கு அவர்களின் இரத்தத்தில் ஓட்டியிருக்கின்றது என்பதுதான் ஒருவர் எத்துணை சோஷலிசவாதியென்று தன்னை நம்பினாலுங் கூட அவரிடம் அறிந்தோ, அறியாமலோ ஒட்டிக் கொண்டிருக்கும் அந்தச் சக்கராதிபத்திய மனப்பாங்கிற்கு எத்தகைய விளக்கங்களை அளித்தாலும் நடைமுறையில் அவை மன்னராட்சிச் சிந்தனையின் வெளிப்பாடுகளும் ஆக்கிரமிப்புக் களுந்தான். உண்மையில் அவை சோஷலிசத்திற்கு இழைக்கப்படும் நேரடித துரோகமுந்தான்.

லெனினின் பின்பு ரஷ்யாவில் சோஷலிசம் தடம் புரளத்தொடங்கியது. தேசிய இனங்களை உள்நாட்டில் ஏப்பமிடுவதில் ஆரம்பித்து, தேசிய சுயநிர்ணய உரிமைகளை நிராகரிப்பதில் வளர்நது பிரதேச இணைப்புகள் வரை சென்றது. சுயநிர்ணய உரிமை மீறல் என்பதே சோஷலிசத்திற்கு சமாதிகட்டியாயிற்று என்பதன் குறிகாட்டியாக அமைந்தது. அதாவது, சோஷலிசத்தின் எழுச்சி எவ்வளவு தூரம் பிரிந்து செல்லும் உரிமையை வளர்த்ததோ அவ்வளவுதூரம் சோஷலிசத்தின வீழ்ச்சி அவ்வுரிமையை வீழ்த்தவும் செய்ததென்ற உண்மையை விருப்பு வெறுப்புகளுக்கப்பால் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும். குறிப்பாக சோஷலிசம் தடம்புரண்டபோது அதற்குள் தேசியநலன்களும் சிக்குண்டு நசிந்து போயின.

### தேசிய இனம் குறித்த நான்கு வரையறைகள்

தேசிய இனம் பற்றிய ஸ்ராலினின் நான்கு வரையறைகளும் பிரபலமானவை. பொதுப் பிரதேசம், பொதுப் பொருளாதாரம், பொதுமொழி, பொதுவரலாறும் அதனாலான பொது உளவியலுருவாக்கமும் என்பனவே அவை. இது ஓர் எளிமையான சூத்திரம். இதிற் பிரச்சினைகள் உள்ளன. இச்சூத்திரத்தை மிகவும் தெளிவான வடிவில் முதலில் மீறியவர் ஸ்ராலின்தான். உதாரணமாக யூத அரசப் பிரச்சினையை நோக்கலாம்.

அதாவது, ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழ்ந்த யூதர்களுக்கு ஒரு பொதுப் பிரதேசம் என்பது இல்லை. அவ்வாறே அவர்களுக்கு ஒரு பொதுப் பொருளாதாரமும் இல்லை. தாம் தாம் வாழும் நாடுகளிலுள்ள மொழிகளையே அவர்கள் பின்பற்றியதால் பொது மொழியுமில்லை. பொதுப்பிரதேசத்தில் வாழாததால் அவர்களிடம் பொதுவரலாறோ அது சார்ந்த உளவியலோ இல்லை. ஸ்ராலினின் நான்கு வரையறைகளும் யூதர்களுக்குப் பொருந்தவில்லை. ஆனால், தனது கோட்பாட்டைத்தானே மீறி ஐரோப்பிய யூதர்கள் ஒரு தேசிய இனம் என்றும் அவர்கள் பாலஸ்தீனம் சென்று தனியரசு அமைக்கலாம் என்பதையும் அங்கீகரித்தார். ஸ்ராலின் கூறிய வரையறைகள் நான்கிற்கும் வெளியே யூதர்களிடம் ஒரு பொது உளவியல் உணர்வு இருந்தது. அதாவது, அவர்கள் ஐரோப்பா எங்கும் காலத்திற்குக்காலம் தாக்கப்பட்டு வந்ததால் யூதர் என்ற இன உணர்வு துளிர்க்க முடிந்தது.

யூதர்கள் பற்றிய ஐரோப்பிய நிலைப்பாடு வரலாற்றில் என்றும் கறைபடிந்த ஒன்றுதான். அதாவது 16ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து அமெரிக்கக் கண்டங்களிலும் ஆஸ்திரேலியாவிலும் ஆயுத பாணிகளாய்க் குடியேறிய ஐரோப்பியர் ஆங்காங்கே ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா எனப் பல அரசுகளை அமைத்துத் தேசிய உருவில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், யூதர்களோ கிறிஸ்து சகாப்தம் தொட்டு வெறும் உதிரிகளாக ஐரோப்பா நோக்கிப் புலம் பெயர்ந்தனர். சுமாராக இரு ஆயிரமாண்டுகளைத் தழுவிய புலம்பெயர்வும் குடியேற்றமும் அது. ஐரோப்பியர் ஏனைய கண்டங்களுக்கு ஆயுதசகிதம் சென்று ஆக்கிரமிப்பாளர்களாய்க் குடியேறியவாறாக அல்லாமல் ஆயுதங்களின்றி, வெறும் பெட்டி படுக்கைகளுடன் அதுவும் உதிரிகளாக நீண்ட காலக் குடியேறிகளாகவே சென்றனர். இவ்வாறு பெட்டி படுக்கைகளுடன் குடியேறிய யூதர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகால வாழ்வை ஐரோப்பாவில் கொண்டு இருந்தனர். ஆக்கிரமிப்பாளர்களாய் ஆயுதங்களுடன் பல கண்டங்களிலும் குடியேறிய ஐரோப்பியர்களுக்கு அவ்வாறு குடியேறிய நாடுகளில் அரசமைத்து வாழும் உரிமை உண்டு எனில் பெட்டி படுக்கைகளுடன் குடியேறி வாழ்ந்துவந்த யூதர்களுக்கு ஐரோப்பாவில் தேசிய சிறுபான்மையின உரிமையை அங்கீகரித்து அங்கு அவர்களை வாழவிட ஏன் ஐரோப்பியர் மறுத்தனர்? யூதர்களைக் கொன்று குவித்த பழியும், அவர்

## ஆப்கான் மீதான ரஷ்யாவின் இராணுவ ஆக்கிரமிப்பு அதன் விஸ்தரிப்புவாதப் போக்கின் இறுதி அம்சம்

களிற்குரிய உரிமைகளை மீறிய பழியும் தனிதது கிற்லரை மட்டும் சாராது. பாலஸ்தீனத்தில் யூத அரசு அமைக்க ஐரோப்பியர் அங்கீகரித்தமை என்பது யூதர்களுக்கு ஐரோப்பா எங்குமிருந்த தேசிய சிறுபான்மையின் உரிமைகளை மறுத்து அவர்களை ஐரோப்பாவை விட்டுத் துரத்துவது என்பதுதான். இப்படித் துரத்தும் பணியில் முழு ஐரோப்பாவுடன் ரஷ்யாவும் முழுஅளவிற் கைகோத்து நின்றது. யூத மக்களை ஐரோப்பா மிகவும் கொடுமையாகவே நடத்தியது. யூத அரசிற்கான ஐரோப்பியரின் நோக்குநிலையிலிருந்து பார்த்தால் ஐரோப்பாவை விட்டு யூதர்களைத் துரத்தும் நிலைப்பாடாகவே விளங்க வேண்டும். பிரிந்து செல்லும் உரிமையுடன் இதனை ஒப்பிடுகையில் இது தலைகீழ வடிவில யூத மக்களைப் பிரித்தொதுக்கி ஐரோப்பாக் கண்டத்தை விட்டுத் துரத்துவதாய் அமைந்தது.

யூதர்களை ஐரோப்பாவிலிருந்து பெயர்த்தெடுத்து மேற்காசியாவில் நாட்டுவதற்கான தனது முடிவிற்கு ஸ்ராலின் ஒரு புதிய கோட்பாட்டு விளக்கத்தை முன்வைத்தார். அதுவே அவரது நொதிய (Catalyst) கோட்பாடாகும். அதாவது, மேற்காசிய வாழ் அரபு-இஸ்லாமிய மக்கள் நவீன மயப்படாத நாகரிகம் அடையா மக்கள் என்றும் ஐரோப்பாவில் வாழ்ந்த யூதர்கள் நாகரிகமடைந்த நவீன மக்கள் என்றும் அத்தகைய மக்களை மேற்காசியாவிற் குடியேற்றி அரசமைத்தால் நவீனமடையாத அராபியர்களை யூதர்கள் நொதியம்போற் செயற்பட்டு தம்வசமாக்கி நவீனமயப்படச் செய்திடுவர் என்றும் கூறினார். ஆனால், நடைமுறை வேறுவிதமாய் அமைந்தது. இதன்மூலம் மேற்காசியாவே ஒரு யுத்தகளமாய் மாறியது என்பதே உண்மை.

(மிகுதியை அடுத்தவாரம் படியுங்கள்)

## வேலையாள்கள் தேவை

கேற், கிறில் வேலை தெரிந்தவர்கள், வேலை பழக விரும்புபவர்கள் உடன் தேவை. விரும்புபவர்கள் நேரில்வரவும்.

தொடர்பு:

**தக்சிகா வெல்டிங் தொழிலகம்,**
208, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(43288)(42-14)


## சுழிபுரம் மக்கள் முறைப்பாடு

வெளிநாடுகளிலிருந்து சுழிபுரம் பகுதி மக்களுக்கு வரும் அநேகமான கடிதங்கள் உடைக்கப்பட்ட நிலையில் வந்துசேர்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, கடந்த வாரம் டென்மார்க், ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதங்கள் இவ்வாறு உடைக்கப்பட்டிருந்தன என்று சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் தெரிவித்தனர்.(எ-28)


### தென் இந்தியா, ஆந்திர, கர்நாடக, கேரள, பாண்டிச்சேரி ஊடான திருத்தலயாத்திரை

மேல்மருவத்தூர், ஸ்ரீசைவம், மந்திராலயம் சாயி பாபா, மூலாம்பிகை, சோட்டானிக்கரை, திருப்பதி, சுசீந்திரம், நவக்கிரககோவில்9, சிதம்பரம், திருவண்ணாமலை, ஆறுபடைவீடுகள், தஞ்சாவூர், பிள்ளையார்பட்டி, சரஸ்வதி ஆலயம் மாங்காடு, திருவேற்காடு, மலைக்கோட்டை, இராமேஸ்வரம் உட்பட100இற்கும் அதிக சிறப்புமிக்க ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

முழுவிவரங்களுக்கு:
T.RANGANATHAN
T.P:0777680102, 0776264301

(சி.41501)(46-14-42)

### வடஇந்திய திருத்தலயாத்திரை

காசி, கயா, ரிஷிகேஸ், ஹரித்துவார், அயோத்தி, வைஸ்ணவிதேவி, பத்திரிநாத், கேதார்நாத், அமர்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திரிவேணி, இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, சென்னை. 15 நாள்கள், 23 நாள்கள், 40 நாள்கள் யாத்திரை ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் விருப்பமுடையவர்கள் முழு விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

**T.RANGANATHAN**
T.P.: 0777680102
0776264301.

(சி.41503)(42-14)

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான தாரண வருடம் பங்குனித் திங்கள் 07 ஆம் நாள் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலை10.31 மணிமுதல் 11.36 மணிவரையுள்ள பூச நட்சத்திரமும் தசமித் திதியும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **முகுந்தன்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **திருக்குழலினி** அவர்களுக்கும்

திருவருள் துணையுடன் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெறுகிறது என்பதை உற்றார், உற்றார், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். புது மணமக்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமண மண்டபம்:
**ST BERNADETTE'S R.C. PRIMARY SCHOOL HALL Clifton Road, Kenton, Harrow, Middx HA3 9NS.**

திரு.திருமதி பொன்னுத்துரை
கரந்தன், அராலி வீதி, சங்கானை.

திரு.திருமதி சக்கரவர்த்தி
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (43226)(50-14-17)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைச்சேர்ந்த திரு.திருமதி உதயநாதன்–ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**செல்வன் ஆகாஷ்**




தனது முதலாவது பிறந்த நாளை இன்று (20-03-2005) தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண் டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், தாத்தாமார், அம்மம்மாமார், சித்தப்பாமார், அன்ரிமார், பூட்டன், பூட்டிமார் அனைவரும் நல்லூர்க் கந்தன் திருவருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :
உதயநாதன்
ரஞ்சிதமலர்
அப்பா, அம்மா

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(43206)(53-14-15-11-42)

**ENGLISH MEDIUM**



**பாலர் பாடசாலை**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
### APRIL 25

புதிதாய் சேரும் மாணவர்களுக்கு APRIL மாதத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.


Play Group — Montessori — Pre School

**BRITISH BUSINESS SCHOOL**

HOT LINE : 021-222-5796

## 10 சர்வதேச பல்கலைக்கழகங்களில் நேரடி அனுமதிக்கு கைகொடுக்கும் NIIT




**NIIT** இல் இரு வருட கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் *U.K, U.S.A, Canada, Australia, Ireland, Newzealand* ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் மிகக்குறுகிய காலத்தில் பட்டதாரியாகிட நேரடி அனுமதி !

37 நாடுகளில் 3800ற்கு மேற்பட்ட எமது கிளைகளில் உள்ள 2.5 மில்லியன் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்

# NIIT

**The World Largest IT Educator**

347, Kasthuriyar Road, Jaffna. TP 021 222 7250

www.niit.com

# பிரிவினைக்குத் தாய்வான் முயன்றால் சீனா இராணுவ நடவடிக்கையில் இறங்கும்!

தாய்வான் (முன்னர் தேசிய சீனா) தனியாகப் பிரிந்துபோக முயலும்பட்சத்தில் அதன்மீது அவசியமானால் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு மக்கள் சீனக் குடியரசு நாடாளுமன்றம் சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

அண்மையில் பெஜ்ஜிங்கில் முடிவடைந்த மக்கள் சீனக்குடியரசின் நாடாளுமன்றம் அதன் 11 நாள் தொடர் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களில் இது மிகமுக்கிய விடயமாகும்.

சீனாவின் பிரதேச ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்கு அமைதிக்கு மாறான மற்றும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சீன மக்கள் விடுதலை இராணுவத்துக்கு அதிகாரம் அளிப்பதாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ நாடாளுமனறத்தில இந்தச் சட்டத்தின் அவசியம் பறறிப் பேசும்போது, இந்தச் சட்டமானது மீள் ஒருங்கிணைப்பை அமைதியாக மேற்கொள்வதற்கு உறவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும் பலப்படுத்திக்கொள்ளவும் கொண்டுவரப்படும் ஒரு சட்டமாகும். தாய்வான் மக்களைக் குறிவைத்தோ போர் ஒன்றை நோக்கமாக வைத்தோ இச்சட்டம் கொண்டுவரப்படவில்லை

இதில் அடங்கும்.

இந்தத் தீவுகளைப் போத்துகேயர் ஆண்ட காலத்தில் அதனைப் போர்மோசா என்று அழைத்தனர்.

முதலாவது சீன - ஜப்பான் போருக்குப் பின் இப்பகுதி ஜப்பானின் ஆட்சிக்குள் வந்தது. ஜப்பான் அதனை அபிவிருத்தி செய்த அதேசமயம், வெகுவாகச் சுரண்டிச் சென்றது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது அமெரிக்க விமானப் படைகளின் மிகமோசமான தாக்குதலுக்குள்ளானது. அதன்பின், இப்பகுதி சீனக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

சீனப் பெருங்காலத்தில் ஜெனரல் ஷியாங் கோஷேக்கின் தேசிய அரச படைகள் தோல்வி கண்டதையடுத்து, 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அளவில் ஷியாங்கோ ஷேக், தம் படைகளுடன் தாய்வானுக்குப் பின்வாங்கினார். பெரும்படைகளுடன் தாய்வானின் முழுப்பகுதயை ஆக்கிரமித்துக்கொண்ட ஷியாங்கேஷேக், சீனப் பெரும் நிலத்தையும் காலப்போக்கில் கைப்பற்றிவிடலாம் என்று கருதியிருந்தார்.

1951ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோ உடன்பாட்டின்கீழ், தாய்வான் மீது தனது ஆதிக்கத்தை ஜப்பான் கைவிட்டது. 1953ஆம் ஆண்டு பெருநிலப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படவிருந்த ஒரு படையெடுப்பை போர்மோஷா நீர் சந்தியில் கடற்படையொன்றை நிறுத்தி அமெரிக்கா தடைசெய்தது. 1955ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின்கீழ் அமெரிக்கா, தாய்வானையும் அதை அண்டியுள்ள தீவுகளையும் பாதுகாப்பதாக ஒப்புக் கொண்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க ஆதரவுடன் தாய்வானுக்கிருந்துவந்த உறுப்புரிமை 1971ஆம் ஆண்டு அச்சபையிலிருந்து அது வெளியேற்றப்பட்டதால் மக்கள் சீனக் குடியரசுக்குச் சென்றடைந்தது.

1972ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் நிக்ஸன் சீனத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுகளின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில்

நம்புகின்றோம் என்று தாய்வான் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

சீன அதிபர் ஹுஜின்டா ஓலையும் பிரதமர் வென் ஜியாபாதேவையும் தாய்வான் முற்போக்கு ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் 'சர்வாதிகாரிகள், நீர் சந்திப் பிரதேசத்தில் உறவுகள் பலப்படுத்துவதற்கு எதிராகச் செயற்படுகின்ற பாவிகள்' என்று வர்ணித்துள்ளார்கள்.

தாய்வானும் சீனாவும் இரண்டு நாடுகள். சீனாவில் நிறைவேற்றப்படும் எந்தச் சட்டத்தையும் தாய்வான் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள. தாய்வான் மக்கள் தங்கள் இறைமையைப் பாதுகாத்துக்கொள்வதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டைப் பெஜ்ஜிங் தவறாகப் புரிந்து

களை அமெரிக்கா விற்க இருப்பதனால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள கவலை மற்றும் பாகிஸ்தானிலிருந்து தொடர்ந்தும் தீவிரவாதிகளின் ஊடுருவல்கள் இடம்பெற்றுவரும் விடயம். பாகிஸ்தானுக்கு விமானங்கள் விற்கும் விடயத்தில் இன்னமும் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளப்படவில்லையென்று மட்டும் கூறிக் கொண்ட லிஸா அம்மையார் மழுப்பியிருக்கிறார்.

இருநாடுகளுக்குமிடையில் பேச்சுகள் தொடர்வது மகிழ்ச்சியளிக்கிறது. எம்மால் கூடியவரை இதற்கு ஆதரவாய் இருப்போம் என்று ரைஸ் அம்மையார் இந்தியத் தலைவர்களுக்கு உறுதியளித்துச் சென்றுள்ளார்.

✦ ✦ ✦

## போர்மோசா நீர் சந்தியில் யுத்த மேகம் சூழ்கிறது?

கொண்டுள்ளது என்று தாய்வான் நாடாளுமன்றப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

சீன நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக 10 லட்சம் மக்கள் கொண்ட பேரணியொன்றை நடத்துவதற்குத் தாய்வான் அரசியல் கட்சிகள் ஏற்பாடு செய்துவருகின்றன.

✦ ✦ ✦

### அமெரிக்க இராஜாங்க அமைச்சர்

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் அம்மையா தென்னாசிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா - பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு வந்துபோயிருக்கிறார்.

### வத்திக்கான் எதிர்ப்பு

"டார்வின்சிகோட்" என்ற பெயரில் வெளியாகியுள்ள நூல் ஒன்றுக்கு வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபை கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

யேசுநாதர் பற்றிய தகவல் ஒன்றை வத்திக்கான் மறைத்து வருவதாக எழுதப்பட்டுள்ள அந்த நூலுக்கு உலகம் முழுவதும் நல்ல 'கிரக்கி' இருப்பதாகக் கூறப்படுகின்றது.

"அதை வாசிக்காதீர்கள், அதை வாங்கவும் வேண்டாம்" என்று வத்திக்கான் கர்தினால் தார் சிஸி பேர்டோனே என்பவர் கூறியிருக்கிறார்.

இந்த நூல் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றது. அதில் உள்ளவற்றை வாசிப்பவர்கள்



சீன தேசிய காங்கிரஸ் சபையில் தாய்வான் பிரிவினைக்கெதிரான சட்டத்தின்மீது நடந்த வாக்களிப்பில் சீனத் தலைவர்கள் முதன்மை ஆலோசகர் ஜியா குயிங்லில் (இடது), அதிபர் ஹூ ஜின்டா ஓ (நடுவில்), பிரதமர் வென் ஜியாபாஓ (வலது) பொத்தானை அழுத்தி தமது வாக்குகளைப் பதிவுசெய்கிறார்கள்.

## கொண்டலிஸாவின் தெற்காசிய பயணத்தின் பெரும் மர்மம்!

என்று கூறினார்.

சீன மக்கள் காங்கிரஸ் (நாடாளுமன்றம்) நிறைவேற்றிய இச்சட்டத்தை 2ஆயிரத்து 896 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்துள்ளார்கள். ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

தாய்வான் சுதந்திர நாடாகவிருப்பதை அதன்



இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் அம்மையார் புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்தபோது.

தற்போதை அதிபர் சென்.ஷாயிபியன் விரும்புகிறார். அவரது பதவிக் காலம் 2008 ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது. அதற்கு முன்னா தாய்வானை அவர் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திவிடக்கூடும் என்று சீனக் குடியரசு அஞ்சுவதாகத் தெரிகிறது. அதைத் தடுப்பதற்காகவே இந்தப் புதிய சட்டத்தைச் சீன நாடாளுமன்றம் நிறைவேற்றியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

### சரித்திரச் சுருக்கம்

தாய்வான் சுமார் 100 மைல் விஸ்தீரணம் கொண்ட ஒரு தீவு. ஆசியப் பெருநிலத்திற்கு அப்பால் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. குயிய்மொய், மட்சு ஆகிய இரு தீவுகளும் வேறும் அருகிலுள்ள சில தீவுகளும்

தாய்வானிலிருந்து முழுமையாக விலகிக்கொள்வதே அமெரிக்காவின் நோக்கம் என்றும், அப்பகுதியில் நெருக்கடி நிலை தணியும்போது முன்னேற்றகரமாகப் படைகள் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1979ஆம் ஆண்டுக்குப் பிறகு மக்கள் சீனக்குடியரசை மாத்திரமே அமெரிக்கா அங்கீகரிக்கும் என்றும், அத்துடன், பாதுகாப்பு ஒப்பந்தம் முடிவடையும் என்றும் அதிபர் காட்டர் அறிவித்தார். இது தாய்வானிலும் அமெரிக்க காங்கிரஸ் சபையிலும் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது.

### காங்கிரஸ் சபை தீர்மானம்

இந்த நிலையில், காட்டரின் விரும்பத்துக்கு மாறாக, தாய்வானின் எதிர்கால உறவுகள் தொடர்பாகக் காங்கிரஸ் சபை நிறைவேற்றிய ஒரு சட்டத்தில் தாய்வான் மீது தாக்குதல் ஒன்று நடத்தப்படுமானால் அமெரிக்கா செயலில் இறங்கும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இந்தநிலைமையில், தாய்வான் தனிநாடாகச் செயற்படுவதற்கு முடிவெடுக்குமானால் அந்தத் திசையில் ஏதாவது முயற்சி எடுக்கப்படுமானால் சீன இராணுவம் அதன்மீது தாக்குதல் நடத்தலாம் என்ற நிலை இப்பொழுது உருவாகியிருப்பது பெரும் மோதல் ஒன்று போர்மோசா கடல் பகுதியில் ஏற்பட வழிவகுக்கும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

மக்கள் சீன இராணுவம் உடனடியாக இராணுவ நடவடிக்கை எதிலும் இறங்கமாட்டாதென்றே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

### தாய்வானில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இதற்கிடையில், பிரிவினைக்கெதிராகச் சீன நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்குத் தாய்வானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

தாய்வானிலுள்ள எல்லா மக்களும் இச்சட்டத்தை எதிர்க்கிறார்கள். உலக மக்கள் அனைவருமே இதனை எதிர்ப்பார்கள் என்றே

ஆசியாவில் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் பாகிஸ்தான் - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சுகள் முன்னேறிவரும் இவ்வேளையில், அந்தப் பேச்சுகளின் மேம்பாட்டுக்கு ஊக்கமளிப்பதற்காக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் இப்பிரதேசத்துக்கு வருகை தந்திருக்கலாம் என்று கருதப்படும் அதேவேளையில், அமெரிக்க சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இப்பிரதேசத்துக்கு வருகை தந்தமைக்கு வேறு காரணங்களும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் இரண்டாம் முறை பதவிக்கு வந்த கையோடு உலக நாடுகளில் ஜனநாயகம் வளர்ச்சியடைவதில் மிகவும் அக்கறை கொண்டிருப்பதாகவும, அந்தவகையில் தமது பணிகள் வேகமாக முன்னெடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார். அந்த வகையில், பாகிஸ்தானில் தொடர்ந்தும் இராணுவ ஆட்சி நீடிப்பதை அமெரிக்கா விரும்பமுடியாது. பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதற்காகப் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் பலவிதமான "சால்ஜாப்பு"க்களைக் கூறிவருவது அமெரிக்காவுக்குத் தெரியாமல் இருக்காது. எனவே, அதுவிடயமாகவும் பாகிஸ்தான் தலைவர்களுடன் கொண்டலிஸா அம்மையார் நாசூக்காகக் கதைத்திருப்பார் என்று நாம் கருதலாம்.

மேலும், ஈரான், வடகொரியா போன்ற நாடுகளுக்கு அணு இரகசியங்களை விற்ற பாகிஸ்தான் விஞ்ஞானி அப்துல் காதிர்கான் மீது வெளிப்படையான நடவடிக்கை எடுக்காமல் பாகிஸ்தான் இருப்பதும் அமெரிக்காவின் கவலைகளில் ஒன்றாக இருக்கலாம்.

கொண்டலிஸா ரைஸ் அம்மையாரின் விஜயத்தின்போது இந்தியத் தலைவர்கள் இரண்டு விடயங்களை முக்கியமாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். பாகிஸ்தானுக்கு நவீனரக விமானங்

உண்மையென்று நினைத்து விடுவார்கள் என்று அவர் கவலை தெரிவித்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த டான் பிரவுன் என்பவர் இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலை வெளியிட்டுள்ளவர்களின் தகவல்படி 2003ஆம் ஆண்டு அது முதன்முதலில் வெளியிடப்பட்டதிலிருந்து 44 மொழிகளில் 25 மில்லியன் பிரதிகள் விற்பனையாகியுள்ளனவாம்.

யேசுநாதர் பற்றிய ஓர் உண்மை மறைக்கப்பட்டுவிட்டதாகக் கூறுவதே இந்நூலின் முக்கிய அம்சம் என்று கூறப்படுகின்றது.

✦ ✦ ✦

### படுகொலை தொடர்பான அருங்காட்சியகம்

உலகின் மாபெரும் படுகொலை அருங்காட்சியகம் ஒன்றை இஸ்ரேல் திறந்துவைத்துள்ளது ஹிட்லரின் நாஜிகளால் 60 லட்சம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூருமுகமாக அருங்காட்சியகம் திறந்துவைக்கப்பட்டது.

ஜெருசலேம் நகரில் மவுண்ட் ஹெர்சல் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மாபெரும் அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், நூற்றுக்கணக்கானவர்கள் அமைதியாகவும் உணர்வுபூர்வமாகவும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் தமதுரையில், "அன்று அழிக்கப்பட்டுவிட்ட மக்களை நாம் இன்று நினைவு கூர்கின்றோம். அவர்களின் மரணங்கள் பதியப்பட்டுள்ளன. ஒருபோதும் மறக்கப்படமாட்டாது என பதை இன்று உறுதிப்படுத்துகின்றோம். இது போன்று உலகில் எங்குமே நிகழக்கூடாது என்பதையும் இது நினைவுபடுத்துகின்றது".

(12 பக்கம் பார்க்க)

## தேவை

யாழ்.நகரின் முன்னணி கணனி நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள Hard ware Technician தேவை.

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்:
**NO. 1, Brown Road,**
**Jaffna.**
T.P: 0777 -763781, 021 222 6413

(43259)(46-14-42)

## மருந்தாளர் இல்லை

நவாலி,மார்ச்.20

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் மருந்தாளர் இல்லாமையால் மருந்து கொடுக்கும் வேலைகளையும் இவ்வைத்தியசாலையில் உள்ள தாதியர்களே செய்கின்றனர்.

இவ்வைத்திய சாலையில் பணியாற்றிய மருந்தாளர் இடமாற்றம் பெற்றுச்சென்று பல மாதங்களாகியும் வேறொரு மருந்தாளரை நியமிக்காமையாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

(ஐ-100-203)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 22.05.1937

இறப்பு 10.09.1995

அமரர்
### ஆறுமுகம் ஜெயரத்தினம்

(இலங்கை வங்கி முன்னாள் உதவி முகாமையாளர்)

திதி 20.03.2005

ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு ஆண்டுகள் பத்து ஆனதுவே
ஆனாலும் ஆறவில்லையே எம்துயரம்!
தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட
என்றும் இறைவனை இறைஞ்சும் உங்கள்.....

66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(43198) (51-14-15-46-42)

## முகாமையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல Guest House ஒன்றிற்கு முகாமையாளர் தேவை. சரளமாக ஆங்கிலம் பேச, எழுதக்கூடிய 25-40 வயதிற்குட்பட்ட, A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும் மார்ச் 26,27ஆம் திகதிகளில் காலை 10மணி முதல் ஒரு மணி வரை நேரில் வரவும் (சிங்களம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது).

**US Guest House & Restaurant**
**874, ஆஸ்பத்திரி வீதி,**
(43112)(46-14-42) **யாழ்ப்பாணம்.**

## இப்பொழுது இலங்கையில்



அக்யூரேட் 007
ஜாக்குவார் 009

சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
& Retailers

SOLE DISTRIBUTORS

**OCEANICK IMPEX**
192, Main Street, Colombo-11.
Tel : 2336720, 2327168 Wholesale : 2384131
Fax : 2326961 E-mail : oceanick192@yahoo.com

## காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு

**உங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பூர்த்திசெய்ய அழையுங்கள்**
**0777 563781**
**வடமராட்சி வாடிக்கையாளர்கள் தங்கள் 3 ஆம் நபர் (வாகன) காப்புறுதிகளுக்குத் தொடர்புகொள்ளுங்கள்.**

**ஆதவன் ஸ்ரோர்ஸ்,**
**வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,**
**பருத்தித்துறை.**
அமைப்பாளர் (1618),
**சிறிலங்கா இன்சூரன்ஸ்.**

(43045) (39-14-42-46)

## சுவையும் நலமும் நிறைந்தது மிகவும் சுலபம் பூசுவது

**Simas®**

# சீமாஸ் மாகரின்




ஆம், புதிய சீமாஸ் மாகரின் பாவிப்பதால் எல்லாமே சுலபம்

- உயர்தரமான சுவையும் நலமும்.
- மீண்டும் வைத்துப் பாவிக்க பிறிஜ் தேவையில்லை.
- பானில் பூசுவது மிகச் சுலபம்.
- விலையும் குறைவு.

விலை ரூ. 20/-

**சீமாஸ் மாகரின்**
**சுவையும் நலமும் - விலையோ குறைவு**

விற்பனையாளர்
**ABMauri**
ஏ.பீ. மௌரி லங்கா
124, டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை.



சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் வீரர் பந்து வீசுவதையும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் வீரர் பந்தை அடித்தாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா).

# கரணவாய், விநாயகர் அணிகள் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்20

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடனும், உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.



அளவெட்டி விநாயகரும் சென்.தோமஸும் மோதும் காட்சி

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த மாவத்தை விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

இரு அணிகளுமே தமக்குக் கிடைத்த பல சநதர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தாது கைவிட்டார்கள். இதனால் ஆட்டம் முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்து.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் தலா ஐந்து வழங்கப்பட்டன.

முதலில் மூன்று உதைகளையும் மாவத்தை விளையாட்டுக்கழகம் கோல்களையும்பெறக் கூடிய முறையில் பயன்படுத்தவில்லை.

கரணவாய் மத்தி விளையட்டுக்கழகம் முதல் மூன்று உதைகளையும் உரிய முறையில் உதைத்து மூன்று கோல்களைப் பெற்றது.

கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் 3 இற்கு 0 என்ற கோல்களினால் மாவத்தை விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.

மற்றுமோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விநாயகர் விளையாட்டுக்கழகமும், இதே லீக்கைச் சேர்ந்த இளவாலை சென். தோமஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய ஐந்து நிமிடத்திலேயே யாரும் எதிர்பாரா வண்ணம் முதலாவது கோலை விநாயகர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ருஷ்ந்தன் மிகவும் இலகுவாக அடித்தார்.

தொடர்ந்து முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் மேலதிக கோல்களைப் பெறாத நிலையில் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் முதல் பாதி ஆட்டம் முற்றுபபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் மோதிக்கொண்டன.

இரு அணிகளுக்கும் போதியளவு சந்தர்ப்பங்கள் கோல்களைப் பெற கிடைத்தபோதிலும் அவை அவற்றைப் பயன்படுத்தவில்லை.

இந்த நெருக்கமான விளையாட்டின் போது விநாயகர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ரவிக்குமார் கோல் கம்பத்திற்கு அண்மையாகப் பந்தை வேண்டும் என்று கையால் அடித்த குற்றத்திற்காக மத்தியஸ்தரினால் மஞ்சல் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார்.

சென்.தோமஸ் விளையாட்டுக்கழத்திற்கு தண்டனை உதை(PANALTEY) யொன்று கிடைக்கப்பட்ட போதிலும் சென்.தோமஸ் கழக அணி வீரர் அதனை சரியான முறையில் அடித்து கோல் பெறத் தவறினார்.

விநாயகர் விளையாட்டுக்கழகக் கோல் காப்பாளர் பாஸ்கரன் எதிரணியினர் இலகுவாகப் பெறக்கூடிய சில கோல்களைத் தனது துணிச்சலானதும் சமயோசித்தமாகவும் எடுத்த நடவடிக்கைகளினால் தடுத்து நிறுத்தியமை சுட்டிக்காட்டக் கூடியதும் ஆகும்.

ஆட்ட முடிவில் விநாயகர் விளையாட்டுக் கழகம் 1 இற்கு 0 என்ற கோல்கணக்கில் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. (3-86)

## விளையாட்டு அவையின் அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அவை உறுப்பினர்களுக்கான அவசர கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்குப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு அவைக்கான குழுப்புகைப்படமும் அன்றையதினம் எடுக்கப்படவுள்ளதால் 2004 ஆம் ஆண்டுக்குரிய சகல உறுப்பினர்களையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு உடற்கல்வி அலகின் இணைப்பாளர் மா.இளம்பிறையன் கேட்டுள்ளார். (3-203)

## விளையாட்டு

## எளிமையாக நடந்த மெய்வன்மைப் போட்டி

ஒட்டுசுட்டான்,மார்ச்20

ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் மிக எளிமையான முறையில் நடைபெற்று வருகின்றன.

கல்வித் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய ஆடம்பரங்கள் தவிர்க்கப்பட்டுப் போடடிகள் நடத்தப்பட்டு வருகின்றன. (8-341-202)

## தென்மராட்சி பிரதேச மென்பந்துக் கிரிக்கெட்

# சரஸ்வதி, தென்னகத்தாரகை சம்பியன்களாகத் தெரிவாகின

தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் தென்னகத்தாரகை விளையாட்டுக்கழகமும் இவ்வாண்டுக்கான சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கான இறுதிப் போட்டிகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான 12 ஓவர்கள் கொண்ட 9 பேர் பங்குபற்றும் போட்டி இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும், நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 7 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரமணன் 23 ஓட்டங்களையும் சபேஸ் 15 ஓட்டங்களையும் கஜீதன் 10 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

விக்பூட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜீவன் 8ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அனுசன் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரதீப் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்பூட் விளையாட்டுக் கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பிரதீப் 17 ஓட்டங்களையும் பிரசாத் 10 ஓட்டங்களையும் குகரூபன் 9 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தைச் சோநத அனோஜன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், பிரகலாதன் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும் இராஜேஸ்வரன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான 6 பேர் பங்குபற்றும் 5 ஓவர்கள் கொண்ட இறுதிப் போட்டியில் விக்பூட் விளையாட்டுக்கழகமும் தென்னத்தாரகை விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

விக்பூட் விளையாட்டுக் கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. ஆகக்கூடிய ஓட்டங்களாக சுஜனகலா, அனோஜா ஆகியோர் முறையே 11, 5 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

தென்னகத்தாரகை சார்பில் பந்து வீசிய அருள்வேணி ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் சிந்துஜா 4 ஓட்டத்திற்கு 2 விக்கெட்டையும் மற்றும் பிரபாகினி, சங்கீதா ஆகியோர் முறையே 8, 7 ஓட்டங்களைக் கொடுத்து ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றிக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னகத்தாரகை அனைத்து விக்கெட்டையும் 23 ஓட்டங்களுக்குள் இழந்து ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றது. தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அருள்வேணி, சங்கீதா ஆகியோர் ஆகக்கூடிய ஓட்டங்களாகத் தலா 5 ஓட்டங்களைப் பெற்றனர். விக்பூட் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பிரியா 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் கிருபாலினி, சுஜனகலா, அனோஜா ஆகியோர் முறையே 3, 5, 6 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (3-86)



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்கும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணிக்கும் இடையேயான - 17 வயதுப் பிரிவினருக்கான - கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் மோதும் காட்சி. (படம்: நேசன்)

## உதயன் ஊடக அனுசரணையுடன்

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டக் கிண்ணம்; யங்கென்றீசியன்ஸ்- கலைமதி அணிகள் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச்20

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்கான தமிழீழ விளையாட்டுத துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாகம் லீக்கைச் சேர்ந்த யங்கென்றீசியன்ஸ் வி.கவும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கலைமதி வி.கவும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் மற்றோர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த எவரெஸ்ற் வி.கவும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த காளியம்பாள் வி.கவும் மோதுகின்றன.

(3-86-190-203)


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation

New way of flying



Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ XXX தொடர் இலக்கமுடைய Peugeot - 403 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.தேவராஜா, இல.188, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) (43229)

4x3 தீராந்திகள் (பாலை) புதியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15A, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. (43283)

நல்லின யமுனாபாறி ஆடுகள் (பால் தரக் கூடியவை), குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.ஞானசுந்தரம், இல.63, பெரியதம்பிரான கோயில் வதி, வண்.வட மேற்கு, யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம் பகல் 11.00 - 5.00 மணி வரை. (43310)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43225)

புறொயிலர் 1Kg170/-, சுத்தம செய்தது 1Kg 255/- விற்பனைக்குண்டு. கோழிக்குஞ்சுகளும் விற்பனை செய்யப்படும். New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K Farm, பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (43242)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg160/-, சுத்தம்செய்ப்பட்ட புறொயிலர் இறைச்சி 1Kg 260/- தொடர்பு: S.சிவகுமாரன் கல்வியங்காட்டு சந்தி, பெற்றோல செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (43264)

## வான் விற்பனைக்கு

253 - XXXX Dx113 மொடல் டொல்பின் ரக வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 134, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5145. (43258)

நல்ல நிலையிலுள்ள 54 - டொல்பின் ரக வான் விற்பனைக்குண்டு. (Full 12 AC) தொடர்பு: 241, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-41570)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் உள்ள 13ஸ்ரீ XXX தொடரிலக்கமுடைய Nissan Sunny Hb 310 கார் (Gold colour) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 754, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777 064467 (43258)

## நாய் விற்பனைக்கு

அல்சேஷன் பெண் நாய் (German sheperd-Pure) (1½ வயது) விற்பனைக்குண்டு. தொடர்பு: A.B அஸ்பரி, சேச் ஒழுங்கை, அராலி வடக்கு T.P.: 0777 - 283767. (43177)

எம்மிடம் நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தயாநிதி, பிடாரி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி-41595)

## வீடு, காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில், 133ஆம் இலக்கம் கொண்ட ஆறு (06) அறைகள், கார் கராஜ் உட்பட சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு, 4½ பரப்பு நிலத்துடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு காலை 9 மணி முதல் 5 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: 222 3146, 0777 149396, 077 6026907. (43263)

கந்தர்மடம், இல.10, உடையார் லேன், பழம் றோட்டில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் உள்ள வீடும் அதனுடன் இணைந்த 2½ பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன. தனித்தனியாகவும் சேர்த்தும் கொடுக்கப்படும். தொடர்பு: 032 222 3563, 021 222 6862. (சி-41539)

அராலி மத்தி 789 பேருந்து பிரதான வீதிக்கு மிக அண்மையில் வசதிகளுள்ள பெரிய வீட்டுடன 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இந்திரம், அராலி மத்தி 011 - 2424865. (43231)

## காணி விற்பனைக்கு

கச்சேரியடியில் நல்ல சுற்றாடலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணி அமைந்துள்ள இடம் இல.2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. தொடர்புகளுக்கு: 0785164557. (சி-41540)

இராச வீதியில் நவற்கிரி சந்திக்கு அருகில் வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் கிணற்றுடன் கூடிய 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 222 3772. (43309)

பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல. 2536, மே/பா உதயன். (43306)

## காணி தேவை

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரிக்கும் மூளாய ஆஸ்பத்திரிக்கும் இடையில் பிரதான வீதியில் நிறுவனம் ஒன்றிற்கு 05 பரப்புக் காணி தேவை. விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். வி.இல. 2530, உதயன், யாழ்ப்பாணம். (43236)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1979ஆம் ஆண்டு, திருகோணம் 4இல் செவ்வாய் கிரகபாவம் 45, U.K.B.Sc. (Hon.) Degree, மேலும் படித்த U.Kஇல் தொழில் புரியும் P.R. உள்ள அழகிய பெண்ணுக்கு எக்கவுண்டன், டாக்டர், எஞ்ஜினியா மணமகன் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43271)

இந்து கௌரவ குடும்பம், விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு 40 வயதிற்குட்பட்ட உள்ளூரில் தொழில் புரியும் மணமகன் தேவை. செவ்வாய் 2, 4இல் உள்ளவர்கள் விரும்பப்படுவர். ஓரளவு சீதனம் வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2533, மே/பா உதயன். (43268)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயதுகள் முறையே 23 Canada, 24 France, 28 America, 27,31,44 Australia, 25 Denmark, 24 Germany, 32 Newzeeland இவர்களுக்கு Qualified மணமகன்மார் தேவை. இன்னும் பலதரப்பட்ட, உள்ளூர், வெளியூர் மணமக்கள்மாரும் உண்டு. தொடர்பு: Multy Top Mediaters, 8B, First Floor, Vajira Road, Bambalapitiya, Colombo. 0777 422692. (41597)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (சாவகச்சேரி), 30 வயது, பூசம் நட்சத்திரம், லண்டனில் Computer Science இறுதியாண்டு கற்கும் மணமகனுக்கு லண்டனில் P.R. உள்ள மணமகள் தேவை. சாதகக்குறிப்புடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: வி.இல. 2534 மே/பா உதயன். (43267)

இந்து கௌரவ குடும்பம், 47 வயது, U.K P.R. உடைய, ரேவதி நட்சத்திரம், பாவம் 21 மணமகனுக்கு அழகிய, படித்த, 5 வயது குறைந்த மணமகள் தேவை. குறிப்பு, புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்த மற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பப்படும். திருமதி சு.விமலராணி, 8B 5/1, பெரோா லேன், வெள்ளவத்தை, T.P.: 2361418. (43141)

யாழ். இந்து கௌரவ குடும்பம், அரச உத்தியோகத்தர், 1963, பூசம் 2ஆம் பாதம், செவ்வாய் தோஷம் இல்லை இத்தகைய மணமகனுக்கு 1968 இற்கு பிற்பட்ட பெண்ணைத தாயார் எதிர்பார்க்கின்றார். சீதனம் எதிர் பார்க்கப்படும். தொடர்பு: 077 6673078 (43015)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை. இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## தவறிவிட்டது

உயரப்புலம், ஆனைக்கோட்டை அதிரியாம்பிள்ளை இறப்பியல்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.261370956V) இரு வாரங்களுக்கு முன் யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (43296)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021-4590907.

### விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்குரிய 2 வெளி யன்னல்கள் மூன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **சி.தேவராசா**

பந்தல் சேவை

நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரீ.

(சி-41596) (21-14)

### SKY COMPUTER SYSTEM

No. 109, Kandy Road, Chundikuli, Jaffna.

விற்பனைக்குண்டு

10 GB Hard Disk
128 MB RAM
25,500/-

500MHZ IBM Computer with Multimedia

ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited Soft ware & free dust cover
15" Monitor - 6,500/-
கச்சேரிக்கு அருகில்

(சி-45552) (21-14)

## செயல் திட்டத்துக்கு ஏழு பாடசாலைகள் தெரிவு

தென்மராட்சி, மார்ச்20

இடைநிலைக் கல்வி நவீன மயமாக்கல் செயற்றிட்டம் II இன் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஏழு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுளளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி., மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் இத்திட்டத்தின்கீழ் நான்கு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## மருத்துவப் பரிசோதனை

காரைநகர், மார்ச்20

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் உள்ள முதியவர்களுக்கான மருத்துவ பரிசோதனை ஒன்று கடந்த வியாழக் கிழமை காரைநகர் அரசினர் வைத்திய சாலை உதவி வைத்திய அதிகாரி வே. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், சுவாசம் உட்பட பொதுப் பரிசோதனைகளும் இடம்பெற்றன. இதில் 30 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் பயன்பெற்றனர். (எ-73)

## மகா சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்20

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயிலின் மகா சபைக கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (த-202)

## பிரிவினைக்குத் தாய்வான்...

(9 பக்கத் தொடர்ச்சி)

என்றார். இந்நிகழ்வில் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் பேசிய போது, இந்த அருங் காட்சியகத்தைவிட்டு நீங்கள் வெளியில் வரும்போது ஜெருசலேத்தில் வானத்தைப் பார்ப்பீர்கள். ஜெருசலேத்தின் காற்றைச் சுவாசிக்கையில் ஒரு யூதன் எவ்வித உணர்வைப் பெறுகின்றான் என்பது எனக்குத் தெரியும். உலகத்தில் யூதர்கள் தங்களைத் தற்காத்துக் கொள் ளக்கூடிய இடம் இஸ்ரேல் ஒன்றுதான் என்று கூறினார்.

☆ ☆ ☆

### பனிப்பாறை உருகுவதால் ஆபத்து

இமயமலைப் பிரதேசத்தில் உறைந்து போய்க் கிடக்கும் பனிப்பாறைகள் உருகத் தொடங்கியுள்ளன. இதனால், அந்தப் பனிப்பாறைப் பகுதிகளிலிருந்து ஊற்றெடுத்து ஓடிவரும் ஆறுகளினால் போஷிக்கப்படும் நாடுகள் வருங்காலத்தில் கடும் எதிர்விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரும் என்று ஜெனிவாவிலுள்ள விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

பனிமலைகள் உருகும்போது அங்கிருந்து ஓடிவரும் நீர்ப்பெருக்கின் விளைவாகப் பெரும் வெள்ளப்பெருக்குகளினால் இந்த நாடுகள் பாதிக்கப்படும். பின்னர், ஆறுகள் வற்றிவிடும். பனிப்பாறைகளும் குறைந்துவிடும். இதனால், இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பசி பட்டினிகளுக்கு ஆளாக நேரும் என்று விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர். பனிப்பாறைகளிலிருந்து ஊறறெடுத்து ஓடிவரும் ஆறுகளினால் போஷிக்கப்படும் சீனா, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளே இவ்வாறு எதிர்காலத்தில் பாதிக்கப்படவிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். ✻

உ

### ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**



கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன் - மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம் - கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது.

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No. 5, Pillaiyar Inn,**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839 Mobile: 0776 923623.

(சி-41558)(33-11-45)

### VACANCY

**Save the Children in Sri Lanka**
Kilinochchi

Save the Children in Sri Lanka is seeking Candidates to fill the following position at it's Kilinochchi Office.

- Shelter Officer
- Livelihoods Officer
- Livelihoods Field Officer
- Agriculture Field Officer
- Administrator
- Receptionist / Radio Operator
- Translator
- Logistics Assistant

Please submit CVs to *The SCISL Office, 142, Kandy Road, Kilinochchi.* No later than 24.03.2005 and include contact details. Selected candidates will be called for interview from 29.03.2005.

**Emergency Programme Manager,**
**Save the Children,**
142, Kandy Road, Kilinochchi.
T.P. No. 021 - 2285797
Fax No. 021 2285983 (C-41590)(21-11-14)

### யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்


**THILAKSHAN ENTERPRISES(PVT)LTD**

KUEHNE & NAGEL யாழ். மண்ணில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட இந்நிறுவனம் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை 381, கே.கே.எஸ்.றோட், (சிவன் கோயில் அருகில்) முதலாம் மாடி என்ற முகவரியில் ஆரம்பித்துள்ளோம்.

**வெளிநாடுகளுக்கு உங்கள் பொருள்கள், அவசர கடிதங்கள் அனுப்பவேண்டுமா?**

✻ விமானம் - ✻ கப்பல் மூலம் எந்தப்பொருள்களானாலும் வெகு விரைவாக அனுப்பிவைக்கப்படும். விவரங்கள் அறிய வேண்டுமா?



உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**திலக்ஷன் என்ரபிறைசஸ்**

381, கே.கே.எஸ் றோட், (சிவன் கோயில் அருகில் ), யாழ்ப்பாணம்.
☎ 077 6176863

குனே + நாகல் முதலாம் மாடியில்

(43267) (53-11-17) [24 மணிநேர சேவை]

# இந்தியாவின் போலி முகத்திரையை கிழித்தெறிந்து ஆகுதியாகிய அன்னை



ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரியதொரு தியாகத்தை அர்ப்பணிப்பை செய்து வானளாவிய உயரத்திற்கு உயர்ந்து விட்டவர் தியாகி அன்னை பூபதி அவர்கள்.

விடுதலை விருட்சமாக அஹிம்சைப் போராட்டத்தின் உன்னத சக்தியாக - என்றும் எம் மனக் கண்ணில் தோன்றிக் கொண்டிருப்பவர் அன்னை பூபதி. 17ஆண்டுகள் கடந்தாலும் ஈழத் தமிழர்கள் உயிரோடு இருக்கும் வரை ஒவ்வொருவரின் உதடுகளும் உச்சரித்துக் கொண்டிருக்கும் உன்னத பெயர் அன்னை பூபதி.

மட்டு.மாவட்டத்திலுள்ள நாலவன் கேணி என்னும் கிராமத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் அன்னை பூபதி. அவருடைய கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த இராணுவத்தினரின் அக்கிரமங்களையும் அநியாயத்தையும் கண்டு கொதித்தெழுந்து கொள்கை வழி நின்று போராடினார்.

போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்று வரையும் எத்தனையோ இழப்புக்களையும், வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழர்களில் பூபதி அம்மாவும் விதிவிலக்கானவர் அல்ல. ஆம் அவரது குடும்பத்தில் இரு புதல்வர்கள் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**என்.கே.துரைசிங்கம்**

இந்த இழப்புக்களும் படையினரின் நெருக்கடிகளும் பூபதி அம்மாவை வீரப் பெண்ணாக எழுச்சியுடன் எழச் செய்தது. இதனால் நாவலன் கேணி கிராமத்தையே கூட்டி அன்னையர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக சிறிலங்கா படைகளின் அநியாயத்தையும் அக்கிரமங்களையும் தட்டிக்கேட்டார்.

சிறிலங்கா இராணுவத்துக்கு எதிராக அம்மா அவர்கள் கிளர்ந்தெழுந்த போது தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் 1987 ஜூலை 29ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ காந்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த வலையில் விழுந்து விடாமல் ஈழத் தமிழர் போராட்டம் விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் இந்தியப் படைகளின் கால்கள் தமிழீழமெங்கும் பதிந்தன.

அத்துடன், ஈழத்தமிழ்களின் போராட்டத்தினை நசுக்கும் நோக்குடன் இந்தியப் படைகள் செயற்படத் தொடங்கின. இதனால் இந்தியப் படைகளுடன் மோதவேண்டிய நிலை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது.

ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல பலநூறு நாள்கள் இந்தியப்படை- விடுதலைப் புலிகள் யுத்தம் நீடித்தது. ஒரு சிகரெட் புகைத்து முடிவதற்கு முன் விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்று தப்பான கணக்கு போட்டுக் கொண்டு போரிட வந்த இந்திய இராணுவத்தின் பல தலைகள் கொய்யப்பட்டன.

## நினைவுதினம் நேற்று ஆரம்பம்

இதனால் ஆத்திரப்பட்ட இந்தியா மீண்டும் மீண்டும் தனது படைகளைக் குவித்து ஈழத் தமிழரை அடக்கியொடுக்கி அடிமைப்படுத்த நினைத்தது. இதனால் சுதந்திரதாகத்துடன் எழுந்து நின்று 'புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யுங்கள், புலிகளுடன் பேச்சு நடத்துங்கள்' என்று இந்திய அரசுக்கு கோரிக்கைகளை விடுத்து 1988ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி மட்டு. அமிர்தகழி மாமாங்க பிள்ளையார் ஆலய வளவில் சாகும் வரை உண்ணாவிரதப் போரில் குதித்தார் அன்னை பூபதி அம்மா அவர்கள்.

ஒரு மாதம் வரை உணவு எதுவுமின்றி தனது இலட்சியத்தில் விலகாது நின்று போராடினார். உணர்விழந்து நாவரண்டு உடல் மெலிந்த போதும் அம்மா தனது அகிம்சைப் போரைத் தொடர்ந்தார். இந்திய அரசு அம்மாவின் போராட்டம் குறித்து மௌனம் சாதித்தது.

அன்னை அவர்களின் இந்தப் பற்றுதியான போராட்டத்தினால் உலகில் இந்தியாவிற்கு தலைகுனிவு ஏற்பட்டது.

இதனால் இப்போராட்டத்தை தடுத்து நிறுத்தும் நோக்குடன் அம்மா அறப்போர் நடத்திய மேடைக்கு வந்து உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு மருட்டியும், வெருட்டியும் பார்த்தனர். அம்மா அசையவில்லை, மனம் இழகவில்லை. தனது இலக்கில் குறியாக நின்றார். இதனால் மேலும் ஆத்திரமடைந்த இந்தியப் படையினர் அம்மாவின் மேடைக்கு அருகில் நின்று துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தது. அம்மாவிற்கு உதவியாக இருந்தோரை விரட்டி வந்தனர். ஆனால் பூபதி அம்மா இவற்றுக்கெல்லாம் அஞ்சவில்லை.

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' என்று இந்திய இராணுவத்தை துச்சமாக மதித்தார் அம்மா.

அன்னையின் சத்தியப்போர் பட்டி தொட்டியெங்கும் பரவியது மக்கள் அலைகடல்வெள்ளமென திரண்டெழுந்து அன்னைக்கு ஆதரவு அளித்தனர். இந்த மக்கள் வெள்ளத்தை துப்பாக்கியினால் தடுத்து நிறுத்த முயன்ற இந்திய இராணுவம் தோல்வி கண்டது.

இந்திய அரசின் போலிமுகத்திரையை கிழித்தெறிய வைத்து அன்னை பூபதி தனது 58 - ஆவது வயதில் தனது கோரிக்கைகள் எதுவும் நிறைவேறாத நிலையில் ஆகுதியானார்.

ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு புது அத்தியாயமாக அன்னை பூபதி அவர்களின் இந்தப் போராட்டம் அமைந்துவிட்டது. ✦

# உயர்விலும் தாழ்விலும் இறைசித்தம் ஏற்போம்

தவக்காலத்தின் உச்சக் கட்டமான வாரம் இவ்வாரம். குருத்து ஞாயிறுடன் திருப்பாடுகளின் வாரம் ஆரம்பமாகின்றது. இயேசு கழுதையின் மேல் பவனி வந்து தன்னைச் சமாதானத்தின் அரசர் என்று அறிக்கையிடுகிறார். தங்களை விடுவிப்பவராக நம்பி யூத மக்கள் தங்கள் மேலாடைகளையும், மரக்கிளைகளையும் வீதியெங்கும் பரப்பி இயேசுகிறிஸ்துவை எருசலேம் நகருக்குள் வரவேற்றார்கள். முதல் காட்சியில் ஓசன்னா பாடிய மக்கள் அடுத்த காட்சியில் ஒழிக என்று கோஷமிட்டனர் என்பதை இன்றைய குருத்தோலை பவனி நினைவுபடுத்துகிறது.

**தவக்காலச் சிந்தனை**

இயேசு தன்னையே ஓர் ஊழியனாக்கி பிறர் குற்றங்களுக்காக, குறிப்பாக நம் குற்றங்களுக்காக பாடுகளை அனுபவித்தார். தம் உயிரையே கையளித்தார். பாஸ்கா பலி நிறைவேற்றுபவராகவும், பலிப் பொருளாகவும் செயல்பட்டு புதிய அர்த்தம் தந்து எல்லோருக்கும் சொந்தமாகிறார். இயேசுவின் பாடுகள் இறப்பு உயிர்ப்பு இவைகள் இவர் மனித குலத்தின் மேல் கொண்ட உச்சக் கட்ட அன்பின் வெளிப்பாடாகும்.

குழந்தைப் பருவத்திலேயே ஏரோதைக் கலங்கச் செய்தவர். காற்றையும் கடலையும் கணப்பொழுதில் கட்டுப்படுத்தியவர். நோய் அனைத்தும் போக்கி இறந்தவருக்கும் உயிர் கொடுத்தவர். சிலுவையிலே நமக்காக இறந்திருக்கிறார். அதுதான் அவரது அன்பு, பாருலகைப் படைத்த தந்தை கடவுளின் மகன் இயேசு பிறந்ததும், அடக்கம் செய்யப்பட்டதும், மற்றவருக்குச் சொந்தமான இடங்களில் அழகான புல்வெளிகளைப் படைத்தவருக்குக் கிடைத்ததோ முள்முடி, மரங்களைப் படைத்தவருக்கு அந்த மரங்களே சிலுவைகளாயின. அவர் படைத்த வானம்கூட அவர் இறக்கும்போது இருண்டுவிட்டது. இப்படிப்பட்ட சாவை ஏற்ற அன்பை அளந்தறிய யாரால் கூடும்? தன்னைக் காறி உமிழ்வதைத் தாங்கி, பிய்ப்பவருக்குத் தாடியையும் கன்னங்களையும் காட்டி இறைத்தன்மையிலிருந்து இறங்கி வந்து இவ்வுலகில் மாண்ட இயேசுவின் அன்பை மிஞ்சுவது ஒன்றுமில்லை.

**முப்பத்தொன்பதாம் நாள்**

வாழவின் சுமைகளாலும், இயற்கையின் சீற்றங்களாலும், அடக்குமுறை, வறுமை, போரின தாக்கங்களாலும் நொந்துபோன பல்லாயிரம் மனித உள்ளங்கள் பல்வேறு உதவிகளை எதிர் பார்த்து எம் அயலிலும் சமூகத்திலும் வாழ்கிறார்கள். அன்பின்றி, ஆதரவின்றி, ஆறுதலின்றி, சமாதானமின்றி கைவிடப்பட்ட நிலையில் வாழ்வோர் எம்மிடையே அனேகர் உளர். எம்மை அன்பு செய்வோருக்கு மட்டுமன்றி பகைவருக்கும் பலனை எதிர்பாராது பணிபுரிவோம். உறவுகளைப் பலப்படுத்துவோம். உயர்விலும் தாழ்விலும் இறைசித்தத்தை ஏற்போம்.

**அருள்திரு ரூபன்மரியாம்பிள்ளை**

| | | | |
|---|---|---|---|
| வெ. ▲ சூரி. புத.ரா. | | | சந். சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| செவ். | | | |
| | | | வியா. கே |

# இந்த வார இராசி பலன்

## 20.03.2005 – 26.03.2005

**மாற்றம்:**
20.03.2005 இல் புனர்பூசம் 3ஆம் பாதம் மிதுனராசியில் சந்திரன் நிற்கும்

### மேடம்

புதிய திட்டங்கள், தொழில் ஸ்தானத்தில் உருவாகும். இவ வாரம சோதனை நிறைந்த காலமாகும். அத்துடன், செலவுகள் கட்டு மீறும். உறவினர் உதவி செய்வார்கள் என எண்ண வேண்டாம். குடும்பத்தாரின் முன்னேற்றத்திற்காக ஓடியாடித்திரிவீர்கள். வயிற்று வருத்தம், மலச்சிக்கல், வாய்வுத் தொல்லைகள் வரும். தொழில், பொருள்சிந்தனையால் அடிக்கடி பயம் ஏற்படும். சகோதரர்கள் வீண் பழி சுமத்துவார்கள். காவல் துறையினர் இலாபம் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வெள்ளி.

### இடபம்

குடும்பத்தில் குழப்பநிலை தோன்றும். எதிர்ப்பாரால் பொருள் இழப்புக் கொடுக்கும். சில சமயம் களவுகள் கூட நடக்கலாம். இடமாற்றம், பிரயாணங்களால் வீண் தொல்லைகள் வர இடமுண்டு. ஆனால், புதிய பொருள் ஒன்று வந்துசேரும் பலன் உண்டு. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வியாழன்.

### மிதுனம்

நெருப்பு, நீரால் உடல்நிலை பாதிக்கப்படலாம். படபடப்பு உணர்ச்சி வசப்படுதலால் இழப்பு வரலாம். பணவரவு உண்டு. குடும்பத்தினருக்கு கஷ்டங்கள் வருவதனால் அவதிகள் ஏற்பட இடமுண்டு. பணவரவு சுமாராக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும். கால உளைவு, நாரிநோ, சளித்தொல்லைகள் ஏற்படலாம். மாமன், மச்சான், மச்சாள் வரவு மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வியாழன்.

### கடகம்

தாயாருக்கு, தாய்வழியினருக்கு நல்லதல்ல. நீதிக்கான போராட்டம் பிறருக்கு உதவும் போக்கு உங்களை ஆட்கொள்ளும், நீசர்களின் சேர்க்கை துன்பத்தைத் தரும். கால் உளைவு, முதுகுநோ கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். சகோதரர்களுக்கு நன்மைகள் ஏற்படும். பத்திரிகைத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வியாழன்.

### சிங்கம்

உங்களை வருத்துபவர்கள். உங்களால் உருவாக்கப்பட்டவர்கள். உங்களை மதியாமல் செயற்படுவதனால் மனம் புழுங்குவீர்கள். சொந்த - கிட்டிய உறவினர் கருத்து வேற்றுமைப்படுவர். பணவரவு அதிகரிக்க இடமுண்டு. குடும்பத்தினருக்காகப் பல முயற்சிகள் முன்னெடுப்பீர்கள். தாய்வழியினருக்கு நல்லதல்ல. தொழில் ஸ்தானத்தில் புதிய கொள்கைகளைப் புகுத்த விரும்புவீர்கள். வாய்வுத் தொல்லை, பித்த வருத்தங்கள்வருத்தும். வியாபாரிகளுக்கு புதிய வருமானம், குருத்துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, புதன்.

### கன்னி

குடும்பத்தில் கவலைக்குரிய சம்பவங்கள் ஏற்படும். தொழில் நிலையத்தில் ஒரு மந்தநிலை ஏற்படும். திட்டமிட்டபடி நடக்காது. மாமன் வழியினருடன் கருத்து வேற்றுமை ஏற்படும். எதிர்ப்பாலாருக்கு நல்லதல்ல. இரத்த அமுக்கம் வரும். அடிவயிறு நோய் வருத்தும். அவசரப்படாது தொழில் செயற்பாடுகளைச் செய்து வாருங்கள். இடமாற்றத்திற்கு அவசரப்படவேண்டாம். தொழில்நுட்பத் துறையினர்கள் ஆசிரியர்கள் அதிக முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, புதன், வெள்ளி.

### துலாம்

இது நீதி இராசியாகும். சட்டப்படி நடக்க முனைவீர்கள். சட்டதிற்காக - நீதிக்காக வாதிடுவீர்கள். பலரின் அவமானப் பேச்சு, சூழ்ச்சிக்கு மத்தியிலும் நின்று போராடுவீர்கள். பெற்றபாசம் உங்களை அடிக்கடி துடிக்க வைக்கும். பாசத்தில் பணத்தைப் பார்க்க மாட்டீர்கள். செலவு அதிகம், கடமை பெரிதென நிறைவு செய்வீர்கள். கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். சட்டத்தரணிகள், வியாபாரிகள் அதிக வருமானத்தை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, புதன், வெள்ளி.

### விருச்சிகம்

நடப்பது நடக்கும் என்ற சித்தம் உங்களுக்கு இருக்கும். நடவாததும், நினைக்காததும் கூட நடக்கும். தொழில் முயற்சியில் நன்மைகள் அதிகரிக்கும். பொருள்வரவு அதிகரிக்கும். தெய்வத்திருப்பணிகள் தொடர வாய்ப்பு உண்டு. நண்பர்கள், உறவினர்களுக்காக அதிக தியாகங்களைச் செய்வீர்கள். கால் உளைவு, தலைச்சுற்று வரும். இரும்பு வாகன வியாபாரிகள் முன்னேற்றம் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.

### தனுசு

சங்கீதஞானம், தொலைக் காட்சிப்படம் என அலைவீர்கள். தொழில்த்துறையில் ஒரு மந்த நிலை கொடுக்கும். வீடுமனை, வாகனம் சுகம் கொடுக்கும். தெய்வத்திருப்பணியில் உங்களைச் செலுத்திப் பலகுறைகள், எதிர்ப்புக்களுக்கு மத்தியல் நிறைவு செய்வீர்கள். கால் உளைவு கொடுககும். கற்பனை வளம் பெருகினாலும் பணவரவு அதிகம் இருக்காது. தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிஷ்டநாள்கள்:* ஞாயிற்று, வெள்ளி.

### மகரம்

வெளிநாடு எனச் சென்று பணத்தை இழந்து விடாதீர்கள். அதிக கோபத்தால் பல இழப்புக்களைச் சந்திப்பீர்கள். பக்கத்து வீட்டுக்காரர் உங்களைப் பழி வாங்கப் பார்த்திருக்கிறார். எனவே, கவனமாக இருக்கவும். பணவரவு அதிகரித்தாலும் செலவு அதிகம் இருக்கும். அதனால் மன அமைதி இருக்காது. கொண்டாட்டங்களால் அலைச்சலுண்டு. கால உளைவு கொடுக்கும். தொழில்நுட்பத்துறை, கடல்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, வெள்ளி.

### கும்பம்

கையில் கிடைத்ததைக் கொண்டு காலத்தைச் சமாளியுங்கள். தொழில் ஸ்தானத்தில் வரவேற்பு இருக்கும். பணவரவு அதிகரிக்கும். இடமாற்றங்களைச் சமாளிக்கவும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். பொருள் களவு போக இடமுண்டு. தூரதேசச் செய்திகளால் மன ஆறுதலுண்டு. கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். புதிய பொறுப்புக்கள் வந்து மன ஆறுதல் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, வியாழன், வெள்ளி.

### மீனம்

தொழில் ஸ்தானத்தில் பொறுபற்றவர்களால் அவதிகள் ஏற்படும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். பணவரவு அதிகரிக்கும். தொழிலால் அதிக களைப்பு வரும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். அயலவர்கள் வீண்பழி சுமத்துவார்கள். மாமன், மச்சான் உதவிகள் கிடைக்கும். தெய்வத் தொண்டு, பொதுத் தொண்டு ஆலயத் திருப்பணி செய்வீர்கள். கால்நோ கொடுக்கும். வியாபாரிகளுக்கு நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்கள்: *ஞாயிறு, வெள்ளி.*

**மகாதேவா ஜோதிடம்**

# மரண அறிவித்தல்கள்

## சண்முகநாதன் ஐயா வைத்தியநாதன் ஐயா

(இருபாலை கிழக்கு, இலிங்கப் பிள்ளையார் கோயில் அர்ச்சகரும் பரிபாலகரும் கோப்பாய் மகா வித்தியாலய ஆசிரியர்)



இருபாலை, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கு, இலிங்கப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் வைத்தியநாதன் ஐயா 16.03.2005 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் - திருநீலநாயகி தம்பதிகளின் செல்வப் புதல்வனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் சூரியகுமாரியின் (வவா) அன்புக் கணவரும் லிங்கவிநாயகியின் பாசமிகு தந்தையும் கேசவன் ஐயாவின் பாசமிகு சிறிய தந்தையும் பாஸ்கரன் ஐயா, வரதாம்பிகை, காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் கிருஷ்ணவேணி (கனடா), வேதநாயகி (ஆஸ்திரேலியா), கற்பகநாதன் (கனடா), சுசீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கெங்காமலர், வருணநாதன் (சுகாதார வைத்திய பொறுப்பதிகாரி, மானிப்பாய்), சற்குணதேவி, யோகநாதன் (கனடா), சந்திரலிங்கம் (ஆஸ்திரேலியா), இராஜராஜேஸ்வரி (கனடா - மங்களம்), பவித்திரா (கனடா), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சூரியகுமார், உதயகுமாரி, தேவகுமார் (லண்டன்), தேவகுமாரி, சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் சயந்தன், பார்த்தீபன், சரவணன், மயூரன், மயூரி ஆகியோரின் சிறிய தந்தையும் ஜசர்மினி, சண்முகி, கவிதரன், கர்சனன் ஆகியோரின் பெரிய தந்தையாரும் சற்சொரூபன், கஜானன், திரியம்பகி, ஹம்ஸத்வனி, கௌரீசன், விதுஜா, மேனகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இலிங்கப் பிள்ளையார் கோயில்,*
*இருபாலை கிழக்கு,*
*கோப்பாய்.* (43307) (39-14-26)

தகவல்:
மனைவி
தொ.பே. 0777- 676263.

## சைமன்சிங்கோ கமலாம்பிகை



சபாபதி லேன், பிரம்படி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட சைமன்சிங்கோ கமலாம்பிகை 18-03-2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இராசலட்சுமி தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சைமன்சிங்கோவின் அன்பு மனைவியும் துரைசிங்கம், கமலாதேவி, காசியானந்தன், சக்தியானந்தன், தயாபரி, சிவானந்தன், கமலினா, உசாநந்தினி, சாந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் விங்சன், ஜேசுதாசன், சுகவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, புவியரசன், புவியரசி, புவிதா, காந்தரூபன், கலைச்செல்வி, ஜென்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20-03-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதி லேன்,*
*பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில்.* (43294)(24-14-26)

தகவல்:
S.துரைசிங்கம்
(மகன்).

## தமிழ்ச்சேவை ஆலோசகராக திருஞானசுந்தரம் நியமனம்

கொழும்பு,மார்ச்20

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையின் சிரேஷ்ட ஆலோசகராக வீ.திருஞானசுந்தரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பொறுப்புகளை வகிக்கும் அவர், தமது புதிய பொறுப்புகளை நேற்று ஏற்றுக்கொண்டார். (த-க)

## சிறப்புற நடைபெற்ற சிலுவைப் பாதயாத்திரை

தென்மராட்சி,மார்ச்20

சாவகச்சேரி கத்தோலிக்க பங்கு மக்களின் சிலுவைப் பாதயாத்திரை கடந்த வெள்ளியன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

சாவகச்சேரி கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலயத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் சிலுவைகளைச் சுமந்த வண்ணம் சாவகச்சேரி நகர்ப்பகுதி ஊடாகச் சென்றனர்.

தேவாலயப் பங்குத்தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் இந்தப் பாதயாத்திரையில் கலந்துகொண்டனர். (எ-117)

## திட்டக் கிராமம் தெரிவு

வலிகாமம்தெற்கு,மார்ச்20

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் உள்ள ஈவினை கிழக்கு கிராமம் போரூட் நிறுவனத்தின் ஏழாவது திட்டக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் பிரதிநிதி இ.சிவநாயகம் தெரிவித்தார்.

மேற்படி கிராமத்து மக்களுக்கு வேண்டிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேவையான குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்றும் - அவர் கூறினார். (எ-152)

## மிதிவெடிகளை அகற்றுவதற்குத் திட்டம்

வலிகாமம் தெற்கு,மார்ச்20

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஆறு இடங்களில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் சந்தையின் பின்புறம், சுன்னாகம் அந்தோனியார் ஆலயச் சுற்றாடல் பகுதி, நிலாவரை நாவலடிப் பகுதி, குப்பிளான் தெறகு, புன்னாலைக்கட்டுவன் ஸ்ரீ துர்க்காதேவி கோயில பகுதி, உரும்பிராய் மேற்கு ஆகிய இடங்களில் கண்ணிவெடிகள் காணப்படுகின்றன.

யாழ்.குடாநாட்டில் 98 இடங்களில் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் விரைவில் ஈடுபடவுள்ளனர்.

முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் சுன்னாகம் சந்தையின் பின்புறம், சுன்னாகம்_ அந்தோனியார் ஆலயச் சுற்றாடல் பகுதி என்பன நான்காம், ஐந்தாம் இடங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி தெரிவித்துள்ளார். (த-152)

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
## மணல் விநியோக அறிவித்தல்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கும் அவசர வேலைத் திட்டத்திற்கு மணல் விநியோகிக்க வேண்டியுள்ளதால் நாளை (21-03-2005) திங்கட்கிழமை நிறுவனங்களுக்கான மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. திங்கட்கிழமை குறிப்பிட்ட மணல் அனுமதிப்பத்திரம் உடையவர்களுக்கு அடுத்தவாரம் திங்கட்கிழமை விநியோகம் நடைபெறும்.

- நிர்வாகம்.

மணல் விநியோகப் பகுதி, உ.பயகதிர்காமம். (சி-41593)(26-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
செல்வி தி.மனோரஞ்சினி அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி திலகவதி திருநாவுக்கரசு

அவர்கள் 18-03-2005 வெள்ளிக்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் கவலையடைகிறோம். பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், (26-14)
(43312) யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூ.சங்கம் (வ-து), யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



திருமதி

## கமலேஸ்வரி கணேசலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, வண்.நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்)

இல.68, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 1996இன் பின்னர் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி கணேசலிங்கம் அவர்கள் 13-03-2005 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் அநுராதபுரம் கல்வித்திணைக்கள முன்னாள் கணக்குப் பதிவாளரும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் வர்த்தக ஆசிரியையாகவும் பின்னர் செம்மலை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், யா/கதீஜா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், யா/புனித ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியையாகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றவரும் காலஞ்சென்ற அரசரத்தினம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) - திருமதி பாக்கியம் (ஆஸ்திரேலியா) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த சு.கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற சாவகச்சேரி கோட்ட முதன்மை ஆசிரியர், கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், யா/சன்மார்க்க மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் தாக்ஷாயினியின் பாசமிகு தாயாரும் கமலேஸ்வரன் (ஆஸ்திரேலியா), சிவாஜி (ஆஸதிரேலியா), சிவாஜினி (ரேவதி - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஹேமா (ஆஸ்திரேலியா), பத்மினிதேவி (கொழும்பு), ஸ்ரீகாந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை பெசன்ட் நகர் மின் மயானத்தில் நடைபெறும்.

No: 12, T.M.M. STREET,
திருவான் மியூர், சென்னை, இந்தியா.
Tel. 009144 244 69759. (சி-41592) (26-14)

தகவல்:
ச.சதானந்தன்,
வெள்ளவத்தை.


## யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை

*தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் – அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.*

உங்கள் தொடர்புகளுக்கு } இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல்: 021-2227917



## வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

## Foundation Degree Programme

**UK, Canada** போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான **Student Visa** க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்குக் வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

எமது சர்வதேச இணைப்புகளும் அங்கீகாரங்களும்:

THE UNIVERSITY OF BUCKINGHAM · Sutton Coldfield College · Cornwall College · St James's Park College

பாடப்பரப்பு
தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கைநெறி

பாடநெறிக்காலம்
திங்கள் முதல் வெள்ளி வரையிலான மூன்று மாதங்களைக் கொண்ட முழு நேரப்பாடநெறி

வெளிநாட்டில் உயர்கல்விக்கான **Student Visa** க்களைப் பெற்றுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் **London Institute** இனால் மேற்கொள்ளப்படும்.

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk


## நூல் அறிமுக விழா

பத்திரிகையாளர் அமரர் ராஜஸ்ரீகாந்தன் பற்றி எழுத்தாளர் முருகபூபதி எழுதிய 'ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள்' என்னும் நூலின் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணிக்குத் தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம.குட்டித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுப்பகிர்வுகளை கலாநிதி ஏ.எவ். சிவலிங்கராசா, கலாநிதி த.கலாமணி, கலாநிதி செ.திருநாவுக்கரசு, எழுத்தாளர் தெணியான் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (த-203)

# புகைப்படப் பிரதியாக்கம்: சுப்பஸோ நவீன மினிலாப்பை அறிமுகம் செய்கிறது

## இன்று கொழும்பில், ஓரிருதினங்களில் யாழ்ப்பாணத்தில்

புகைப்படங்களைப் பிரதி செய்யும் துறையில் பிந்திய தொழில்நுட்பத்துடன் கூடிய நவீனத்துவமான டிஜிற்றல் இயந்திரத்தைக் கொண்ட 'மினிலாப்' ஒன்றை சுப்பஸோ நிறு





வனம் யாழ்ப்பாணத்தில் ஓரிருதினங்களில் நிறுவவுள்ளது.

அதி நவீனமானதும் மிகத்துல்லியமாக இரண்டே நிமிடத்தில் புகைப்படங்களைப் பிரதி செய்யக் கூடியதுமான இந்த நவீன இயந்திரம் (Fronlier 570) இன்று இந்த நிறுவனத்தால் கொழும்பில் நிறுவப்படுகின்றது.

இயந்திரத்தை நிறுவும் ஆரம்பவிழா இன்று இலக்கம் 206, ஜெம்பட்டா வீதி, கொழும்பு -13 என்ற முகவரியிலுள்ள சுப்பஸோவின் கிளை அலுவலகத்தில் இடம் பெறவிருக்கின்றது.


இந்த நவீன இயந்திரம் மூலம் 12x18 அங்குல அளவில் புகைப் படங்களைப் பிரதிசெய்ய முடியும் என்று சுப்பஸோ நிறுவன உரிமையா ளர் தெரிவித்தார்.

கொழும்பில் நடக்கும் ஆரம்ப விழாவை யடுத்து ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணத்திலும் இதேவகையான இயந்திரத்தை நிறுவவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (3)



புதிதாக அறிமுகஞ்செய்யப்பட்ட நவீன டிஜிற்றல் இயந்திரம்

# இலங்கை வங்கியின் சேமிப்புப் பிரிவு



இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் சேமிப்புப் பிரிவினை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

பாடசாலை மாணவர்களுக்குச் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கை வங்கி தனது சேமிப்புப் பிரிவுகளை பாடசாலைகளில் ஆரம்பித்து வருகின்றது.

புனித பத்திரிசியார் கல்லூரி திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றில் சேமிப்புப் பிரிவுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் இந்தச் சேமிப்புப் பிரிவுகளை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட முகாமையாளர் இ.நடராசலிங்கம், பிரதான முகாமையாளர் எஸ்.விக்னராஜா, வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் வி.ஏ.அருமைநாயகம், வங்கி சேமிப்புப் பிரிவு இணைப்பதிகாரி வி.ஆர்.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (3)

# கணனிப் பாடநெறி

இந்தியாவைத் தளமாகக் கொண்ட CADD நிறுவனம் இலங்கையில் இயங்கிவரும் ஓபன் சிஸ்டமஸ் டெக்னோலொஜீஸ் பிரைவேட் லிமிட்டெட்டுடன் இணைந்து ஓட்டோகட் (Auto Cad) மற்றும் த்ரீடீ எஸ் மக்ஸ் (3Ds Max) என்ற கணனிப் பாடநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பாடநெறிகள் பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோருக்கும் விளம்பரம் தயாரிப்பவர்களுக்கும் உகந்ததாகும்.

இப்பாடநெறிகளைப் பயில விரும்புவோர்களைத் தெரிவுசெய்யும் பரீட்சை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது. இப்பரீட்சை கட்டணமின்றி நடத்தப்படும். இதுதொடர்பான மேலதிக விவரங்களைப்பெற 0714732668 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மகேஸ் ஹெப்பிட்டியவைத் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (3)



வங்கிகளில் ஓய்வூதிய உரிமையை வென்றெடுக்கும் அமைப்பின் கலந்துரையாடல் ஒன்று யாழ். பல நோ.கூ.சங்கக் கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்ட மக்கள் வங்கி இணைப்பாளர் எஸ்.சுபசீலன் தலைமை உரையாற்றுவதையும் அருகில் அமைப்பின் தலைவர் இலங்கை வங்கியைச் சேர்ந்த புஷ்பக ரணசிங்க, தேசிய சேமிப்பு வங்கியைச் சேர்ந்த ஆர்.இன்பராஜ், மக்கள் வங்கியைச் சேர்ந்த தம்மிக கத்தபத்து ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (3)

# சொகுசு சைக்கிளை உருவாக்கியுள்ளார் சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயசீலன்



## ஆஸ்திரேலிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில்

அன்றாடம் தொடர்புசாதனங்கள் மூலம் பல வேறு நாடுகளினதும் ஆள்களினதும் கண்டுபிடிப்புக்களைக் கேட்டு வியந்து கொண்டிருந்த எமக்கு இன்று ஒரு புதுவிருந்து அளித்திருக்கின்றார் நம்மவரான நவரத்தினம் ஜெயசீலன்.

எங்களாலும் சாதிக்கமுடியும் என்றும், புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கமுடியும் என்றும் நிருபிப்பதற்காக ஆஸ்திரேலிய நாட்டில் அண்மையில் தயாரிக்கப்பட்ட சொகுசு சைக்கிளை நமது நாட்டிலேயே தனது சொந்த முயற்சியிலேயே உருவாக்கியுள்ளார் இவர்.

சாவகச்சேரி பழைய நீதிமன்றக் கட்டடத்திற்கு முன்பாகவுள்ள 'ஜெயம்' சைக்கிள் கடையொன்றிலேயே இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஒருவர் பயணம் செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த சொகுசு சைக்கிளில் வித்தியாசமான முறையில் சில்லுகள் பொருத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

சிறுவர்களுக்கென உருவாக்கப்படும் சைக்கிளின் கான்ரில், ஒரு சில்லு ஆகியவற்றுடன் சாதாரண சைக்கிளின் ஒரு சில்லும் பொருத்தப்பட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

வளைக்கப்பட்ட உருளைக் கம்பியொன்றில் இந்த இரண்டு சில்லுகளும் பொருத்தப்பட்டு அந்த வளைத்த கம்பியிலேயே இருக்கைக்குரிய கம்பி வளைக்கப்பட்டு இருக்கை பொருத்தப்பட்டமை தயாரிப்பாளரின் புதுவித சிந்தனை வடிவத்தைக் காட்டி நிற்கின்றது.

சைக்கிளின் முன் சில்லிலேயே அதனை இயக்கும் செயற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது, சாதாரண சைக்கிளைப் போல் அல்லாது பெடல்கள் இதில் முன் சில்லிலேயே பொருத்தப்பட்டுள்ளன.

இந்தச் சொகுசு சைக்கிளை உருவாக்கிய தயாரிப்பாளரைப் பாராட்டும் நோக்கோடும் அதைப் பற்றிய மேலதிக தகவல்களைப்



தாம் தயாரித்த சைக்கிளுடன் ஜெயசீலன்.

பெறுவதற்காகவும் அவரை நேரில் சந்திக்கச் சென்றோம்.

கடைக்குள் திருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த ஏனைய சைக்கிள்களுடன் அந்த சொகுசு சைக்கிள்களும் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சைக்கிளை எம் கண்களால் ஆராய்ந்த படியே தயாரிப்பாளரிடம் உரையாடினோம்.

அவர் தனது சைக்கிள் உருவாக்கம் பற்றியும் தனது ஆர்வத்தைப் பற்றியும் கூறியபோது-

நவம்பர் 7 ஆம் திகதிய சுடர்ஒளிப் பத்திரிகையில் பிரசுரமான ஆஸ்திரேலியாவின் புதிய சொகுசு சைக்கிளின் படத்தைப் பார்த்ததும் இதேபோன்று ஒரு சைக்கிளை உருவாக்கினால் என்ன? என்ற கேள்வியும் ஆர்வமும் என்னுள் எழுந்தன.

அந்த ஆர்வத்தின் பயனாக எனது கடைக்குள் இருந்த உபகரணங்களைப் பயன்படுத்தி இந்தச் சைக்கிளை உருவாக்கினேன்.

நான் சைக்கிள் திருத்தும் கடையை நடத்தி வருவதால், பகலில் எனக்கு இந்த முயற்சிக்கான நேரம் கிடைப்பதில்லை. எனவே, இரவு 9 மணிக்குப் பின்னர் தான் இந்த சைககிளுக்கான உருவாக்க வேலைகளைச் செய்தேன். எனது சிந்தனையோடு கடமையாற்றும் ஏனையோரின் எண்ணங்களையும் கருத்தில் கொண்டே இந்த சைக்கிளை உருவாக்கினேன் என்று கூறினார்.

முன் சக்கரத்தினையே இதனை இயக்குவதற்குப் பயன்படுத்துவதால் விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதே எனக் கேட்டோம்.

சைக்கிளை இயக்கிச் சவாரிசெய்து காட்டிய பின்னர் அது பற்றிக் கூறினார்.

சாதாரண சைக்கிளைச் செலுத்தக் கூடியவர்களால் இந்தச் சொகுசு சைக்கிளை இலகுவாகச் செலுத்தமுடியும். இந்த சைக்கிளில் இரு சில்லுகளையும் இணைக்கும் செயின் இல்லாததால் வேகமாகச் செலுத்தினாலும் பெடலின் உதவியுடன் வேண்டும்போது திடீரென நிறுத்தமுடியும் - என்றார்.

இந்தச் சொகுசு சைக்கிளை விற்பனைக்காக உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா எனக் கேட்டபோது -

இந்தச் சொகுசு சைக்கிள் உற்பத்தி செய்வதற்கு 2 ஆயிரம் ரூபா செலவாகியது. இந்தச் சைக்கிள் தேவைப்படுவோர் எமக்கு 'ஓடர்' தந்தால் புதிய உபகரணங்கள் பொருத்தி செய்துதருவோம் என்று கூறினார்.

இந்தச் சைக்கிள் உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று அவரிடம் கேட்டோம்.

**செவ்வி: ஐ.கிருஸ்ணன்**

தொழிற்சாலை எனப் பாரிய அளவில் உருவாக்கும் எண்ணம் எமக்கு இல்லாதபோதும் எமது முயற்சியினை ஊக்குவிக்க எவரும் முன் வந்தால் எமது நாட்டிலேயே இந்தச் சைக்கிள் உற்பத்தி நிலையத்தை உருவாக்கி பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கமுடியும் என்று தெரிவித்தார். ★

# ஏகாதசித் தீர்த்தம்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

நாகேஸ்வரம் – அளவெட்டி

உற்சவம் நாளை (21-03-2005) திங்கட்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகும். காலை 10 மணியளவில் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, தொடர்ந்து தீர்த்தமும் இடம் பெறும் என்பதை அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

பொ.ப.சபை,
அளவெட்டி.

(43208)(46-14-26)



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY:
ROYAL Industries
Colombo 12
☎ : 0112334603

அனைத்துப் பாமஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

(C/36310)




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567



## Vacancy - Project Officer North & Northeast

(Tsunami Relief)

**Job Description:** Identify and assess possible projects in Tsunami affected areas in the North and Northeast and to assist the appointed body for Tsunami relief, in the preparation and costing of project proposals; Liaise with other NGOs, INGOs and Donor agencies involved in similar relief work; Provide regular reports to the Tsunami Relief Committee and assist the committee in the preparation of financial and progress reports of ongoing projects; Undertake other related relief work as assigned by the Committee.

**Qualifications:** Previous experience in project management in the development field with a degree or diploma in Sociology, preferably with computer skills and knowledge of gender and local issues.

**Location:** Jaffna Peninsula

**Salary:** Negotiable according to Qualifications and Experience.

**Send applications on or before March 31st, 2005 to:**
Mrs. Beverly Watson
The Tsunami Relief Committee
Diocesan Office
Vaddukoddai

(C-41589)(26)



## ஓட்டுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள்

டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் குழு ஓட்டுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களை வேலைக்கமர்த்த விரும்புகின்றது.

50 வயதுக்குட்பட்டவர்களாகவும் இரு நோக்கு வாகனங்களுக்குரிய உரிமைப் பத்திரமுடையவர்களாகவும் மூன்று மொழிகளையும் விளங்கிக் கொள்ளவும் பேசவும், கூடியவர்களாகவும் இருப்பதுடன், வட மாகாணத்திலுள்ள சகல வீதிகள் பற்றிய முழுவிவரமும் அறிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும் எமது செயற்பாட்டுப் பிரதேசங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை மற்றும் மன்னார் முகாம்களில் தங்குவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கவர்ச்சியான சம்பளமும் படிகளும் வழங்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு 31மார்ச் 2005ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**H.R.and Administration Manager**
**Danish Demining Group**
*31/3A, Sulaiman Terrace,*
*Colombo - 5.*

(சி-41580)(26-14)


## சுகாதார ஊழியருக்கு சீருடைத்துணி

தென்மராட்சி,மார்ச்20

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கடந்த வருடத்திற்குரிய சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (எ-117)

## சுனாமி ஓவியப்போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவிக்குப் பணப்பரிசில்

வலி.தெற்கு,மார்ச்20

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சினால் வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையில் நடத்தப்பட்ட சுனாமி ஓவியப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவி செல்வி கலாரஞ்சினி ஓவியப்பிரிவு ஒன்றில், இரண்டாம் இடத்துக்கான பரிசினையும் சான்றிதழையும் பெற்றுள்ளார். இவருக்கு சான்றிதழுடன் 10ஆயிரம் ரூபா பணப்பரிசும் கிடைத்துள்ளது.

அதேவேளை - யாழ்ப்பாணம் வலயத்தில் ஓவியம் பிரிவு இரண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் பி.திருக்குமாரன் ஆறுதல் பரிசினையும் பிரிவு இரண்டில் கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி மாணவன் ரி.கஜேந்திரனும், பிரிவு ஒன்றில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாசாலை மாணவி எஸ்.பிரியங்காவும் விசேட பரிசுகளையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் மட்டக்களப்பு சிவானந்த கல்லூரியில் நடைபெற்ற சுனாமி ஓவியக் கண்காட்சியின் போது வழங்கப்பட்டன. (எ-152)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவு

நல்லூர்,மார்ச்20

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அரச உதவி நன்கொடைக் கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகத் தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆனைப்பந்தி உபதபாலதிபர் கேட்டுள்ளார். (3-111)


மனைக்கு வெளியே ஒரு மனை!
ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

உங்களுக்காக விசேட ஆக்கம்!
★ JOE சிக்கன் புரியாணி
★ குங்குமப்பூ சிக்கன் புரியாணி
வழமைபோல உணவுப் பொதிகள்
காலை 10 மணி - மாலை 3 மணி வரை.
உடன் விரையுங்கள்!

ஜெசித்தாரா
உங்கள் உணவகம்
19/3, மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 7227

(C/41576) (22-14-26)



## விற்பனையாளர், கணக்குப் பதியுநர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் விற்பனை நிறுவனத்திற்கு
1. விற்பனையாளர்கள்
2. கணக்குப் பதியுநர்/சிட்டை எழுதுநர்

தேவை. ஆண்,பெண் இருபாலாரும் சொந்தக் கையெழுத்திலான சுயவிவரத்துடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல. 2535,
மே/பா உதயன்.

(43269)
(46-14-26)



இந்திய இன்பச்சுற்றுலா,
இளம் தம்பதிகளுக்கும்
சுற்றுலாப் பிரியர்களுக்கும்
அரியதொரு சந்தர்ப்பம்

ஊட்டி (1நாள்), முதுமலைக்காடு (1நாள்), மைசூர் (1நாள்), சிம்லா (3நாள்), குலு, மணாலி (3நாள்), டெல்லி (2நாள்), ஆக்ரா தாஜ்மகால் (1நாள்) ஹைதராபாத் (1நாள்), கோவா (2நாள்), கேரளா (1நாள்), கொடைக்கானல் (2நாள்), டார்ஜிலிங் அல்லது அமிர்தசரஸ் (1நாள்), சென்னை (2நாள்) நாள்கள் 25+2 பயணிகள் 20 உணவு - சைவ, அசைவ உணவுகள்.

முழுவிவரங்களுக்கு: (சி.41502)(46)
T.RANGANATHAN
T.P:0777680102, 0776264301


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆரம்பப் பிரிவு
ஆசிரிய நண்பர்
திரு.கி.ஜெயரமணன் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர் இளையவி கிருஷ்ணபிள்ளை
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தினருக்கும்
உறவுகளுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.*

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள். ஆளணியினர்.

(43287) (24-14-26)



உ

மீசாலை வடக்கு
திருவருள்மிகு
ஸ்ரீ நடராஜ வீரகத்தி விநாயகர் திருக்கோயில்

## வருடாந்த மஹோற்சவம் – 2005

*விநாயகர் அடியார்களே!*

மங்களம் நிறைந்த சீர்பெருகு தென்மராட்சியிலே மா, பலா, வாழை முக்கனிச்சோலைகள் நிறைந்த அழகிய மீசாலை எனும் வனப்புமிக்க கிராமத்தில் மந்திர சிம்மாசனத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சும் ஸ்ரீ நடராஜ வீரகத்தி விநாயகருக்கு தாரண வருஷம் பங்குனி 8ஆம் நாள் (21-03-2005) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குத் திவ்ய மஹோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 21-03-2005 திங்கள் | காலை 11.00 மணி |
| தேர் | 29-03-2005 செவ்வாய் | காலை 9.00 மணி |
| தீர்த்தம் | 30-03-2005 புதன் | காலை 10.00 மணி |

மஹோற்சவப் பிரதம குரு: வேதவித்யாபூஷணம்
பிரம்மஸ்ரீ பால.முரளிதரக்குருக்கள்
(மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயில்)

அடியார்கள் வந்து அருள்பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

- தர்மகர்த்தா சபையினரும்
திருப்பணிச் சபையினரும்.


பிரசுர அன்பளிப்பு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
(மோகன் கடை)
டச்சு வீதி, மீசாலை வடக்கு, மீசாலை.

(43272)(26-14)



# VACANCY

## COMPUTER LECTURERS

We need part time Lecturers for evening and weekend batches

- Oracle
- VB
- C/C++
- ASP
- XML

Candidates who wish to apply should posses

- A degree or equivalent qualification in Information Technology
- Ability to lecture in one or more subjects
- Good written and communication skills in English

Interested candidates please send your Bio Data within 14 days to

**Human Resource Manager**

**ASIAN COMPUTER SYSTEMS**

#200, George R. D. Silva Mw,
Colombo - 13



# VACANCY

We are a computer sales, repairs, Networking & maintenance company, having branches at Colombo 06, Colombo-13, Trincomalee, Vavuniya, Jaffna and Nelliyadi. To expand our services we are looking for candidates to work in the above mentioned branches.

**Hardware Technician** - Male
- Age bellow 30
- Able to trouble shoot PC & Networking.

**Trainee Hardware Technician** - Male
- Should be a Diploma holder in Hardware Engineering.
- Age bellow 25

**Marketing Executive** - Male
- Age bellow 30
- Should have knowledge about computer components
- Good communication and interpersonal skills

**Accounts Assistant**- Male/Female
- Should be full or partly qualified in any recognized accounting body
- knowledge of any accounting package
- Age bellow 30

Interested candidates please send your Bio Data within 14 days to

The human Resource Manager
Regional Office

**MICRO PC SYSTEMS**

37,37th Lane, Wellawatte, Colombo-6

சிவமயம்

## இணுவில் சிவகாமி அம்மன் கோயில் புதிய கைலாச வாகனம் வெள்ளோட்ட விழா

**20.03.2005 ஞாயிற்றுக்கிழமை**

அம்பிகை அடியார்களே!

திருநெல்வேலியைச் சேர்ந்த 'கலாபூசணம்' சு.இராசரத்தினம் தலைமையிலான விநாயகர் சிற்பாலயக் கலைஞர்களால் உருவாக்கம் செய்யப்பெற்ற புதிய கைலாச வாகன வெள்ளோட்டம் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும்.

தலைமை:

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் [உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி]

ஆசியுரை:

சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள் [பிரதமகுரு, சிவகாமி அம்மன் கோயில், இணுவில்]

சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள் [பிரதமகுரு, ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில்]

வாழ்த்துரை:

பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் [கல்வியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்]

பேராசிரியர்: க.தேவராஜா அவர்கள் [தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

பெ.கனகசபாபதி அவர்கள் [தலைவர், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், நல்லூர்]

வழமைபோல 21.03.2005 திங்கட்கிழமை இரவு அம்பாள் புதிய கைலாச வாகனத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

இங்ஙனம்

இணுவில். (சி 41603)(35-30-15-18) கைலாசவாகன உபயகாரர்கள்.


## றேஞ்சர்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்20

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

2ஆவது ஆட்டம் இடம்பெறவில்லை.

(3-26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரப்பிள்ளை பிள்ளைஅம்மா



(பெத்தம்மா)

நெடுந்தீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 135/3,இராசாவின் தோட்டம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பிள்ளைஅம்மா (பெத்தம்மா) அவர்கள் நேற்று (19.03.2005) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - இராமாசிப்பிள்ளையின் மகளும் கந்தப்பு - நாகமுத்துவின் மருமகளும் மற்றும் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் பிறேமலா, சத்தியசீலன், சண்முகதாசன் (ஊழியர், இலங்கை மின்சாரசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசுவாமி (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், யாழ். கச்சேரி), இந்திராதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் (பிரான்ஸ்), பிரதீப்குமார், மாலதி (லண்டன), கிருபாகரன் (லண்டன்), சசீகரன், சசிதா (கனடா), பிரதீபா, மயூரன், காண்டீபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அக்ஷயனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135/3, இராசாவின் தோட்ட வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43329)(53-15-18)

தகவல்:
க.சங்கரப்பிள்ளை
குடும்பத்தினர்.

### திருமதி திலகவதி திருநாவுக்கரசு

நந்தாவில், களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் 79, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி திருநாவுக்கரசு அவர்கள் 18.03.2005 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சட்டத்தரணி ஆறுமுகம் கனகசபை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபை திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும ரவீந்திரன், சிந்தனைச்செல்வி, மனோரஞ்சினி, கமலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நாகம்மா சிதம்பரப்பிள்ளை, பொன்னம்மா இராமநாதன், சிவபாக்கியம் சண்முகம், பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி சோமசுந்தரம், காலஞ்சென்ற மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, தையல்நாயகி பரமலிங்கம், கௌரீஸ்வரி பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2005) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*79, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43327)(35-15-18)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ஐயம்பிள்ளை செல்லம்மா

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் சுஞ்சலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது 109 4/1, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13 இல் வசித்தவருமாகிய திருமதி ஐயம்பிள்ளை செல்லம்மா 18.03.2005 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - சின்னக்குட்டியின் மகளும் முருகேசு - மீனாட்சியின் மருமகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும் Dr.செல்வரட்ணம் (U.K.), கணேசன், சோதிநாதன், தவமணி, ஏரம்பமூர்த்தி (அமரிவில்ஸ் லங்கா & அகிலா பிறைவேற் லிமிட்டெட், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் புனிதவதி (U.K.), சுப்பிரமணியம், விக்னேஸ்வரி, கனகமலர், புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும சியாமளா (U.K.), ராகவன் (U.K.), சிவசுகந்தன், கிரிஜா, சிவரூபி, சுதர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை றேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (21.03.2005) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

109 4/1, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு 13.
T.P.: 011-2344876,
Mobil- 0777- 760291

தகவல்:
பிள்ளைகள்.
(சி41606)(35-15-18)

### திருமதி பிலிப் மாகிறட் அக்னஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலிப் மாகிறட் அக்னஸ் நேற்று (19.03.2005) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் வெள்ளையர் பிலிப் அவர்களின் அன்பு மனைவியும் பீற்றர் அற்புதராஜா, கில்டா விஜூஜினி வினிவிறட் (ஆரம்ப பாடசாலை ஆசிரியை), இமல்டா வீஜினி, பிறின்ஸ் அன்றூ (தபேலாக்கலைஞர், பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லூசியா, சிவநேசன், மாசில் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜறின்நிருபா, சியானி, லம்பேட், லக்சன், லக்சிகா, கீர்த்தன், சேளினா, நிஷான், மிதுன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.03.2005) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பின்னர் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்வம், உடுவில்,*
*சுன்னாகம்.* (43322)(30-15-18)

தகவல்:
வெ.பிலிப் (கணவர்).

### வையிரவன் பிள்ளையார்



(இளைப்பாறிய உத்தியோகத்தர் - யாழ். போதனாவைத்தியசாலை)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் மன்னார் தாழ்வுபாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வையிரவன் பிள்ளையார் நேற்று (19.03.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை கலாசாலை வீதி திருநெல்வேலியிலுள்ள இவரது மூத்த மகன் லவனின் இல்லத்தில் மாலை 3 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (43328)(53-15-18)

தகவல்:மனைவி,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பும்



தோற்றம் 23-05-1924

மறைவு 18-02-2005

அமரர்

### ஆறுமுகம் முருகேசு

(ஓய்வுபெற்ற அதிபர்)

எமது குடும்பத் தலைவர் அவர்களின் இல்லத்தில் இன்று (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*27/6, செம்மணி றோட்,*
*வெய்யிலுகந்த பிள்ளையார் லேன்,*
*நல்லூர்.* (43320)(30-15-18)

- குடும்பத்தினர்.

## 49 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 - 05 - 1981



உதிர்வு 31 - 01 - 2005

### அமரர் லலிதா சீவரத்தினம்

உயிர் உள்ளவரை உறங்காதம்மா
உங்கள் உறவால் உருகும் உள்ளங்கள்
கடவுளை கையெடுப்போம் நித்தம்
உங்கள் ஆத்மசாந்திக்காக!

தாவடி வடக்கு,
கொக்குவில். (43326)(55-15-18)

குடும்பத்தினர்,
தாய், சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூகநிலைய ஆரம்பகால உறுப்பினராகிய

### சரவணமுத்து கந்தையா



அவர்கள் 15.03.2005 அன்று காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மனோன்மணி
சனசமூகநிலையமும்
விளையாட்டுக்கழகமும்
கொக்குவில்.

கொக்குவில். (43323)(35-15-18)

## மனிதம் நிறைந்த மனிதனுக்கு மணி விழா வாழ்த்துக்கள்



### உயர்திரு. தம்பிராசா தவராசா அவர்கள்

(S.L.P.S.- 1, ADE ISLAND ZONE)

39 வருடங்களாக கல்வியுலகில் ஆசிரியராகவும் புங்குடுதீவில் குறிகாட்டுவான் அ.த.க.பாடசாலை, ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபராகவும் பின்னர் தீவகக் கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி இன்று (20.03.2005) ஞாயிறு முதல் ஓய்வு பெறுகின்றவருமான உயர்திரு. த.தவராசா அவர்கள் புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும், புங்குடுதீவு ஐங்கரன் சனசமூகநிலைய செயலாளராகவும், புங்குடுதீவு மறுமலர்ச்சி ஒன்றியத்தின் தலைவராகவும், புங்குடுதீவு – நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இறுப்பிட்டிக்கிளை செயலாளராகவும் இருந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற அர்ப்பணிப்புடன் வாழ்கின்றவர். எனவே, அவருடைய சேவையைப் பாராட்டுகின்றோம். அவருக்கும் அவர்தம் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு- 6. (43311)(39-15-18-30)

– கனடா வாழ் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சிவசிதம்பரம்

(ANS சையிக்கிள் கடை உரிமையாளர்)

தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவசிதம்பரம் நேற்று (19.03.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (Australia), கிருஸ்ணகுமார் (LONDON), கேதீஸ்வரி (Doctor, Colombo General Hospital), லதா (LONDON), ராமேஸ்வரி (ஆசிரியர் - திருக் குடும்பக் கன்னியர்மடம்), கிருஸ்ணவேணி (Colombo) ஆகியோரின் பாச மிகு தந்தையும் அஞ்சலிகா (Australia), அகிலநாதன் (LONDON) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம், நடராசா, தையல்நாயகி மற்றும் பூமாலட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரனும் சரன், சமீரன், வினு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.03.2005 புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நாண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்

நந்தாவில் லேன்,
கொக்குவில். (சி41607)(35-15-18)

தகவல்:
குடும்பத்தினர்.


## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0777 - 747095
0776 - 258204

(சி 41585)(11-45)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார் திருமணத் தேவைகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: இல. 396,
கையிலாயபிள்ளையார் கோயிலடி.
உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 283795.

(சி/41333)

## நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், சங்கவி, சுபலட்சுமி நடித்த

**நிலாவே வா**

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பி.நே.)

(C/41377)(29-16-17)

## நாதவிஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

கா.நேர. 10.30(பி.நே) மட்டும் விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ் நடித்த **கில்லி**

கா.நேர. 2.30. 6.30. 9.30 (பி.நே.) ஸ்ரீகாந், பூமிகா நடித்த

**ரோஜாக்கூட்டம்**

21.03.2005 முதல் The Passion of the Christ (இயேசு நாதரின் கதை)

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

**லண்டன்**

இயக்கம்: சுந்தர் C

(ரீல்ஸ்)

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)

## லக்ஷ்மி சினிமா இணுவில்

இன்றுமுதல் ரவி, அசின், நதியா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

**M.குமரன்**

சன் ஒவ் மகாலக்சுமி

காட்சி நேரம்: 11.00. 3.00. 7.00.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த

**மாயாவி**

(ரீல்ஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00 (பி.நே)

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்த

**மாயாவி**

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30



அன்னை பூபதியின் 17 ஆவது நினைவு தினநிகழ்வுகள் நேற்று வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றன. நிகழ்வில் வயோதிபர் ஒருவர் அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்துவதையும், வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல பராமரிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் மலர் மாலை அணிவிப்பதையும், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் தேசியக் கொடியேற்றுவதையும், வடமராட்சி மாணவர் பேரவைப்பொறுப்பாளர் தயாளன் பொதுச் சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : சி.சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்).

பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட

# வடக்கு - கிழக்குக்குச் சென்று திரும்பிய மலையக இளைஞர்களிடம் விசாரணை!

பதுளை,மார்ச்20

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபடச் சென்ற மலையக இளைஞர்கள் பொலீஸ் புனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 2ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் சுனாமி அனர்த்தப் புனரமைப்புப் பணிகளுக்காக வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்றிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளை முடித்துக்கொண்டு சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள இளைஞர்களையே பொலீஸார் விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மலையக இளைஞர்கள் வடக்கு - கிழக்கில் சென்ற இடங்கள், அங்கு சந்தித்தவர்கள் தொடர்பான விவரங்கள், பொருள்கள் கையளித்தவர்களின் விவரங்கள் என்பனவே அவர்களிடமிருந்து புனாய்வுப் பொலீஸாரால் திரட்டப்படுகின்றன.

இதுவிடயம் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலீஸாரின் இந்த நடவடிக்கை அடிப்படை உரிமையை மீறுகின்ற செயல் என்று தெரிவித்துள்ள அவர், விசாரிக்கப்பட்ட இளைஞர்கள் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்ய இருப்பதாகக் கூறியிருக்கின்றார். (ஐ-3)

# ஆளுநர் கூட்டிய உயர்மட்ட மாநாட்டை கூட்டமைப்பு எம்.பிக்கள் பகிஷ்கரித்தனர்

மட்டக்களப்பு,மார்ச்20

மட்டக்களப்பில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சுனாமி நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பான உயர்மட்ட மாநாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, சுனாமி அனர்த்தங்களை நேரில் பார்வையிட்டார். நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் குறித்தும் - இவ்விடயங்களில் இங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் - ஆராய்வதற்காக நேற்று மீண்டும் மட்டக்களப்பு சென்ற சமயம் அவர் கூட்டிய மாநாட்டையே கூட்டமைப்பினர் பகிஷ்கரித்தனர். (ஐ-12)

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உச்சம் கொடுக்கும். அதன்படி எதிர்வரும் ஏப்ரல் 9ஆம் திகதி அம்பாறைப் பிரதேசத்துக்கு மேலாகவும், 11 ஆம் திகதி கல்முனை, 12ஆம் திகதி வவுனியா, 13ஆம் திகதி மன்னார், 14ஆம் திகதி நெடுந்தீவு மற்றும் நல்லூர் ஆகிய பிரதேசங்களுக்கு மேலாகவும் சூரியன் உச்சம் கொடுக்கவாய்ப்புள்ளது என்றும் -

15ஆம் திகதி காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களின்மீது சூரியன் உச்சத்துக்கு வரும் எனவும் -

வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.பிரதீபன் தெரிவித்தார். (ஐ-3)

## நெல்லியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியக் காணப்பட்டதாக காலையில் கடையைத் திறந்த பணியாளர்கள் தங்கள் முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றனர்.

கொழும்பு சென்றிருந்த கடை உரிமையாளர் திருட்டுத் தொடர்பான தகவல் கிடைத்தும் உடனடியாக நேற்று அங்கிருந்து திரும்பினார். சுமார் 400 பவுண் நகைகள் திருடப்பட்டிருப்பதாகவும் அவர் முறையிட்டிருக்கிறார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-70)

## தரம் 7 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழியில் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டன.

முதலாம் தவணை முடியும் தறுவாயில் கூட அந்தப் பாடசாலைகளுக்கான பாடநூல்கள் தமிழ்மொழியில் வெளியிடப்படவில்லை என்று கல்விப் பகுதியினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் தேசிய கல்வி நிறுவகம் பாடநூல்களை அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. புதிய பாடநூல்கள் சிங்கள மொழியில் அச்சிடப்பட்டபோதிலும் அவற்றைத் தமிழ்மொழியில் வெளியிடாதது தமிழ்ப்பிள்ளைகளை மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தும் புறக்கணிப்புச் செயல் என்று தமிழ் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-3)

# பருத்தித்துறையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

செம்பியன்பற்று,மார்ச்20

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, வியாபாரிமூலையைச் சேர்ந்த விவசாயிகள் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தங்களுக்கு உணவு அல்லாத நிவாரணப் பொருள்கள் வழங்கப்படாததை ஆட்சேபித்தே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ஐ-36-173)

## தமிழர்களின் விடுதலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- சமூகம். இதனை பாலா அண்ணன் அவர்கள் 'போரும் சமாதானமும்' என்ற இந்த நூலிலே காட்டியிருக்கிறார்.

அவருக்குரிய பாத்திரங்களை அந்தந்த இடங்களிலே வைத்து இந்த நூலிலே அவர் தந்திருக்கிறார்.

எங்களுடைய மக்கள் சமூகம் அறிவியல் ரீதியாக வளர்ச்சியடையவேண்டும். அறிவியல் மாற்றத்தை மக்களிடம் ஏற்படுத்தவேண்டியது அனைவரதும் கடமை. இதுதான் பாலா அண்ணனின் விருப்பமும் கூட.

மக்கள் இந்த நேரத்திலே அறிவியல் ரீதியாகச் சிந்திக்கத் தவறினால் அதன் பொறுப்பும் பாதிப்பும் எமது இனத்தையே சாரும். எமது இனத்தினுடைய வரலாற்றை நேர்த்தியாக - ஒழுங்கமைப்புடன் - எடுத்து விளக்கியிருக்கின்ற ஓர் ஆவணமாக இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

மிகவும் எளிமையான - வாசித்து இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய மொழி நடையில் இந்த நூலை பாலா அண்ணன் தந்திருக்கின்றார்.

தான்தோன்றித்தனமாக ஜே.வி.பி. மேற்கொண்ட புரட்சியால் தெற்கிலே கொலைசெய்யப்பட்ட அப்பாவிச் சிங்கள மக்களின் இரத்த ஆறு ஓடியது.

மீண்டும் அப்படி ஒரு புரட்சியைச் செய்வதற்கு ஜே.வி.பி. திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறது. தமிழ் இளைஞர்கள் மத்தியிலே கனன்று எழுந்த விடுதலைத் தீயை காணமுடியாத - உணர முடியாத - சக்தியாகவே இன்றைக்கும் ஜே.வி.பி. இருக்கிறது.

விமல் வீரவன்ஸ, சோமவன்ஸ போன்றவர்களின் பேச்சில் இனவாத நெருப்புப் பறக்கிறது.

இந்த விடயங்களையும் 'போரும் சமாதானமும்' தெளிவாக விளக்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மிக விரைவில் வெடித்துச் சிதறிவிடுவார்கள் - அழிந்துவிடுவார்கள் - என்றே தென்னிலங்கை அரசியல் சக்திகள் இப்போதும் நினைத்துக்கொண்டிருக்கின்றன.

ஒரு சல்லிக் காசு கூட புலிகளுக்குக் கொடுக்கக்கூடாது என்பதே ஜே.வி.பியின் கோட்பாடாக இருக்கிறது.

ஒவ்வொரு தடவையும் புலிகள் பற்றிய பார்வையைத் தவறாகப் பார்ப்பதே இவர்களுடைய நிலைப்பாடாக இருக்கின்றது.

ஜே.வி.பியை அழித்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக பிரேமதாஸ புலிகளைப் பயன்படுத்த நினைத்தார். இலங்கையின் இராணுவத்துக்குத் தளபதியாக பிரபாகரனை நியமிப்பேன் என்று கூறியவர். அவரது தந்திரத்தை நாங்கள் சரியாகப் புரிந்துகொண்டு அவருக்கும் தக்க பதிலடியைக் கொடுத்தோம்.

இன்றைக்கு புலிகளுக்கு சர்வதேச அரசியலில் செல்வாக்கு இல்லை - அதுதொடர்பான அறிவு புலிகளுக்கு இல்லை என்று சிலர் பேசிக்கொண்டார்கள். இந்த முறை எமது அரசியல் விவகாரக் குழுவினர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள முக்கிய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசி வருகின்றார்கள். அடுத்தமுறை அதற்கு மேற்பட்ட பிரமுகர்களுடன் நாங்கள் பேசுவோம். தன்னாட்சி, உள்ளக சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வைப் பெறுவதற்கு நாம் விரும்புகின்றோம்.

சுனாமிக்குப் பின்னர் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை நாங்களாகவே அவர்களுக்குக் கொடுப்போம் என்று தலைவர் அவர்கள் கூறினார். ஆனால், அதனையும் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

உலக வங்கிப் பிரதிநிதி, புலிகளைப்பற்றி ஒருவிடயத்தை குறிப்பிட்டதற்காக அவரை 'வெள்ளைப்புலி' என்று முத்திரை குத்தியிருக்கிறார்கள். இந்த விடயங்களையெல்லாம் தெளிவாகவும் - இலகுவாகவும் - விரிவாகவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் விளக்கிக் கூறியுள்ளார். இதனை ஒவ்வொரு தமிழனும் படித்தறிந்து வைத்திருக்கவேண்டியது காலத்தின் தேவையாகும் - என்றார் பாலகுமாரன்.

அறிமுக விழாவில் முன்னதாக பொதுச்சுடரினை துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக நூலகர் திருமதி பரராஜசிங்கம் றோகினி, புவியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி. ராஜேஸ்வரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

அரங்க நிகழ்வுகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த புவிராஜ் தலைமையில் இடம்பெற்றன.

அரங்கில் வைக்கப்பட்டிருந்த தியாகதீபம் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன. யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.செல்வக்குமார் வரவேற்புரையாற்றினார்.

துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் வாழ்த்துரை வழங்கினார்.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, விரிவுரையாளர் திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினர்.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், துணைத்தலைவர், விரிவுரையாளர், மாணவர்கள், முஸ்லிம் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், போராளிகள் உட்பட பெரும் எண்ணிக்கையில் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

('போரும் சமாதானமும்' நூல் விமர்சன உரைகள் பின்னர் வெளியாகும்)

(ஐ-த-7-86)

SKY COMPUTERS (PVT) LTD
Affiliated with Irish International University (U.K.)
No,89,Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021- 4590325 Fax: 021 - 4590325

| | | |
|---|---|---|
| MS OFFICE | 3 MONTHS | Full Payment 2000/= |
| MS-WORD | 1 MONTH | |
| MS - EXCEL | 1 MONTH | |
| MS - ACCESS | 1 MONTH | |
| MS - POWER POINT | 1 MONTH | |
| DESK TOP PUBLISHING | 3 MONTH | |
| ADOBE PHOTO SHOP | 1 MONTH | |
| ADOBE PAGE MAKER | 1 MONTH | |
| COREL DRAW | 1 MONTH | |

புதிய பிரிவு ஆரம்பம் 21.03.2005
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளது. குறுகியகாலத்திற்குள் நீங்கள் விரும்பிய பாடநெறியினைக் கற்றுத்தேற உடன் விரையுங்கள்.
E - mail : sky com@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomrrow you lead

யாழ். மக்களுக்கோர் அரிய வாய்ப்பு!
விமானக் கட்டணத்தில் விசேட விலைக் குறைப்பு

| | |
|---|---|
| கொழும்பு/சென்னை/கொழும்பு ரூ. 12550 | கொழும்பு / லண்டன் / கொழும்பு ரூ. 63500 |
| கொழும்பு/பரிஸ்/கொழும்பு ரூ. 61200 | கொழும்பு / சிங்கப்பூர் / கொழும்பு 20500 + 8200 |
| கொழும்பு/றோம்/கொழும்பு ரூ. 59300 | கொழும்பு/கோலாலம்பூர்/கொழும்பு 23000 + 11100 |
| கொழும்பு/பிறாங்பேர்ட்/கொழும்பு ரூ. 61000 | கொழும்பு/பாங்கொங்/கொழும்பு 25000 + 9900 |
| கொழும்பு/சுவிஸ்/கொழும்பு ரூ. 60600 | கொழும்பு/கொங்கொங்/கொழும்பு 31000 + 11900 |

எயிற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் பிறைவேற் லிமிட்
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T. P:- 021-2223771, 0777-915824, 0777-270452
E-mail:- aitkenspencejf@slt.net.lk
தலைமைக்காரியாலயம் 305, வொக்ஸ்கோல் வீதி, கொழும்பு-2. T.P:- 0112-308308, Ex: 4083 0777-287555.

PSORIASIS
சரும படைநோய்
இந்நோய்க்கான காரணம் இதுவரை காலமும் அறியப்படாமல் இருந்தபோதிலும் ஒருவித நுண்கிருமியினால் ஏற்படுவதாகவே நாம் கருதுகின்றோம். இதை நாம் உறுதியாகக் கூறுவதற்கு, எமது ஆயுர்வேத மருந்து இந்நோய் வீடயத்தில் முனைப்பாகச் செயற்படுவதே காரணம்.
தொடர்புகளுக்கு:
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
20.03.2005

# ஊடக அமைச்சில் ஜே.வி.பி ஆக்கிரமிப்பு:

# கடலில் போட்டுவிட்டு குளத்தில் தேடுகிறார் ஜனாதிபதி!

ஊடகத்துறை அமைச்சகத்தின் செயற்பாடுகள் சர்ச்சைக்குள்ளாகியுள்ளன. தற்போதய ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி தீர்வு என்றெல்லாம் மங்கள சமரவீரவைச் சந்திக்கின்ற வேளைகளில் ஜே.வி.பி. தலைவர்கள் தமது ஆள்களுக்கான நியமனக் கோரிக்கைகளை வலியுறுத்திவிடுவார்களாம். என்ன செய்வது! தான் சுதந்திரக்கட்சிக்குப் பலநூறு இளைஞர் யுவதிகளைத் திரட்டிக்கொடுத்ததில் மங்கள சமரவீர பெரும் பங்களித்தவர்.

ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. ஜே.வி.பி. எள் என்றால் பிந்திய நிலையில் ஊடகத்துறை அமைச்சின் பொறுப்புக்களைக் கையாளும் நடவடிக்கையை விசேட குழு ஒன்றின் கீழ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டுவந்ததையடுத்து, அமைச்சின் கீழ் உள்ள தமது ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பை இராஜினாமாச் செய்யப்போகிறார் என்றும் ஊகங்கள் நிலவுகின்றதாம். எனினும் ஜே.வி.பி தலைவர்கள் "யாமிருக்கப் பயமேன்" என்று மங்களவுக்குத் தைரியமூட்டியுள்ளதுடன், தொடர்ந்தும் அமைச்சர் பதவியில் நீடிக்கும்படியும் கேட்டுள்ளனராம்.

ஜே.வி.பி. காரர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் அது விழுங்கிவிடும் என்று முன்னரெல்லாம் வாதாடிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் கூட, ஜனாதிபதி துறவு பூண்டால் எதிர்காலத்தில் ஜே.வி.பி.உடன் சேர்ந்து சிறப்பான நல்லாட்சியைத் தரலாம் என்று ஜெபிக்கத் தொடங்கி விட்டார்களாம்.

மகிந்த ராஜபக்ஷ, அனுராபண்டாரநாயக்க, மங்கள சமரவீர, ஜெயராஜ்

ஆகியவற்றுக்கிடையில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் பற்பல தடவைகள் ஒரு நடுநிலையாளர் போன்று ஆரம்பத்திலிருந்து செயற்பட்டவர். அடிக்கடி உருவாகிக்கொண்டிருக்கின்ற பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் மங்கள













சமரவீர, ஜே.வி.பி. தலைவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் அவரை அந்தப் பதவியில் போடுங்கள், இவரை இந்தப் பதவியில் போடுங்கள் என்று காற்றுள்ளபோது தூற்றிக்கொள்கிறார்கள் ஜே.வி.பி. தலைவர்கள்.

இந்த வகையில் ஊடகத்துறை அமைச்சில் ஜே.வி.பி. காரர்கள் நிரம்பி வழிகின்றனர். ஒருவரே ஜே.வி.பி யின் பத்துப் பதினைந்து சிபாரிசுக் கடிதங்களுடன் ஊடகத்துறை அமைச்சில் வேலை வாய்ப்புக்களுக்காக ஒற்றைக்காலில் நிற்கின்றனராம். முக்கியமான பல பதவிகள் ஊடகத்துறை அமைச்சில் ஜே.வி.பி. காரர்களிடம் போய்ச் சேர்ந்துள்ளதாம்.

சமரசம், முரண்பாட்டுத் போன அலுவல் சரிவரவேண்டும் என்பதற்காக சமரவீர அதற்கு இசைந்து போக வேண்டியதாகவே இருந்திருக்கலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஜே.வி.பி.புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்திட்ட பின்னர் 13ஆவது பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிட்டு ஆட்சியமைத்தபோது ஜே.வி.பி தமக்குத் தரவேண்டும் என்று கட்டாயப்படுத்திய அமைச்சுக்களில் ஒன்று ஊடகத்துறை அமைச்சு ஆகும். ஆனால், ஜனாதிபதி எள்ளளவுக்கும் அதில் மசிந்து கொடுக்கவில்லை. தமக்கு நெருக்கமான விசுவாசியான மங்கள சமரவீரவிடம் ஜனாதிபதி ஊடகத்துறை அமைச்சைக் கொடுத்தார். ஸ்ரீலங்கா மங்கள சமரவீர எண்ணையாகி விடுகிறராம். ஜே.வி.பி வலியுறுத்தும் கோரிக்கைகளில் ஜனாதிபதி நிறைய விட்டுக் கொடுப்புக்களைச் செய்து ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்று மங்கள சமரவீர விரும்புகிறார் என்று நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன. ஜே.வி.பி.ஐய மனதில் வைத்துக்கொண்டு அண்மைக்காலமாக ஜனாதிபதி கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுவருவதிலும் மங்கள சமரவீர அதிருப்தியடைந்துள்ளாராம். அத்துடன் மங்கள சமரவீரவின் ஆதரவுத் தளத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைய அங்கத்தவர்கள் கூட ஜே.வி.பிக்கு ஆதரவான நிலையிலேயே உள்ளனர்.

இக்கட்டத்தில் மிகப் நிறுவனங்களில் பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றச் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. அதேவேளையில் ஏற்கனவே பல்வேறு கட்டங்களில் நியமனங்கள் பெற்றுள்ள ஜே.வி.பி காரர்கள் ஊடகத்துறை அமைச்சிலிருந்து வெளியேற்றப்படுவர் என்றும் கொழும்பில் எதிர்ப்பு நிலவுகிறது.

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடு சென்று திரும்புவதற்கு முன்னர் ஜனாதிபதி இவ்வாறான அணுகுமுறைகளை மேற்கொண்டமை தொடர்பாக அவர் மிகவும் வேதனையும் அதிருப்தியும் கொண்டுள்ளார் என்று ஜே.வி.பி காரர்கள் கூறுகிறார்கள். மங்கள சமரவீர நாடு திரும்பியதும் கட்சியின் மூத்த அங்கத்தவர்கள் மத்தியில், ஆட்சியிலிருந்தும் அரசிலிருந்தும் ஜனாதிபதிதான் விலகிக்கொள்ள வேண்டுமே தவிர தாங்கள் (ஜே.வி.பி) அல்ல என்றும் கூறிவருகிறார்கள். ஜனாதிபதியின் நடவடிக்கைகளில் இந்த மூத்த அங்கத்தவர்கள் அதிருப்தி கொள்ளத் தொடங்கியிருப்பதுடன். சந்திரிகா குமாரதுங்கா எனும் ஒரு நபரை அரசியலிலிருந்து துறவுபெறச் செய்வதற்கு அந்த மூத்த அங்கத்தவர்கள் ஜே.வி.பி மூலமாக அழுத்தத்தை உருவாக்க முனைகிறார்கள் என்பதை ஜே.வி.பி விளங்கி வைத்துள்ளது. ஆட்சியமைப்பதற்கு ஜே.வி.பியை இணைத்துக்கொண்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பெர்னாண்டோ புள்ளே, லக்ஸ்மன் கதிர்காமர் முதலிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் கூடப் பேயோடு கூட்டுச் சேர்ந்துவிட்டு, இப்போது பேயோட்டுவதற்கு

**டன்ஸ்ரன் லூயிஸ்**

அம்மையார் முயற்சிப்பது பற்றித் தீவிர விமர்சனங்களைத் தமக்கு நெருங்கியவர்களிடம் கூறிவருகின்றனராம்.

ஜே.வி.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் நாட்டின் பல்வேறு சிவில் இராணுவக் கட்டமைப்புக்குள்ளும் புரையோடிவிட்டது. ஊடகத்துறை அமைச்சில் ஜனாதிபதி கைவைத்துள்ளமை கடலிலே போட்டு விட்டு குளத்திலை தேடுவதாகும்.

# வான்வழிப் பாதுகாப்புச் சிக்கல்: விழி பிதுங்கும் நிலை அரசுக்கு!

'மூஞ்சூறைப் பிடித்து மடியில் விட்டுவிட்டுக் குடையுது குடையுது' என்றது போல ஜே.வி.பி. கட்சியினரைப் பங்காளியாக்கிக் கொண்டு சிக்கலில் மாட்டியிருக்கும் சந்திரிகா குமாரதுங்கவின் அரசுக்கு மற்றொரு பெரும் தலையிடியாக நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றது புலிகளின் வான் படை விவகாரம்.

போர் நிறுத்தத்தைப் பேணிக்கொண்டு புலிகள் தங்களின் படைப்பலத்தை விரிவாக்குகின்றார்கள் என்பதைப் பெரிதாக்கிக் காட்டுவதற்காகத் தெற்கில் ஊடகங்கள் ஊடாகக் கிளப்பி விட்ட இந்த விவகாரம் இப்போது மறுவளமாக அரசுத் தரப்பையே விழிபிதுங்கி நிற்க வைத்திருக்கிறது.

இரணைமடுவில் உள்ள விமான ஓடுதளம், அங்கு தரித்திருக்கும் விமானங்கள் என்று கதைகளை அடுக்கிக் கொண்டே போனதன் விளைவு அரசை இப்போது திருப்பித் தாக்கத் தொடங்கியிருக்கின்றது.

புலிகளின் வான் பலம் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்று வாய்பிளந்துள்ளது ஹெலஉறுமய கட்சி. அரசியல் விவகாரங்களில் அரசோடு முண்டிவந்த ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் இப்போது அவற்றுக்கு மேலதிகமாகப் பாதுகாப்பு சம்பந்தமான இந்த விடயத்தையும் தூக்கிப்பிடித்துக் கோஷம் எழுப்பத் தொடங்கியுள்ளன.

புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளில் அரசின் பிரசாரப் பீரங்கியாகச் செயற்பட்டுவரும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், இப்போது தலைநகர் கொழும்பை வான் வழியாகப் பாதுகாப்பதற்கு வேண்டிய உதவிகளை வெளிநாடுகளிடம் இரந்து கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

தங்களின் விமானங்களைக் கொண்டு புலிகள் தலைநகர் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள கேந்திர நிலையங்களை நொடிக்குள் தாக்கி அழித்து விடுவார்கள் என்று ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் குரல் எழுப்பியிருக்கின்றனர். வெளிநாட்டு உதவியுடன் புலிகளின் வன்னி ஓடுதளத்தையும், விமானங்களையும் அழித்தொழிக்கும்படி அவர்கள் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

புலிகள் வசம் விமான ஓடுதளமும் பல விமானங்களும் அவற்றை வான் வழியாகப் பாதுகாக்கும் ஏவுகணைத் தொழில்நுட்ப அமைப்பும் உள்ளன என்பதைப் பிரபல இராணுவ ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டுவிட்டனர். இது தொடர்பாக விரிவான விசாரணைகளை நடத்தி அறிக்கைகளையும் அரசு பெற்றுக்கொண்டுள்ளது.

போர் ஒன்று மீண்டும் ஏற்பட்டால் புலிகள் முதலில் வான் வழியாகவே தாக்கத் தொடங்குவார்கள் என்ற விடயத்தையும் இரகசியப் புலனாய்வாளர்கள் பாதுகாப்புத் தலைமைக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர். எனவே இது விடயத்தில் அரசு இனிமேல் வெறுமனே பேச்சோடு நின்றுவிடமுடியாத நிலை- இக்கட்டு.

இந்த விவகாரத்தைப் படு சீரியஸான முதன்மை விவகாரமாக எடுக்கவேண்டிய கட்டாயத்தில் சந்திரிகா அரசு உள்ளது.

இலங்கையின் படைத்துறை வல்லமையில் வான்வழிப் பாதுகாப்பு விடயம் இதுவரை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

தலைநகரில் உள்ள ஜனாதிபதி மாளிகை கூட குறைந்தபட்ச வலு ஆற்றல் கொண்ட ஒரு சாதாரண 'ரடார்' தொழில் நுட்பம் மூலமே பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கேந்திர முக்கியத்துவம் மிக்க உயர்ந்த கட்டடங்களில் சாதாரண விமான எதிர்ப்புத் துப்பாக்கிளே வான்வழிப் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இது இரண்டாம் கட்ட ஈழப்போர் காலத்தில் ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களுக்கு எதிராகப் புலிகள் '50 கலிபர்' என்ற - விமான எதிர்ப்புத் துப்பாக்கியாகப் பயன்படுத்தக் கூடிய - இயந்திரத் துப்பாக்கிகளை வாகனங்களில் பொருத்தி வைத்திருந்ததற்கு ஒப்பானதாகும். இந்த ரகத்துப்பாக்கியால் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கான வாய்ப்புகள் அரிது என்றாலும் எதிரியை அச்சுறுத்தும் அளவுக்கு அவற்றைப் புலிகள் அப்போது பயன்படுத்தி இருந்தனர்.

இப்போது புலிகளின் அன்றைய நிலையில் அரசு இருக்கின்றது. தலைநகர் கொழும்பை வான்வழியாகப் பாதுகாக்கும் விடயம் பெரும் நிதிச் செலவான - நாட்டின் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட நிதியையே ஏப்பமிடக் கூடிய விடயம் என்பது போரியல் வல்லுநர்களின் கணிப்பு.

தலைநகரில் முதலில் அரசு மாளிகைகள், படைத்தலைமையங்கள், மின்சாரம், எரிபொருள் மையங்கள் என்பனவற்றை வான்வழித் தாக்குதல்களில் இருந்து தடுத்தாக வேண்டும். அவற்றின் வான்வழிப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும். இது நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு நிதிச்செலவான விடயம்.

வெளிநாடுகளின் தயவு தாட்சண்யம் இப்போது அரசுக்கு மிகவும் அவசரமாகத் தேவைப்படுகின்றது. அதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுவிட்டன. ஜனாதிபதி மாளிகை உட்படக் கேந்திர இடங்களைப் பாதுகாக்கும் நவீன 'ரடார்' தொழில் நுட்ப அமைப்பை ஸ்ரீலங்காவுக்கு வழங்கப் பாகிஸ்தான் முன்வந்திருப்பதாக வெளியாகிய செய்திகள் இந்த அடிப்படையிலானவையே.

மறுபக்கத்தில் போர் எதுவும் நடத்தாமலேயே அரசுப் படைகளைப் பெரும் நிதிச் செலவான பாதுகாப்புத் திட்டத்தை வகுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கின்றனர் புலிகள்.

வன்னியில் தங்கள் வசம் உள்ள பழைய ஓடுபாதையையும், அதில் நிறுத்திவைத்த 'டம்மி' விமானங்களையும் கொண்டு கூடப் புலிகள் இதனை நிறைவேற்றியிருந்தால் அது அவர்களுக்குப் போரில்கிடைத்த பெரும் வெற்றியை விட மேலான வெற்றியாகக் கருதக்கூடியதே.

**ஆதர்ஷா தாஸ்**

# யாழ்ப்பாணம்



"தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்" என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு.

சாதாரண குடும்ப வாழ்க்கை நடைமுறை தொடக்கம் கிராமிய சமுதாய மட்டச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது நாட்டின் பொதுத்துறை, நிர்வாக மட்டம் வரை பொருந்தக் கூடிய முதுமொழி இது.

மேற்கூறிய எந்தவொரு மட்டத்தில் தானும் அநீதியோ, புறக்கணிப்போ அல்லது அவமதிப்போ அமையும் வேளை அதற்கெதிராகக் கிளர்தெழுவது தனிமனித மற்றும் சமூக இயல்பு. வடிவங்கள் வேறு பட்டாலும் தவிர்க்கவியலாத வகையில் இது இன்று சமூகத்துடன் ஒன்றிப்போய் விட்ட தொன்று.

மக்கள் சக்தி மகத்தான சக்தி தான். ஆனால், அது சந்தர்ப்ப சூழ்நிலைத் தாக்கங்களால் பொறுமை பேண இயலாத உணர்ச்சிக் கொந்தளிப்பில் பொங்கிப் பிரவாகித்து விடுவதுண்டு.

அன்று நியாயம் வேண்டி நோன்பிருந்த காந்தியின் சாத்வீக வழிப்போராட்டத்துக்கு மதிப்புத் தரும் பண்பு மக்கள் சக்தி கண்டு அஞ்சும் இயல்பு ஆங்கிலேய அரசுக்கு இருந்ததால்தான் அது சரித்திரமானது.

அதே காந்தி காட்டிய வழிக்கு காந்தி தேசம் மதிப்பளிக்குமென நம்பினோம்.

விளைவு;?

திலீபனின் பொறுமை, உறுதி என்ற தியாகத்தின் முன் வெட்கித் தலை குனிந்தது பாரததேசம்.

இது கால மாற்றத்தின் பலாபலன்.

அரசியல் என்ற கழிவு நீர் புனித கங்கையில் கலந்தால் கங்கை யேமாசடைய நேர்வது வரலாற்றுப் பதிவுகள்.

மக்கள் சக்தி மகத்தான சக்தி தான். கட்டுப்பாட்டையும் சகிப்புத்தன்மையையும் அடிநாதமாய் கொண்டமைந்த அகிம்சை வழியும் கூர்வாளை ஒத்தது தான். சந்தேகமே இல்லை.

ஆனால், இன்றைய நவீன உலகு இதற்கெல்லாம் மதிப்பளிப்பதாய் தோன்றவில்லையே.!

அநீதியை, அவமதிப்பை, புறக்கணிப்பைத் தட்டிக் கேட்டால்தான் பெட்டிப் பாம்பாய் ஆகுமென்பது எழுதப்படாததொரு விதி என்று ஆக்கியுள்ளதே!

நாம் மனிதத்தைத் தொலைத்துவிட்டு வாழ் வதால் ஆபத்தைக் கண்டெழும் அச்ச உணர்வுக்கு மட்டுமே தலைவணங்கப் பழகிக் கொண்டுள்ளோம். இதனால்தான் கலகம் பிறந்தால் அதன் மூலம் நியாயம் பிறந்தாகும் என்பது இன்றைய யதார்த்தம் என்றாகியுள்ளது.

அன்று கணவன் மனைவி பெற்றோர் பிள்ளைகள் என்பன போன்று குடும்ப விருட்சத்தின் உறுப்பினர்களிடையே உருவான பிணக்குகள் வெறும் மௌனம் ,கண்டிப்புப் பார்வை என்ற அகிம்சை வழி எதிர்ப்புகள்

## சாது மிரண்டால்

காரணமாய் சீரடைந்த கதைகள் எம்மிடையே பலவுண்டு. அன்றைய அகிம்சை நிலை எதிர்ப்புக்கு அதிக மதிப்பும் பலனும் வாய்த்தன.

ஆனால், இன்று குடும்பத்தில் நிலவும் நியாயமற்ற பிரச்சினையால் பாதிப்புறும் உறுப்பினர் அன்று போல் வாய் திறவா மௌனத்தாலோ, சுட்டெரிக்கும் பார்வையாலோ எதிர்ப்பைக் காட்ட முயன்றால் தோல்வியே மிச்சமாகிறது.மாறாகச் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற விதத்தில் தட்டிக்கேட்கத் துணிந்து வாய்திறந்தால் பிரச்சினைக்குரியவர் தானாகவே அடங்கி விடுவதை நாம் காண்கிறோம்.

அன்று சமூக மட்டத்திலான தவறான செயற்பாடு, அலட்சியமான நடைமுறை அத்து மீறல், குதர்க்கமான விதண்டாவாதம் காரணமாய் உருவாகும் பிரச்சினைகளுக்கு அதே சமூகத்துள்ளிருந்த அதே சமூகத்தின் மதிப்பைப் பெற்றிருந்த நாலுபேரின் கருத்தே தீர்ப்புப் போன்றாகியது. சமூகமும் அத்தீர்ப்பைத் தீர்வாய்க் கொண்டு தலைதாழ்த்தி ஏற்றது.

இன்று சமூகத்துள் நிலவும் நீதியீனச் செயற்பாடுகளை அன்பான அனுகுமுறையாலோ, பண்பான புத்திமதியாலோ மாற்றிவிட அந்த நாலுபேரால் முடியவில்லை. மாறாக ஏளனத்திற்கும் தாக்குதலுக்கும் இலக்காகி அவமானப்பட நேர்கிறது.

மாறாக, ஒன்று திரண்டு துணிந்து நின்று குற்றம் களையப் புறப்பட்டால் சம்பந்தப்படுவோர் பெட்டிப்பாம்பாக அடங்கிப்போவதை அவதானிக்கிறோம். இதுவும் அவைபோன்றதே.

அன்று அரசதுறை நிர்வாகம் மேற்கொண்ட பக்கச்சார்பான நியாயமற்ற செயற்பாடுகளுக்கு நீதிகேட்டு மன்றேறிய வேளைகளில் அலசி ஆராய்ந்து அளிக்கப்பட்ட தீர்ப்பு பாதிப்புற்றோருக்குத் தமக்கும் பாதுகாப்புண்டு என்ற உணர்வை அளித்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு .

இன்று அவ்வாறான செயற்பாடுகள் மன்றுவரை சென்றாலும் சந்தர்ப்ப சாட்சியங்களைத் தலைகீழாய் மாற்றி நீதி தேவதையின் கண்களையே மறைத்து விட முயல்கிறது அரசதுறை நிர்வாகம்.

இதனால்தான் அரசதுறை நிர்வாகத்தின் அலட்சியத்தால் பொறுமை இழந்து அரச துறையின் சட்டமீறல்களைத் தட்டிக்கேட்கப் புறப்பட்டிருக்கிறது இளைய சமுதாயம்.

ஆனாலும், இனத்துக்கான அடையாளமாம் பொறுமையும் சகிப்புத்தன்மையும் பேணப்பட வேண்டியது கடமை என்பதால் இளைய தலைமுறைக்கு ஒருவார்த்தை. "மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லதும் உருகப்பாயும்."

பொன்வேளன்.

## நினையாதே தீய்ந்து போகாதே...!

நினையாதே
தீய்ந்து போகாதே.....!

உன்
எண்ணக் கருவுக்கு
வடிகால்
அகப்பட்டுவிட்டதா?
முடித்துவிடு
உடனேயே முடித்துவிடு
இதற்கு அப்பால்
உன் எண்ணத்தை
சிதைக்க முயலாதே
இடமும் கொடுக்காதே
உன்னைக் கலைப்பது
எதுவோ
அதை ஒதுக்கிவிடு
உனக்கு அப்பால்
என்ன இருக்கிறது....?
தேடு
தேடிப் பிடி
எழுத்துருவாக்கு

உன்னைக் குழப்பி
மயங்க வைக்கிறதா....?
நீயும் குழம்பு
அதை நீயே மயங்க வை

உன் மருட்சிக்கு
எது காரணம்....?
அதை நீயே
மருட்சி கொள்ள வை

உன்னை
எது
கலங்க வைக்கிறது....?
அவமானப்படுத்துகிறது.....?
அதை
நினையாதே
தீய்ந்து போகாதே.....

அ. சூரியன்

## பெருமிதம்

"எனக்கு மோட்டார் சைக்கிள் எடுத்துத் தராட்டால் நான் சாப்பிடமாட்டன்"

இது மகனின் அழுத்தமான எச்சரிக்கை.

"பொறடா கொப்பரிட்டை கதைச்சு எவ்வளவு காசு போனாலும் பரவாயில்லை வாங்கித்தாறன்"

இது தாயின் வாக்குறுதி.

அவள் சொன்னது போல் தன் கணவரிடம் மகனின் வேண்டுதலைக் கூறினாள்.

"இஞ்சபாரப்பா அவனுக்குத்தான் மண்டைக்கே ஒண்டும் இல்லை எண்டால் உமக்கும் இல்லையோ.... ஒரு வேலைக்குப் போற பிள்ளைக்கு, அல்லாட்டிப் படிக்கிற பிள்ளைக்கு மோட்டார் சைக்கிள் எடுத்துக் குடுத்தாலும் பரவாயில்லை. இது என்னண்டா விடிஞ்சாப் பொழுதுபட்டால் றோட்டடியில் நின்டு றோட்டளக்கிற பெடியனுக்கு வேண்டிக்குடுத்து என்ன பிரியோசனம்..... காசெண்டால் என்ன மரமே உலுப்பி எடுக்கிறதுக்கு....." என்று அவர் தன் கோபத்தைக் கொட்டி முடிப்பதற்குள்.... "சரியப்பா அவனுக்கு வேலைவெட்டி இல்லைத்தான். அவன்ர தமையன்மார் நாலுபேர் வெளிநாட்டில் நிண்டு உழைக்கிறாங்கள்... தானே. அதனால அவன் நினைச்சபடி வேண்டிக் குடுங்கோ.... அதுவும் 'பல்சர்' சைக்கிள் வேண்டிக் குடுங்கோ அப்பதான் எங்களுக்கும் கௌரவம். வெளிநாட்டில் நிற்கிற எங்கடை பிள்ளைகளுக்கும் பெருமை" என்று வார்த்தைகளை வளர்த்துக் கொண்டாள்.

"வெளிநாடெண்டால் என்ன சும்மா காலை நீட்டிக் கொண்டிருக்கச் சம்பளம் குடுக்கிறாங்களே. அதுகள் பாவம் அங்க பனியுக்கையும். குளிருக்கையும் நிண்டு இரவு பகல் என்று பாராமல் மாடாய் உழைக்குதுகள். அந்தக்காசில இவா என்னண்டா சும்மா றோட்டில திரியிற தன்ர மகனுக்கு 'பல்சர்' எடுத்துக் குடுக்கப்போறாவாம்...."

என்று தனது ஆதங்கத்தை கொட்டினான் கணவன்

**கடுக்கதை**

"சரி இனியென்ன செய்யிறது. எடுத்துக் குடுப்பம்" என்று தன் மனதுக்குள் முடிவெடுத்த பின்...

"வெளிநாடென்று வந்ததினால சனத்துக்கு காசை என்ன செய்யிறதென்று தெரியாமல் எதையெல்லாம் வாங்கினால் தமக்குப் பெருமை என்று நினைக்குதுகள்"

"..ச்சீ.... என்ன சனங்களப்பா....."

"ஒரு நேரச் சாப்பாட்டுக்கே கஷ்ரப்பட்டகாலத்தை எல்லாம் என்ர மனிசி மறந்து போய்த்தான் 'பல்சர்' எடுத்தால்தான் கௌரவம் என்று நினைக்கிறாள்...."

தனது உள்ளத்தின் குமுறல்களையும் எங்கட சமூகத்திலுள்ள மனநிலையையும் நினைத்து... அதனை வெளியே சொன்னால் யார் கேட்கப் போகிறார்கள் என்று தனக்குள்ளேயே அதற்குச் சமாதி கட்டினான் கணவன்.

எஸ். கவிதரன்

## முடிவு

அழித்து எழுதினேன்
மீண்டும்
அழித்தெழுதினேன்
திருப்தி இல்லை
அழித்தெழுதினேன்
தாள் கிழிந்து போனது

புதிதாக
தாள் வாங்கினேன்
எழுதப் பயமாக இருந்தது
எப்படி எழுதலாம்
சிந்தித்தேன்
எழுதினேன்
அழிக்க வேண்டும் போலவே
இருந்தது
அழிறப்பரை
தூக்கித் தூர எறிந்தேன்
தொடர்ந்து எழுதினேன்
வரிக்கு வரி
எழுத்தில் மாற்றமுணர்ந்தேன்
வரிகளுக்குள்
அழிந்து கிடக்கின்றது
ஓர் இயல்பு

பொன். காந்தன்.

# தனிநாடு போல விளங்கும் நெடுந்தீவு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குத் திசையில் 45 கி.மீற்றர் தொலைவில் 47.5 சதுர கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்ட 4791.5 ஹெக்டேர் நிலப்பரப்பே நெடுந்தீவு.

சிலப்பதிகார காலத்துடன் இணைந்த பெருமைகளைக் கொண்ட இத்தீவு புவிச்சரித அடிப்படையில் சுமார் 260 லட்சம் வருடங்களுக்கு முன் இருந்ததாகக் கொள்ளமுடியாது.

இதிகாசங்களில் 'குமரிக்கண்டம்' எனக் கூறப்படும் 'மெசசோயிக்' யுகத்தில் பிரிந்து சென்ற நிலத்தின் ஒரு பகுதியாகவே புவியியலாளர்கள் இதனைக் கணித்துள்ளனர்.

*"பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடக்கத்துக்*
*குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள*
*வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு*
*தென்திசை யாண்ட தென்னவன் வாழி"*

எனப் புறநானூறு செய்யுள் ஒன்று கூறுகிறது.

இந்தியாவும் இலங்கையும் இணைந்திருந்த ஒரு காலத்தில் இப்போதுள்ள தென்குமரிக்கும் இலங்கையின் வட மேற்குப் பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் குமரிமலைத் தொடரும் பஃறுளி ஆறும் இருந்துள்ளது.

தமிழர்களின் இடைச்சங்கம் அமைந்திருந்த பாண்டியர்களின் இரண்டாவது பெருநகரான கபாடபுரம் கடல் கோளினால் அழிந்தபோது குமரிமலையும் பஃறுளி ஆறும் அழிந்துள்ளது. கபாடபுரமும் தமிழ் நூல்களும் அழிந்தைப் பாடிய பழந்தமிழ் புலவர் ஒருவர்.

"ஞானம் உருவம் சார்ந்து
இசை கணக்கிரதம் காலம்
தாரணம் நிலம் உலோகம்
தம்ப நீர்.....

...............
காரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாழ....." எனச் சொல்லியுள்ளார்.

இந்தியா இலங்கையைப் பிரிக்கும் பாக்கு நீரிணை (Palkstrait) மற்றும் மன்னார் கடல்பகுதியும் குமரித்தொடரும் பஃறுளி ஆறும் இருந்த பகுதியே. இப் பகுதியிலேயே நெடுந்தீவு உட்பட ஏனைய தீவுக் கூட்டங்களும் அமைந்துள்ளன.

குடா நாட்டை அண்மித்த தூரத்தில் ஏனைய தீவுக் கூட்டங்கள் இருக்க சற்று விலகி தனியொரு நாடு எனக் கருதக்கூடியது



நெடுந்தீவு (Neduntivu) கச்சதீவு (Katchchativu) கற்கடதீவு (Katkadativu) என்பன அமைந்தள்ளன.

நெடுந்தீவு :- லைட்லிமகள்

அதிபரின் ஆட்சிக்கு உட்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 1972 இல் நெடுந்தீவுக்கு வருகை தந்த தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் இது ஒரு தனிநாடு போன்று உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

மூன்று மைல் அகலமும் ஏழு பாகம் ஆழமும் கொண்ட கண்ட மேட்டின் துண்டிக்கப்பட்ட ஒரு மேடையில் இது அமைந்துள்ளதாகவும் கடல் அடித்தளப் பாறை நிலத்திணிவின் சூழ்ந்துபட்ட பகுதியே இது எனவும் –

வன்மையான பளிங்குப் பாறைகளின்மீது படிவுகள் ஏற்பட்டு கடல் நீர்மட்டம் குறைந்ததினால் அன்றேல் தரை மேல் உயர்ந்ததினால் உருவான இதன் தரைத்தோற்றம் சுண்ணாம்புப் பாறையாலானது எனவும் –

'மயோசின்' காலத்தில் ஏற்பட்ட இந்தப் பாறை உயர்வே நெடுந்தீவாகத் தோன்றியிருக்கலாம் எனவும் புவியியலாளர்கள் கருதுகின்றனர்.

*(நெடுந்தீவு ஈழத்தின காவல் தளம் – எஸ்.கே. பரமேஸ்வரன் 1968)*

புவிச் சரித வரலாறு என்பது பூகம்பங்கள் 'சுனாமி' போன்ற இயற்றை அனர்த்தத்தினால் ஏற்படும் மாற்றங்களேயாம்.

(VIII பார்க்க)

# தேசிய சினிமா விருதுகளும் சில சிந்தனைச் சிதறல்களும்!





மீரா ஜாஸ்மின்



பிதாமகன் படத்தில் இரு காட்சிகள்

இவ் வருடத்தைய தாதா சாகேப் பால்கே விருது மிருனாள் சென்னுக்குக் கிடைத்துள்ளது. விக்ரம் – சிறந்த நடிகர் விருதைப் பிதாமகனுக்காகப் பெற்றிருக்கிறார். 'பாடம் ஒன்னு ஒரு விலாபம்' என்ற மலையாளப் படத்திற்காக மீரா ஜாஸ்மினுக்குச் சிறந்த நடிகை விருது கிடைத்துள்ளது. மிருனாள் சென்னுக்கு விக்ரமைப் போல சரியாக இருமடங்கு வயது. (விக்ரம் 1964 ஆம் ஆண்டு பிறந்தவர். மிருனாள் சென் 1923 ஆம் ஆண்டு பிறந்தவர்) இன்றைய வங்காளதேசத்தில் பிறந்து, பின் (இன்றைய) மேற்கு வங்கத்துக்குக் குடிபெயர்ந்தவர் அவர். கம்யூனிசக் கட்சியின் கலாசாரப் பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டு மக்களின் போராட்டங்களைத் தான் கண்ட பாதிப்பில் படங்களை எடுத்தவர் மிருனாள் சென். கம்யூனிசக் கோட்பாட்டின் வர்க்க எதிரி முறையை இந்தியக் கண்ணோட்டத்தில் எதிர் கொண்டு, ஒரே வர்க்கத்தினுள் நிலவும் முரண்பாடுகளை, எதிர் சக்திகளை மையப்படுத்தி அவர் எடுத்த படங்கள் உலகளாவிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து சினிமாத்துறையில் தமது பங்களிப்பைச் செய்திருக்கின்றார். விருதுக்குப் பின்னும் தமது பணி தொடரும் என்று தெரிவித்துள்ளார் மிருனாள் சென்.

தாதா சாகேப் பால்கே விருது 1970 ஆம் வருடத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விருது இதுவரை 34 நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகவும் தாமதித்தே மிருனாள் சென்னுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். சிவாஜி கணேசன் அவர்களுக்குக் கூட மிகவும் தாமதித்து 1997 ஆம் ஆண்டு தான் கொடுத்தார்கள். (அதற்கு முந்திய வருடம் கன்னட நடிகர் ராஜ்குமாருக்கு அளிக்கப்பட்டது இவ் விருது)

தாதா சாகேப் பால்கே விருதை மிருனாள் சென்னுக்குத் தந்து விட்டுப் பேசிய ஜனாதிபதி அப்துல் கலாம், அரசியலில் மேன்மை வரவேண்டும். (Nobility in Politics ) என்றும், அதற்குச் சினிமா உலகம் தன்னளவில் முயல வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த 'அரசியலில் மேன்மை' கோஷத்தை ரொம்ப நாளாகவே அவர் முன்மொழிந்தும் வருகிறார். அவரது கூற்றின் படி, அரசியல் மேம்பட்டால் அதன் தாக்கம் எல்லா மட்டங்களிலும் ஏற்பட்டு நாடு நலமுறும் என்பதே. விக்ரம்– மீரா ஜாஸ்மின் ஏற்படுத்திய தாக்கத்தில், விழாவைக் 'கவர்' செய்த பல பத்திரிகைகள் இதை ஒரு ஓரமாகவே போட்டிருக்கின்றன. இனியினூடே மருந்தாகவாவது இச்சிறு செய்தி போய்ச் சேருகிறதே அவ்வகையில் சந்தோஷம் தான்.

ஜனாதிபதி கையால் விருது வாங்கியவர்களில் தமிழர்கள் என்று பார்த்தால் விக்ரமும் ஜனநாதனும் தான். சங்கர் மகாதேவனை நாம் சொந்தம் கொண்டாட முடியாது. மீரா ஜாஸ்மின் நமக்கு அறிமுகமானவர் என்றாலும், விருது கிடைத்ததோ மலையாளப் படத்திற்காக. விருது வாங்கியவர்களில் விக்ரமையும் 'இயற்கை' படத்தை இயக்கிய ஜனநாதனையும் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்று தெரியவில்லை. 1997 இல் சிவாஜி கணேசனுக்குக் கிடைத்த தாதா சாகேப் பால்கே விருதும், மறுபக்கத்துக்காகச் சேது மாதவனுக்கு 1991 இல் கிடைத்த தங்கத் தாமரை விருதும் தான் தமிழ் சினிமாவின் பெயரைக் கொஞ்சமாவது தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. சினிமா எடுப்பவர்களை விட, பார்க்கும் நம்மைப் போன்றவர்கள் சிந்திக்க வேண்டிய விஷயம் இது. 'டிமான்ட்–சப்ளை' அடிப்படையில் தானே அவர்களாலும் படம் எடுக்க முடியும். கலைப் படங்களுக்கான பிரத்தியேக 'மாக்கெட்' ஒன்று நம்மிடையே உருவானால் மட்டுமே தரமான தமிழ்ப் படங்கள் அதிகம் வெளிவரும் என்று தோன்றுகிறது.

மரத்தடி இணையக் குழுமத்தில் இப்போது மலையாளப் படங்களைப் பற்றிய சுவையான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நல்ல படங்களின் பட்டியலைப் பலர் எழுதி இருக்கின்றார்கள். இம்மாதிரியான வித்தியாசமான 'சப்ஜெக்டு'களை தமிழ்த் திரையுலகம் எப்போது கையில் எடுக்குமோ தெரியவில்லை. இம்முறை விருது வாங்கிய படங்களில் இடம்பெற்றுள்ள மலையாளப் படங்களைப் பார்க்கும் போதே பிரமிப்பூட்டுகிறது.

மலையாளப் பக்கம் பார்த்துவிட்டு இந்தப் பக்கம் பார்க்கவே முடியவில்லை. (நான் மீரா ஜாஸ்மினைப் பற்றிச் சொல்லவில்லை. பொதுவாகக் கூறுகிறேன்) நம் பக்கத்திலிருந்து பிதாமகனையும் , இயற்கையையும் தவிர வேறு ஒன்றுமே இல்லை.

வருத்தமாய்த்தான் இருக்கிறது. திரையுலகில் காலடி வைக்க முயன்று கொண்டிருக்கும் நண்பரிடம் கேட்டால், அதற்குக் காரணம் நீங்கள் தான். ஒவ்வொரு கலைஞனும் இங்கு கோடிகளையும் கொடியையும் கோட்டையையுமே இலக்காக வைத்துச் செயற்படுகிறான். எப்படி நல்ல படம் வரும் என்றார். அதுவும் சரிதான்...! அரசியலை மையப்படுத்தித் தமிழில் பல படங்கள் வந்துள்ளன. என்றாலும், இவை அரசியல் பற்றியல்லாது கட்சி– அரசியலையே மையப்படுத்தி எடுக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் ஓர் அரசியல் கட்சிசார்புடைனோ அல்லது ஓர் அரசியல் தலைவர் அல்லது கட்சியைத் தாக்கி அதன் மூலமாகப் பிரபலம் அடைவது அல்லது பணம் பண்ணுவது அல்லது ஒரு எம்.பி அல்லது எம்.எல்.ஏ.சீட்டுக்கு அடிபோடுவது, இல்லையேல் கோட்டைக்குச் செல்லும் வழியாக அதைச் செய்வது என்னும் அளவில் தான் தமிழ் சினிமாக்கள் அமைந்து வருகின்றன.

அரசியல் உணர்வு கொண்டிருப்பது ஒரு கலைஞனை மெருகேற்றுகிறது என்றே நான் கருதுகிறேன். ஆனால், கட்சி அரசியல் என்பது, ஒரு கலைஞனை உருத்தெரியாமல் அழித்து அவனைத் துதிபாடியாகவும் தான் விசுவாசிக்கும் கட்சியின் பாதைக்கேற்ப சுய தணிக்கை செய்து கொள்பவனாகவும், இன்னும் சொல்லப் போனால் அரசியல் கட்சியின் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பவனாக மாற்றி விடுகிறது. மிருனாள் சென் மீது கூட இப்படிப்பட்ட குற்றச் சாட்டு இருக்கிறது. நல்ல படங்கள் எடுப்பவர்கள் இப்படிச் சறுக்குவது என்பது வேறு, சினிமாவில் இடம் பெறும் அப்பட்ட கட்சி அரசியல் சார்புப் படங்கள் (திரையிலும், நிகழ்விலும்) வேறு. அதற்குக் காரணம் இங்குள்ள நிலைமைதான். சுய நலத்திற்காக மட்டுமல்லாது பலவித ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வதற்காகவும் ஒரு தற்காப்பு வியூகமாக கட்சிச் சார்பு நிலைப்பாட்டை நம் கலைஞர்கள் எடுக்கின்றனர். நடுநிலைமையுடன் இருக்க விரும்புவர்களும், தாம் வளர்ந்த நிலையில் தமது நலன்களைக் காக்க அல்லது குறைந்த பட்சம் எதிர்வியூகம் வகுப்பவர்களிடமிருந்து தப்பிக்க இந்நிலைப்பாட்டை மேற்கொள்ள நேரிடுகிறது.

இந்நிலை மெதுவாக மாறும் என்றுதான் தோன்றுகிறது. அதன் முன்னோட்டமே 'அழகி', 'காதல்' போன்ற படங்கள். அதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது நம் போன்றவர்கள்தாம். சினிமா குறித்தான நமது நிலைப்பாட்டைச் சற்றே தீவிரமாக மறுபரிசீலனை செய்யவேண்டும். சினிமாவை சினிமாவாகப் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வேண்டுமென்றே மயக்கத்தில் ஆழ்வது அடிமை மனோபாவம். இதனாலேயே நிஜ வாழ்க்கையின் அவலங்களை மலையாள சினிமாவால் வெளிப்படுத்த முடிகிறது. நம் படங்களிலோ, அவலங்களை முன்வைக்கும் போது கூட மசாலாத்தனம் தேவைப்படுகிறது. 'அழகி' க்கு 'குருவி கடித்த கொய்யாப்பழம்' தேவைப்பட்டது போல.

இதெல்லாம் கூட காலனியாதிக்கக் காலவடுக்களோ என்று கூடத் தோன்றுகிறது. வெள்ளைத் தோலைக் கண்டு பிரமித்த நம் விழிகள் இன்னும் சரியான பார்வைக்குத் திரும்பவில்லை. அடிமை வாழ்க்கையின் அவலங்களை மறக்கடிக்க அசாதாரண நிழலுலகம் தேவைப்படுகிறது. நிதர்சன அவலத்தை மறந்து குதூகலிக்கவென்று எடுக்கப்பட்ட நிதர்சனத்துக்கொவ்வாத படங்கள் 'மவுண்ட் ரோட்' 'கட் அவுட்டுகள்' போன்று பிரம்மாண்டமாகக் காட்சியளித்து நம்மை ஒரு மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. விரும்பியே இம்மயக்கத்துக்கு ஆட்படுகிறோம்.



மிருனாள் சென்

சமூகத்தில் காதலும், காமமும் தேக்கமடைந்து கிடக்க சூரிய நடிகரும்– ஜோதிமயமான நடிகையும், சினேகமான நடிகையும்– கிரிக்கெட் வீரர் பெயர் கொண்ட நடிகரும் காதலில் ஆழ்ந்து கிடக்கிறார்கள் என்று கிசுகிசு எழுதப்பட்டிருப்பதை ஊன்றி ஊன்றிப் படித்து மாய்ந்து போகிறோம். நம்மனதில் நாமே கற்பனையை வளர்த்து, அரிதாரம் பூசியவர்களின் மீது நம் இயலாமையின் எதிர்பார்ப்புகளைச் சுமத்தி கற்பனையில் காலம் தள்ளுகிறோம். இங்கில்லாதது அங்கிருக்கும் என நம்பிக்கையூட்டி மூன்று மணிநேர கவனத்தை நமக்குப் பரிசளிப்பதாக உறுதி செய்யும் வியாபாரிகள், நம்மிடம் இறக்குமதி செய்யப்பட்ட தொப்புள்களையும், உயரத்தையும், மூங்கில் தேகத்தையும், வெளுப்புத் தோலையும் காட்டித் தரம் கெட்ட சினிமாக்களைத் தலையில் கட்டிவிடுகிறார்கள்.

அடிமை மனோபாவத்தாலேயே நாம் சினிமாவில் சராசரி மனிதர்களைப் பார்க்க விருப்புவது கிடையாது. கலைஞர்களை சரிக்குச் சமமாகப் பார்க்க விரும்புவதில்லை. ஒரு நடிகனென்றால் நம்மிடமிருந்து வித்தியாசமாய் இருக்கவேண்டும். நம்மைப்போலவே இருந்தால் நம்மிடம் இல்லாத 'ஸ்டைல்' ஆவது இருக்கவேண்டும். 'ஸ்டைலும்' இல்லாமல் வேறுபடுத்திக் காட்டும் அம்சங்கள் எதுவுமே இல்லாமலிருந்தால் அக் கதாநாயகன் பலநூறு வில்லன்களை நாலே செக்கண்டில் வீழ்த்தியாவது தனது மேட்டிமையை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறோம். கலையுணர்வு கொண்டவர்கள் நமக்குத் தேவைப்படுவதில்லை. கற்பனைகளை விற்பனை செய்யும் வியாபாரிகளையே நாடுகிறோம். கவனத்திற்கு விசா கொடுக்கும் கர்ணன்களாக அவர்களை நிறுவனப்படுத்தி, உப்பரிகையில் உயர்த்தி வைத்து அவர்களை அண்ணாந்து பார்க்கவே ஆசைப்படுகிறோம்.

அரசியல் போன்றுதான் இதுவும். ஒரு மாயச்சுழலாக இது நமது சமூகத்தை உள்ளிழுத்துக் கொண்டிருக்கிறது. அறியாமையில் ஆழ்ந்திருப்போர் தம் கவலைகளை மறக்க எது நிஜம், எது நிழல் என்று பார்க்க மறப்பவர்களாய், கோமாளிக் கூத்துகளையே நிஜமென நம்பிக் களிக்கின்றனர். அறிந்தவர்கள் தமது சுய லாபத்துக்காக இச்சுழலை ஆதரிக்கின்றனர். முக்கியமாக நாம் குற்றம் சொல்ல வேண்டியது நமது ஊடகத்தாரையும், அறிவுஜீவிகளையும். அறிந்தும் அறியாதது போலிருக்கும் நம்போன்ற குட்டி பூர்ஷவாக்களையும்தான். இந்நிலையில் மலையாளப் படவுலகின் சாதனைகளைக் கண்டு ஏக்கம் கொள்ள மட்டும் முடிகிறது.

(இக் கட்டுரையில் வரும் ஆங்கிலச் சொற்பிரயோகங்கள் கட்டுரையாளருடைய நடைகருதி அவ்வாறே விடப்பட்டுள்ளன)



நேசகுமார்
நன்றி:- பதிவுகள்

# யாரொடு நோவோம்...?

ஒரு நாட்டின் பணித்துறைக்குள் நுழைபவர், அந்நாட்டின் எல்லாப் பாகங்களிலும் கடமை புரியும் கடப்பாட்டை ஏற்றுத்தான் பணியாற்றுகின்றார். ஒருவரது துறைசார்ந்த அறிவு எல்லா இடங்களுக்கும் கிட்டுவதற்கு இத்தகைய இடமாற்றங்கள் வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் தேசிய பூட்கைக்கு அமைவாக அல்லது அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு ஏற்ப வழக்கமாக நடைபெறுகின்ற இடமாற்றங்கள் ஒருபுறம். சில காரணங்களை முன்னிறுத்தி சம்பந்தப்பட்ட பணியாளர்கள் விண்ணப்பித்து இடமாற்றச்சபை ஊடாக இடம்பெறும் இடமாற்றங்கள் இன்னொருபுறம். ஒருவர் விடும் தவறு காரணமாக வழங்கப்படும் தண்டனை இடமாற்றங்களும்,அவரது பணியின் சிறப்புக்காரணமாக இடம்பெறும் வெகுமதி இடமாற்றங்களும் இன்னொருபுறம்.

இவை எல்லாவற்றையும் விட, தேசியக் கொள்கைகளுக்கோ நடைமுறை நியதிக்கோ அமைவாக அல்லாது தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு சார்ந்து அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் பழிவாங்கல் இடமாற்றங்கள் வேறொரு வகையானவை. ஆனால், நாட்டில் குறிப்பிடத்தக்க அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதும் இந்த இடமாற்றங்களே !

கல்வி,சுகாதாரம்,உள்ளூராட்சித் துறைகளில்தான் பணியாளர்கள் அதிகம். அத்துடன் மக்களோடு தொடர்புடைய நேரடியான சேவையினை வழங்குபவர்களும் இந்தப்பணிகளில் உள்ளவர்கள்தான். இடமாற்றங்களால் அதிகம் பாதிக்கப்படுபவர்களும் இவர்கள்தான்.

மேலதிகாரியோடு முரண்பட்டுக்கொள்ளும் ஊழியர் ஒருவர் மிக மலினமான முறையில் தண்ணியில்லாக்காட்டுக்கு அனுப்பப்படும் நிலை நீண்ட தொடர்கதை. ஒரு சுகாதார மருத்துவ மாது அடுத்தடுத்து மூன்று இடங்களுக்கு இடமாற்றப்பட்டார். இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படும்போது அவரால் திருப்திகரமான சேவையினை வழங்க முடியுமெனத் திணைக்களம் கருதியதா?

அதே போல, ஆசிரியர் ஒருவர் ஒரே கோட்டத்தினுள் 13 இடங்களுக்கு மாறிமாறி இடமாற்றப்பட்டார். இந்தச்சம்பவம் நடந்தபோது ஆசிரிய சங்கங்கள் பேசாதிருந்தன.இப்போது ஒரு பாடசாலையின் அதிபர் நிர்வாகச் செயற்பாட்டில் தவறிழைத்தமை தொடர்பாக இடைநிறுத்தப்பட்டார். பின்னர் விசாரணைகள் நடைபெற்று,அவர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் குறித்த பாடசாலையின் அதிபர் பதவியைப் பெற முடியாத நிலையிலுள்ளார். அதேவேளை, அப் பாடசாலையிலிருந்து 15 ஆசிரியர்கள் திடீரென இடமாற்றப்பட்டனர். பத்திரிகைகளில் இச் செய்திகள் வெளிவந்தன.

உடனடியாகவே தமிழர் ஆசிரியர் சங்கம் தாம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த 15 ஆசிரியர்களதும் இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டு உள்ளது எனப் பத்திரிகை அறிக்கையினை வெளியிட்டது. ஆனால், பத்திரிகைச் செய்தி தவறானது எனத்தெரிவித்து, உரிய இடமாற்றங்கள் அமுல் நடத்தப்படும் என்ற அறிவிப்பு கல்வி அதிகாரிகளால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

வெளியே உள்ளவர்கள் தமிழர் ஆசிரிய சங்கத்தின் அறிக்கையும் அறிவிப்புக்களையும் உண்மையென நம்பிக்கொண்டிருக்க, இடமாற்றங்கள் நடந்தேறிவிட்டன. தமிழர் ஆசிரியர் சங்கம் தேசியப்பிரச்சினையில் அக்கறை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே ! அதே வேளை, ஆசிரியர்களின் நலன் சார்ந்து அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டுமென்பதும் பலரதும் எதிர்பார்ப்பாகும்.

தமிழர் ஆசிரியர் சங்கம் தனது செயற்பாடுகளை எல்லாப் பாடசாலைகளிலும் விஸ்தரிக்கவில்லை என்பதும், இதனாலேயே சுகவீன லீவுப் போராட்டம் முதலிய எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பயனற்றதாக அமைந்தன என்பதும் மேற்படி சங்கத்தின்மீது குற்றஞ்சாட்டுவோரின் கருத்தாக உள்ளது. எல்லா ஆசிரியர்களையும் உள்வாங்கி அது 'ஆசிரியர்' சங்கமாக மிளிர உதவுவது சங்கத்தலைமைகளின் பணியாகும். இல்லையேல்புதியசங்கங்களின் தோற்றம் கூட நிகழ நேரிடலாம்.

இதேபோலவே,சுகாதார ஊழியர் சங்கங்களும், பொது ஊழியர் சங்கங்களும் மே தின ஊர்வலத்தையோ,கூட்டத்தையோ நடத்துவதும் கொழும்பிலுள்ள தாய்ச்சங்கங்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவாக இங்கும் போராட்டங்களை நடத்துவதுமே இவற்றின் பணியாக இருக்கிறது.

ஆனால், ஒவ்வொரு தொழிற்சங்கமும் தான் பிரதிபலிக்கின்ற தொழிலாளர்கள் ஒவ்வொருவரின் நலன்களைப் பேணுவதில், அவர்கள் பாதிக்கப்பட்டால் அவர் சார்ந்து கிளர்ந்தெழுந்து பொருத்தமான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் ஈடுபாட்டோடு – அர்ப்பணிப்போடு – பணியாற்ற வேண்டியது அவசியமாகும்.

– ஏகலைவன்.

# புலிகளிடம் சிக்குவதைத் தவிர்க்க ஹெலியை கைகளால் அடித்து நொருக்கிய ரத்வத்த குழுவினர்!

ஜெனரல் ரத்வத்தையும் அவரது குழுவினரும் வவுனியாவுக்கான தமது சிரமமும் அச்சமும் மிக்க தவிர்க்க முடியாத பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முக்கியமான பணியொன்றை மேற்கொள்ளத் தவறவில்லை.

அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த அத்தனை பேரும் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளல்லவா?

போர் முனையில் சிரமமான சந்தர்ப்பங்களில் புதுப்புது யுக்திகளை வகுத்துப் படை நடத்திய அனுபவம் இருந்திருக்குமல்லவா?

பழுதடைந்த உலங்கு வானூர்தியை அதே இடத்தில் அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் கைவிட்டுச் சென்றால் விளைவு என்னவாகும்.

சரி; இப்போது என்ன செய்யலாம்? ஒரு சில நிமிட யோசனையின் பின்னர் ஜெனரல் ரத்வத்தை தீர்க்கமான முடிவொன்றுக்கு வந்தார்.

"பழுதடைந்த உலங்கு வானூர்தியை அந்த இடத்தில் கைவிட்டுச் செல்வது

**03**

*வெலிஓயாப் பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட அரச நிகழ்வுகள் சிலவற்றில் கலந்து கொள்ளும் நோக்கில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, முன்னாள் பொலீஸ்மா அதிபர் ராஜகுரு, மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ரொஹான் தலுவத்த ஆகிய உயர் மட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினர் உலங்கு வானூர்தியொன்றில் 1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதியன்று காலை கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். உலங்கு வானூர்தியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதனை வவுனியாப் பகுதியின் காட்டுப்பகுதியில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் தரையிறக்க நேர்ந்தது. விடுதலைப்புலிகளின் கைகளில் சிக்காது அங்கிருந்து தப்பி அரச பாதுகாப்புப் படைகளுடன் அவர்கள் இணைய மேற்கொண்ட பிரயத்தனங்களைச் சுவைபட விவரிக்கும் கட்டுரைத் தொடரின் மூன்றாவது பாகம் இது.*

தொகுப்பு
வீயெஸ்ரீ

புலிகளுக்கு வாய்ப்பாக அமைந்து விடும். புலிகளின் கைகளில் அது சென்றடைவதைத் தவிர்க்க வேண்டுமானால் அதை நாசப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்விதம் உலங்கு வானூர்தியை அடித்து நொருக்கி, புலிகளுக்குப் பயன்படாது செய்வதற்கான எந்தவொரு ஆயுதம் கூட அச் சமயத்தில் எங்களிடம் இருக்கவில்லை. அத்தனை பேரும் இணைந்து அதன் பாகங்களைக் கைகளாலேயே பிய்த்தெறிந்தும் உடைத்தும் முடிந்தவரையான சேதத்தை ஏற்படுத்தினோம். சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்ட பலகையை எனது பித்தளை ஊன்று கோலினால் ஓங்கிப் பலமுறை அடித்துச் சேதப்படுத்தினேன். எந்த வகையிலும் அதன் பாகங்களைத்தானும் பயன்படுத்த இயலாத வகையில் அடித்து நொறுக்கினோம்"

முன்னெச்சரிக்கை உணர்வால் உலங்கு வானூர்தியை சேதப்படுத்திய சம்பவம் குறித்து ஜெனரல் ரத்வத்தை இவ்விதம் விவரித்தார்.

இவ்விதம் திட்டமிட்டவாறு பயணத்தை ஆரம்பித்த ஜெனரல் ரத்வத்தை ஏறக்குறைய ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கப்பால் சென்று பாரிய மரத்தடியில் சிறிது நேரம் தரித்த சமயமே பொலீஸ்மா அதிபரும் அவரது உதவியாளரும் அந்த இடத்தை வந்தடையாததை அவதானிக்க நேர்ந்தது.

ஏறக்குறைய ஒரு மணித்தியால நேரம் வரை அவ்விருவரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தபோதும் ஏமாற்றமே மிஞ்சியது. அவர்கள் வருவதற்கான எந்த அறிகுறியும் தென்படவேயில்லை.

'அவர்கள் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கக் கூடும்'

இராணுவத்தளபதி ரொஹான் தலுவத்தையைப் பார்த்து ஜெனரல் ரத்வத்தை உதிர்த்த வார்த்தையே இது.

இராணுவத் தளபதியிடமிருந்து எவ்வித பதிலும் வெளிவரவில்லை. பதிலளிக்கக் கூடிய மனநிலையில் இராணுவத் தளபதி காணப்படவில்லை.

'இருந்தாற்போலிருந்து எமக்குப் பின்புறத்தில் சத்தமொன்று கேட்டது. உஷாராடைந்த நாம் அந்தப்பக்கம் பார்வையைச் செலுத்தினோம். எதிர்பாராத இன்ப அதிர்ச்சி. பொலீஸ்மா அதிபரும் அவரது மெய்க்காப்பாளரும் சைக்கிளொன்றைத் தள்ளியபடியே செடிகொடிகளை விலக்கிக் கொண்டு எங்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். பதற்றப்பட்ட எங்கள் மனது ஒரு கணம் நிம்மதியடைகிறது'

தமது அந்த அனுபவத்தை மீண்டும் மனதில் கொண்டு வந்து கண்களை மூடி ஒரு கணம் மௌனமாகிறார் ஜெனரல்.

"எனது கால் ஊனத்துடன் சிரமப்பட்டு நான் நடப்பதை அவதானித்த அவர்கள் மீண்டும் தாம் வந்த வழியே திருச்செல்வத்தின் குடிசைக்குத் திரும்பிச் சென்று அங்கிருந்த திருச்செல்வத்தின் சைக்கிளை எடுத்து வந்திருக்கிறார்கள். திருச்செல்வத்தின் குடிசைக்குப் பின்புறம் சைக்கிளொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை நாம் எல்லோரும் ஏற்கனவே அவதானித்திருந்தோம். இடைவழியில் அது ஞாபகத்துக்கு வரவே அவர்கள் இருவரும் அவ்விதம் செயற்பட்டிருக்கிறார்கள்.

'நீங்கள் சைக்கிளில் ஏறிக்கொள்ளுங்கள் நாங்கள் சைக்கிளைத் தள்ளிக்கொண்டே ஒன்றாகப் பயணிப்போம்' இவ்விதம் கூறிய பொலீஸ்மா அதிபரை ஆச்சரியத்துடன் நோக்கினார் ஜெனரல் ரத்வத்தை. ஆனாலும் அவரது அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

கடைசியில் அந்தப் பாரிய மரத்தின் அடிப்பாகத்தில் அச் சைக்கிளைக் கைவிட்டு அவர்கள் தமது பயணத்தைத் தொடர நேர்ந்தது.

"வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்போது மறக்காது உமது சைக்கிளை எடுத்துச்

## அடர்ந்த காட்டில் ஒரு திகில் பயணம்...

செல்லும்"

திருச்செல்வத்தை நோக்கி இவ்வாறு தெரிவித்தார் ஜெனரல்.

பயணத்தில் இதுவரை கடக்க முடிந்தது சிறியதொரு தூரமே. செல்ல வேண்டியிருந்ததோ நீண்டதொரு பயணம்.

அடர்ந்த காட்டில் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய சூழ்நிலை.

எந்த வேளையிலும் விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்படலாம்.

வழமையாக மனிதர்கள் பயணிக்கும் பாதையில் செல்வது ஆபத்தானதாய் அமையலாம். குறுக்குப் பாதைகளில் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருக்கச் சாத்தியமுண்டு. அதுவுமல்லாமல் விடுதலைப் புலிப்போராளிகள் அப்பகுதியில் உலாவுவது சர்வ சாதாரணம். எப்படியும் நெருக்கமான, அடர்ந்த காட்டுப் பகுதியினாலேயே பயணம் செய்தாக வேண்டும். எதிரிகளின் கண்ணில் தட்டுப்படாது பயணிக்கும் நோக்கில் நெருக்கமான அடர்ந்த காட்டுப் பகுதியால் சிரமத்துடன் பயணித்த வேளையில் கொடிய விஷப் பாம்புகள், பயங்கர வனவிலங்குகள் என்பவற்றால் ஆபத்து ஏற்படும் சாத்தியங்கள் இருந்தன. சில பகுதிகளில் வானத்தையே காண முடியாத வகையில் பெரிய மரங்களின் கிளைகள் நிலம் நோக்கி பரவிப் படர்ந்திருந்தன. வழியில் ஒரு இடத்தில் சேறும் சகதியும் நிறைந்திருக்கும். மற்றோரிடத்தில் கற்பாறை நிறைந்த கடின தரைப்பகுதி. சில இடத்தில் ஒரு மரக்கொப்பிலிருந்து மற்றொரு கொப்புக்கு மாற வேண்டியிருந்தது. பயணம் பயங்கரம் மிக்கதென்பதோடு சிரமம் மிக்கதாகவும் அமைந்தது.

"இந்த விதத்தில் மெதுவாகப் பயணம் செய்ய வேண்டுமானால் எம்மால் இலேசில் வவுனியாவைச் சென்றடைய முடியா தென்பதைப் புரிந்து கொண்டோம். எங்களில் ஒரு சிலர் விரைவாக வவுனியாவுக்குப் போக முடிந்தாலே மேற்கொண்டு ஏதாவது செய்ய முடியும். எனது தீர்மானத்தின் படி எங்களில் இரு சிப்பாய்கள் திருச்செல்வத்துடன் முன்னால் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் முடிந்தவரை விரைவாக வவுனியாவுக்குச்



சென்று நாங்கள் இவ்விதம் இடைநடுவில் மாட்டுப்பட்டுப் சிரமப்படுவதாக எமது பாதுகாப்புப் பிரிவில் தெரியப்படுத்துவதென்பதே அத்தீர்மானத்துக்குப் பின்னுள்ள நோக்கமாகும்"

நடந்த சம்பவங்களை இவ்விதம் விவரித்து வந்த ஜெனரல் ஒரு கணம் தாமதித்து மீண்டும் தொடர்கிறார்.

'மேலும் சிறிது தூரம் முன்நோக்கிச் சென்றிருப்போம். இருந்தாற்போலிருந்து ஏதோவொரு வித்தியாசத்தை உணர்ந்தேன். எங்களுடன் கூட வந்த விமானி கண்ணில் தட்டுப்படவில்லை. சில நிமிடம் கழித்தே அவரும் திருச்செல்வத்துடன் சென்றவர்களுடன் இணைந்து சென்று விட்டதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. எங்களுக்குத் தெரியாமல் – எங்களுக்குக் கூடச் சொல்லிக் கொள்ளாமல் அவரும் திருச்செல்வத்துடன் கூடிச் சென்று விட்டிருந்தார்.'

'ஒரு சில மீற்றர் தூரம் முன்னேறியிருப்போம். திடீரென்று தூரத்தில் பலத்த சத்தமொன்று கிளம்பியது. அதைத் தொடர்ந்து வானத்தில் கரும்புகை மேலெழுந்ததைக் காணமுடிந்தது. விஷயம் வேறொன்றுமல்ல, நாங்கள் தரையிறங்கிய இடத்துக்கு விடுதலைப்புலிகள் வந்து விட்டிருந்தனர். பழுதடைந்து பாகங்களாய் உடைந்து காணப்பட்ட உலங்கு வானூர்தியை அவர்கள் தீயிட்டுக் கொழுத்தியதால் ஏற்பட்ட வெடிச்சத்தமே அது. அவர்களுக்கு உடைந்து சிதறிப்போன உலங்கு வானூர்தியால் எந்தப் பயனும் இல்லையல்லவா? நல்ல வேளை, அந்த உலங்கு வானூர்தியில் வந்தவர்கள் யாரென்பதை அவர்களால் சரியாக ஊகிக்கவும் முடியவில்லை. விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் அவ்விடத்தில் எவரும் இருக்கவில்லை. உலங்கு வானூர்தியில் பயணம் செய்தவர்கள் நாங்கள்தான் என அவர்கள் அறிய முடிந்திருந்தால், முழுக் காட்டையே சல்லடை போட்டு எம்மைக் கண்டு பிடித்திருப்பார்கள்.'

ஜெனரலின் திகில் அனுபத்தைக் கேட்கக் கேட்க எமக்கும் பயத்தில் ரோமம் சிலிர்க்கிறது.

'அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ... அது எந்தத் திசையிலிருந்து என்று கூட நிர்ணயிக்க முடியவில்லை – எங்கிருந்தோ துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாக ஒலித்து ஓய்கின்றன. எமக்கு முன்னால் விரைவாக வவுனியாவைச் சென்றடையும் நோக்கில் சென்றவர்கள் விடுதலைப் புலிகளின் பார்வையில் சிக்கியிருக்க வேண்டுமென ஊகிக்கிறோம். பயங்கரமான சிக்கலில் நாம் மாட்டிக் கொண்டதாக எண்ணி மனது அலைபாய்கிறது. நான் நிலத்தில் அமர்ந்து கொள்கிறேன். பயப் பிராந்தியுடன் ஏனையோர் என்னைச் சுற்றி அமர்ந்து கொள்கின்றனர். "சிறிது நேர மௌனத்தின் பின் ஜெனரல் மெதுவாகப் பேசத் தொடங்குகிறார்.

"இங்கு இப்போது பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகளான நாம் ஒரு சேர மாட்டிக்கொண்டுள்ளோம். நாமெல்லோரும் இந்த நிலையில் விடுதலைப்புலிகளிடம் சிக்கிக்கொண்டால் அது அவர்களுக்குப் பெரும் வெற்றியாகிவிடும். சிலவேளை, அவர்கள் எம்மைக் கொல்லாது உயிருடன் கைது செய்யக் கூடும். எம்மை விடுவிப்பதற்கு அவர்கள் பல கடும் நிபந்தனைகள் விதிக்கக்கூடும். இதனால், அரசுக்குப் பெரியதோர் சங்கட நிலை ஏற்படக்கூடும். அதற்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது"

இவ்விதம் தெரிவித்த ஜெனரல் ரத்வத்தை தமது கைத்துப்பாக்கியிலிருந்து ரவைகளிலொன்றைக் கழற்றி எடுத்துத் தனது காற்சட்டைப் பையினுள் பத்திரப்படுத்திக் கொள்கிறார்.

"என்னிடம் மீந்திருக்கும் ரவைகள் முடிவடையும் வரை நான் அவர்களை எதிர்த்துப் போரிடுவேன். என்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலாத பட்சத்தில் இந்தக் கடைசி ரவையைப் பயன்படுத்தி என் உயிரைப் போக்கிக் கொள்ளப் போகிறேன். கடைசியில் எனது உயிரற்ற உடலே விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கும்"

ஜெனரல் ரத்வத்தையின் இந்தப்பேச்சைக் கேட்ட ஏனைய அதிகாரிகளும் தத்தமது கைத்துப்பாக்கிகளில் இருந்த ரவைகளில் ஒவ்வொன்றை எடுத்துத் தத்தமது காற்சட்டைப் பைகளில் பத்திரப்படுத்திக் கொள்கின்றனர்.

அந்த இக்கட்டு வேளையில் அத்தகையதொரு முடிவுக்கு வருவதை விட வேறெதனையும் அவர்களால் செய்ய முடியவில்லை.

"எமது தற்போதைய இம்முடிவால் முழுநாட்டின் தலைவிதியையே தீர்மானிக்க வேண்டி ஏற்படும். முழு நாடுமே கிளர்ந்தெழத்தக்க நிலை உருவாகும். எனவே, நாம் முடிந்தவரை உயிர்தப்ப முயற்சித்தாக வேண்டும்."

ஜெனரல் ரத்வத்தையின் வார்த்தைகளில் உறுதி தொனிக்கிறது.

"நாம் இன்னமும் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்தாகவேண்டும்" இராணுவத்தின் வடபகுதிக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனா இடைமறித்து இவ்விதம் கூறுகிறார்.

"அப்படியானால் நாம் இந்தப் பெண்களைத் திருப்பி அனுப்பி விடுவதுதான் நல்லது." ஜெனரல் ரத்வத்தையின் இந்த ஆலோசனை ஏனையோரால் ஏற்கப்பட்டதையடுத்து திருச்செல்வத்தின் மனைவி, அவரது தாயார் ஆகிய இருவரும் திருச்செல்வத்தின் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு திரும்பித் தமது இடத்துக்குச் சென்று விடுமாறு ஜெனரல் ரத்வத்தையினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உயிராபத்திலிருந்து ஒருவாறு தாம் தப்பிக்கொள்ளமுடிந்ததே என்ற நிம்மதிப் பெருமூச்சோடு பெண்கள் இருவரும் பிள்ளைகளையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்படுகின்றனர்.

"சேர்.... மீண்டும் வரமுடிந்தால் எங்களது இடத்துக்கு நீங்கள் ஒருமுறை வரவேண்டும்"


திருச்செல்வத்தின் மனைவி ஜெனரல் ரத்வத்தையிடம் இவ்விதம் வேண்டிக்கொள்கிறாள்.

வஞ்சனையற்ற மனம் கொண்ட அந்தப் பெண்கள் கவலையுடன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றனர்.

தனித்துவிடப்பட்ட அந்தப் படை அதிகாரிகளின் நிலை என்னவாயிற்று என்பதை அறிய அடுத்த ஞாயிறு வரை வாசகர்கள் பொறுத்திருந்துதான் ஆக வேண்டும்.



# படைப்பாளிகள் சேர்ந்து இயங்குவதே பலம்!



– பேராசிரியர் நந்தி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வாழ் நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் எங்களிடையே வாழும் மூத்த கல்விமான், மூத்த எழுத்தாளர், சிறந்த ஆன்மீக நெறியாளர், பெரும் சிந்தனையாளர். வைத்திய கலாநிதியான அவர் அத்துறை சார்ந்த சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதியாகவும், மாநாடுகளின், கருத்தரங்குகளின் வளவாளராகவும் பணிபுரிந்தவர். சமூக வைத்தியத்துறை சார்ந்த பல அனைத்துலக மாநாடுகளில் பங்குபற்றியவர். அது மட்டுமன்றி சத்தியசாயி கல்வி மேம்பாட்டுக் கொள்கையில் துறை தோய்ந்த அறிஞரும், அதில் மிகுந்த ஈடுபாடும் கொண்டவர். இந்த முத்திரைகளைவிட அவரை நந்தி என்றே நாடறியும். அவரது இயற்பெயர் மிகப்பலருக்கும் தெரியாது என்று கூறுமளவிற்கு நந்தி என்ற புனைபெயரே அறியப்பட்ட, பிரபல்யமாகிவிட்ட பெயராகி உள்ளது. எல்லோருடனும் அன்புடன் பழகும் சுபாவம் கொண்ட, பலரின் பெருமதிப்புக்குரிய நந்தி ஐயா அவர்களின் பன்முகங்களைக் காட்டும் வகையிலும் அவரது அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையிலும் உதயன் சிறப்புச் செவ்வி வரிசையில் அவருடனான நேர்காணலை வழங்குவதில் பெருமைப்படுகின்றோம். இந்தச் செவ்வியின் முதற்பகுதி கடந்த வாரம் சூரியகாந்தியில் வெளியாகி இருந்தது.

*கேள்வி* :– மு.வரதராசன் போல நீங்களும் அறிவுரை கூறும் நூல்களை எழுதியுள்ளீர்கள். ஆனால், உங்களது நூல்கள் மருத்துவ அறிவுரைகளைக் கூறுகின்றன. இவ்வாறான நூல்களை எழுத விழைந்த நோக்கமென்ன?

*பதில்*:– உண்மையில் மு.வ.எழுதிய நூல்களை நான் படிக்கவில்லை. ஆனால், நான் எழுதிய 'அருமைத்தங்கைக்கு' நூல் அதிகம் பாராட்டுப் பெற்ற நூலாகும். அதை ஒரு கடித வடிவில் இயல்பான மொழி நடையில் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைக்கும் விளங்கத்தக்கதாக எழுதினேன். ஒரு கடிதந்தான். அதை ஈழநாட்டுக்கு அனுப்பினேன். அதைப்படித்து விட்டு ஈழநாடு ஆசிரியர் இராஜஅரியரத்தினம் தொடராக எழுதுமாறு வேண்டினார். எழுதினேன். அதற்கு இங்குமட்டுமல்ல தமிழகத்திலும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. 'சரஸ்வதி' விஜயபாஸ்கரன் அதை இந்தியாவில் நூலாக வெளியிட்டார். மூன்று பதிப்புகள் கண்டு, இப்போது ஒரு பத்திரிகை மீள் பிரசுரம் செய்து இப்படி அது இன்னும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் பின்பு அன்புள்ள நந்தினி, நந்தினி உன் குழந்தை, இதய நோய்களும் தடுப்பும், சிறுவர்களுக்கான மருத்துவ அறிவுரை நூல்கள் என்பவற்றையும் எழுதியுள்ளேன். மருத்துவ அறிவைச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளுமுகமாகவே இவற்றை எழுதினேன்.

*கேள்வி*:– தமிழில் மருத்துவ அறிவியல் சார்ந்த நூல்கள் குறைவு. நீங்கள் ஒரு சமூக மருத்துவப் பேராசிரியர். அதே வேளை, மருத்துவ அறிவியல் நூல்களை ஆக்கியவர். மருத்துவ அறிவை சாதாரண மக்களுக்கு வழங்குமாறு சாதகமானதா? பாதகமானதா? எவ்வாறு வழங்கப்பட வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?

*பதில்*:– நோயாளி ஒருவருக்குத் தனது நோய் பற்றித் தெரியவேண்டும், தான் என்ன மருந்து எடுக்கிறேன், அம்மருந்தால் ஏற்படும் நன்மை, தீமை என்ன என்பது தெரியவேண்டும். சொல்லும் முறையில்தான் விடயங்கள் தங்கி உள்ளன. ஒரு மருத்துவர் இன்னொரு மருத்துவருக்குச் சொல்வதும், நோயாளிக்குச் சொல்வதும் வேறானவை. நோயாளிக்கு அவருக்கு விளங்கும் மொழியில் கூறவேண்டும். அது மிக நுட்பமான பணியாகும். இதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை மருத்துவ பீட பாட நெறியில் நாங்கள் கற்பிக்கிறோம்.

மருத்துவ ஆலோசனை என்பது ஒரு பாடம். மருத்துவ மாணவர்களின் ஆலோசனை மதிப்பீடு செய்யப்படுகிறது. எனவேதான், அண்மைக் காலத்தில் மருத்துவ ஆலோசனை கூறும் நல்ல கட்டுரைகள் பத்திரிகைகளில் வருகின்றன. எனது காலத்தில் அதிகம் நூல்கள் வெளிவரவில்லைத்தான். ஆனால், இப்போது உற்சாக மூட்டக் கூடிய வகையில் நூல்களும், கட்டுரைகளும் வெளிவருகின்றன. இதற்கு அவர்கள் தமிழ் மூலம் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதும் ஒரு காரணமாகும்.

அதேவேளை, இதிலுள்ள பாதகமென்னவென்றால் மருத்துவ அவறிற்றவர் எழுதக்கூடாது. இந்தியாவிலிருந்து நிறைய நூல்கள் இவ்வாறு வெளிவருகின்றன. நூலகத்தில் இருந்து குறிப்பெடுத்து எழுதும் இத்தகைய முயற்சி ஆபத்தானது.

*கேள்வி* :– நீங்கள் ஒரு சினிமா நடிகரும் கூட, அந்த அனுபவத்தைக் கூற முடியுமா?

*பதில்*:– ஒரு சினிமா நடிகரென்பதே சரியானது. 'பொன்மணி' என்ற ஒரு சினிமாவில் மட்டுமே நடித்தேன். நான் 'குரங்குகள்' என்றொரு நாடகத்தைத் தயாரித்திருந்தேன். அது கொஞ்சம் பேசப்பட்டது. தர்மசேன பத்திராஜ என்ற பிரபலமான சிங்கள சினிமா நெறியாளர் யாழ்பாணப் பல்கலைக்கழக சிங்கள மொழித் துறையில் பணியாற்றினார். அவரோடு சேர்ந்து காவலூர் ராசதுரையின் கதையொன்றைச் சினிமாவாக்கும் முயற்சியில் பேராசியர் சண்முகதாஸ் போன்றோர் ஈடுபட்டிருந்தனர். அப்போது நான் கொழும்பில் இருந்தேன். பொன்மணியின் தகப்பன் பாத்திரத்துக்கு என்னைத் தெரிவு செய்து, எனது சம்மத்தைத் தொலைபேசி மூலம் கேட்டனர். எனது லீவுப் பிரச்சினைகளைக் கூறி, அதிக 'சீன்'களில் வரமுடியாதிருக்கும் என்றேன். அதற்கு ஆவன செய்வதாக அவர்கள் கூறவே, நானும் இங்கு வந்தேன்.

உண்மையில் நடிப்பு என்பதை விட அது ஒரு அற்புதமான பயிற்சி ஒரு ஒழுக்கமே (Discipline) சினிமா நடிப்பும் நடிக, நடிகையர் பிரபலமடையக் காரணம் அவர்களிடம் கமரா 'டிசிபிளின்' இருப்பது தான். கமராவுக்கு ஏற்ற இடத்தில் வந்து நிற்க வேண்டும். பார்வையாளரைப் பார்ப்பது போலிருந்தாலும் வேறிடத்தில் தான் பார்க்க வேண்டும். சினிமாவில் இருப்பது ஒரு விஞ்ஞானபூர்வ நடிப்புத்தான். நாடகங்கள் போல் சுதந்திரமாக நடிக்க முடியாது. கமரா, லைற், நிழல் எனப் பலவற்றுக்கு ஒத்துழைக்கவேண்டும்.

## 'இப்போதைய சுபீட்சம் செயற்கையானது என்பதனை இளைஞர்கள் உணரவேண்டும்'

தர்மசேன பத்திராஜவினுடைய நட்பு என்பது பெரிது. அவர் இப்போது A-9 பாதையை வைத்து ஒரு விவரணப் படத்தை எடுக்கிறார். அதில் எனது பேட்டியும் வருகிறது. அதை எடுப்பதற்கு ஒரு குழுவே - 14 பேர் - வந்தது.

2-3 நிமிட சூட்டிங்குக்கு மூன்று மணித்தியாலம் வரை செலவிட்டனர்.

சினிமா என்பது பெரியகலை. ஆனால், இவ்வளவு பணத்தைச் செல்வு செய்து, பெரிய முயற்சி செய்து குப்பைகளையே பலரும் படமாக எடுக்கிறார்கள். இதுதான் துக்கமான விடயம்.

*கேள்வி*:– தமிழக சினிமாவைப் பற்றிக் கூறுகிறீர்களா?

*பதில்*:– பெரும்பாலான எல்லாந்தான். நாங்கள் தமிழ் சினிமாவையே பார்க்கிறோம். அதைவிட மோசம் ஹிந்தி சினிமா, அதை விட மோசம் அமெரிக்கன் சினிமா.

*கேள்வி*:– பேராசிரியர் சிவத்தம்பி தானும் நீங்களும் வானொலி நாடக நடிகர்களாக இருந்ததை நினைவு கூர்ந்துள்ளார். அதுபற்றிக் கூறுங்கள்.

*பதில்* :– அது ஒரு நல்ல காலம். 1952 களில் நான் ஒரு மருத்துவ மாணவனாக இருந்தேன். பேராசிரியர் க.கைலாசபதி றோயல் கல்லூரியில் ஒரு மாணவனாக இருந்தார். சிவத்தம்பி ஸாஹிரா கல்லூரியில் இருந்தார். இவ்வளவு பெரியாட்களாக வருவோமென அப்போது எமக்குத் தெரியாது.

அப்போது இலங்கை வானொலியில் நடிப்பதற்கு நடிகர்களைக் கோரியிருந்தனர். எனக்கு நடிக்க விருப்பம். அதேவேளை, பத்து ரூபா கிடைக்கும் அது எனக்குப் பெரிய காசாயிருந்தது. நேர்முகத் தேர்வில் 'சானா' என்னைப் பரீட்சித்தார். 'ராஜ பார்ட்', 'டொக்ரா பார்ட்' என்பன எனக்குப் பொருத்தமாயிருந்தது. நான் தெரிவு செய்யப்பட்டேன். இந்தப் பாத்திரங்கள் வரும் போது 'சானா' என்னைக் கூப்பிடுவார். அப்போது என்னுடன் சிவத்தம்பி, நா. சுந்தரலிங்கம், கைலாசபதி, ஞானதீபம், சிவபாதசுந்தரம் எனப் பலரும் நடிக்க வருவார்கள். எதுவும் ஒரு ஒழுக்கம் தான். அப்போது, இப்போது போல ஒலிப்பதிவு வசதிகளில்லை. நேரடியாகச் செய்ய வேண்டும். ஒளிச் சமிக்ஞைகளை வைத்தே நடிக்கவும், நிறுத்தவும், பின்னணிக் குரலோடு இணைந்து போகவும் வேண்டும். பிழை விட முடியாது. ஏராளமான ஒத்திகை செய்தே நடிக்கவேண்டும். 'சானா' வின் பயிற்சி சிவத்தம்பி போன்றோரின் நட்பு எல்லாம் மறக்க முடியாதவை.

*கேள்வி*:– கலைத்துவ ஈடுபாடு சிறுவர்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் உடையது எனக் கூறமுடியுமா?

*பதில்*:– கலைத்துவம் இல்லையேல் மனிதாபிமானம் இருக்கமுடியாது. பெரிய அரசியல்த் தலைவர்கள் எல்லோருமே கலைஞர்களாக இருந்துள்ளனர். வாஜ்பாய், கருணாநிதி போன்றவர்கள் அரசியல்வாதிகளாக இருப்பதோடு நல்ல கவிஞர்களாக, கலைஞர்களாக இருக்கின்றனர். மனிதாபிமானத்தை கலைத்துவ ரசிகத்தன்மையே வளர்க்கிறது. சிறுவர்கள் கலைகளில் ஈடுபடுவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். அவர்களை இயந்திரத்தனமாக அல்லாமல் முழு மனிதனாக்க கலைகள் உதவுகின்றன.

*கேள்வி* :– அண்மைக்கால கலை இலக்கியச் சொல் நெறி குறித்து தங்களின் அவதானமென்ன?

*பதில்*:– சிங்கள நாடகங்கள் சிறப்பாக உள்ளன. எமது நாடகங்கள் உருப்படியாக இல்லை என்ற எண்ணம் என்னிடம் இருந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் குழந்தை சண்முகலிங்கமும் அவரிடம் பயின்றவர்களும் சிங்கள நாடகங்களைப் போல சிறப்பான நாடகங்களைத் தயாரித்துள்ளனர். அவற்றில் முன்னேற்றத்தையும் புதுமையையும் நான் அவதானித்துள்ளேன்.

நாவல்கள், சிறுகதைகள் என்று அவ்வவ்போது கவனத்துக்கு உரிய வகையில் வெளிவந்துதான் உள்ளன. ஆனால், உச்சமான படைப்புகள் என்று எவற்றையும் சொல்லி விட முடியாது.

நாங்கள் எழுதும் போது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்றவற்றினூடாக ஒரு கட்டுக் கோப்போடு எழுதக் கூடியதாக இருந்தது. இப்போது அவ்வாறில்லாமல் எழுத்தாளர்கள் சிதறிப்போய் உதிரிகளாக உள்ளனர். இப்போதைய இளம் படைப்பாளிகள் ஓர் இயக்கமாக ஒன்று சேர்ந்து எழுதும் போது அது வரவேற்புப் பெறும் என நினைக்கிறேன். அப்போது நானோ, டொமினிக் ஜீவா, டானியல், எஸ்.பொ, சோமகாந்தன், பத்மா போன்றோரோ இனங்காணப்பட, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு காரணம் என்பேன். எழுதிய எல்லோரும் மார்க்ஸிய சிந்தனை உள்ளவர்களல்லர். தாழ்த்தப்பட்டவர்களும் அல்லர், நாங்கள் எல்லோரும் சேர்ந்து இயங்கியதே பலம் என்பேன். அந்தப் பலம் இப்போது இல்லை.

*கேள்வி* :– உங்களது இளமைக் காலத்துக்கும் இப்போதுள்ள இளம் பிள்ளைகளது காலத்துக்கும் இடையில் நீங்கள் காணும் மாறுபாடென்ன?

*பதில்*:– நான் அந்த காலத்திலிருந்து இந்தக் காலத்துக்குப் பாய்ந்து வரவில்லை. எல்லா அனுபவங்களையும் உள்வாங்கிய படியே வந்துள்ளேன். ஆனால், இப்போது சில வருடங்களாக சினிமா போன்ற ஊடகங்களின் தாக்கத்தால் இளைஞர்களின் போக்குகளில் குறிப்பாக, கலாசார விடங்களில் மாற்றத்தைச் சீர்கேட்டை காண முடிகிறது. வெளிநாட்டுப் பணத்தால் விளையும் செயற்கையான பணப்பெருக்கம் ஒன்று இப்போது காணப்படுகிறது. இதை இளைஞர்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

அந்தக் காலத்தில் எமது அப்பாவினுடைய சம்பளம், வருவாய் இவ்வளவு தான்! எமது நிலை இவ்வளவு தான்! என்பது எமக்குத் தெரியும். ஒரு சைக்கிள் வாங்க முடியாது. வாங்கினால் இப்படித்தான் பாவிக்க வேண்டும். என்பது எமக்குத் தெரியும். மருத்துவக் கல்லூரிக்குச் சென்ற பின்னரே நான் மணிக்கூடு கட்டக் கூடியதாக இருந்தது. இப்போதுள்ள இளைஞர்களுக்குக் குடும்ப வறுமை பற்றித் தெரியாது. இது ஆபத்தானது. ஏனெனில், இங்குள்ள சுபீட்சம் செயற்கைச் சுபீட்சம். முன்னர் எமது பொருளாதாரம் கொல்வின் ஆர்.டி.சில்வா சொன்னது போல மணியோடர் பொருளாதாரம். இப்போது டொலர், டினார் பொருளாதாரம் இது இன்னும் பத்தாண்டுகள் தாக்குப்பிடிக்குமோ தெரியாது. நாங்கள் இதுபற்றிக் கொஞ்சமாவது யோசிக்கவேண்டும்.

*கேள்வி*:– நீங்கள் ஒரு மருத்துவ அறிவுத்துறை சார்ந்தவர். அதேவேளை, ஒரு சாயி பக்தர். இரு நேரெதிர் திசைகளில் உங்கள் கவனம் உள்ளது. இவற்றுக் இடையில் நீங்கள் காணும் ஒருமைப்பாடென்ன?

*பதில்* :– இரண்டும் நேரெதிர் திசைகளல்ல. சாயி மார்க்கம் என்பது ஒரு தத்துவம். அது வெறும் கிரியைகளல்ல. நீயும் கடவுள், நானும் கடவுள் என்று சொல்லுமளவுக்கு மனிதனில் உயர் சக்தியைக் கண்டு பிடிப்பது. மனிதன் சாதாரண அறிவு நிலையிலிருந்து உயர் அறிவு நிலைக்கு வரும்போது பலவிதமான சக்திகள் அவனைச் சேரும். அப்போது அவன் கடவுள் நிலையை அடைகிறான். கடமை என்பதே இவற்றுக்கிடையிலான ஒருமைப்பாடாகும். மருத்துவமும் கடமையும், தர்மமும், சத்தியமும் கொண்டது. ஆத்மீகமும் அதையே சொல்கிறது. உனது கடமையைச் செய் எனறே கர்ம யோகம் வலியுறுத்துகிறது.

'மாஸ்லோ' வின் தேவைக் கோட்பாட்டில் மேலே செல்லச் செல்ல 'சுய திருப்தி நிலை' ஏற்படும் என்று கூறப்படுகிறது. 'உன்னை நீயே அறிகின்றாய்' என்கிறது ஆத்மீகம். உயர் நிலையை அடையும் போது அறிவியலும் ஆத்மீகமும் ஒன்று சேர்கின்றன.

*கேள்வி*:– மருத்துவர்களின் தேவை இங்கு உணரப்படும் நிலையில் மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறுவோர் நாட்டை விட்டே வெளியேறும் நிலை காணப்படுகிறது. இதற்கான காரணமென்ன?

*பதில்*:– இப்போது இந்நிலைமை குறைந்துள்ளது. வெளிநாடுகளில் அனுபவிக்கும் ஐஸ்வரியங்கள் இங்கில்லை என்ற சுயநலமே காரணம். சில வேளை இங்கிருந்து கஷ்டப்பட்ட நிலையில் போனவர்களும் உள்ளனர். எனினும், அங்கே அவர்களது மனச்சாட்சிப்படி அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. இங்கிருக்கும் சுதந்திர மூச்சு அங்கு அவர்களக்குக் கிடைப்பதில்லை.

(முற்றும்)



செவ்வியும் படமும்
இயல்வாணன்



# கலேராஸ் எரிமலை மீது ஒரு துணிகரப் பயணம்

## உலகை உலுக்கிவரும் 10 இயற்கை அனர்த்தங்கள்

தருவது : மு.சிவநேசன்

பூமியின் சில பகுதிகளில் பூகம்ப அதிர்வுகள் இடம்பெறுதல் போலவே ஆங்காங்கே எரிமலைகள் சீற்றங்கொள்கின்றன. எரிமலைகளின் தாக்கங்கள் பூமி அதிர்வதைப் போல முன்னறிவித்தல் ஏதும் இல்லாமல் இடம்பெறுவது குறைவு என்றே கருதலாம். மேலும் எரிமலைகளின் சீற்றம் பெரும்பாலும் அதற்கென வரையறுக்கப்பட்ட பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றது.

எரிமலை அச்சுறுத்தல் காணப்படும் பிரதேசங்களிலும் காலங்காலமாக பெருமளவில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த எரிமலைகள் எப்போது, எந்த அளவிற்கு சீறும் என்று சரிவரக் கணிக்க இயலாது. இதனால், இப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் இக்கட்டுக்களைச் சந்தித்துத் திணறுவதும் உண்டு, உயிரிழப்புக்களை சந்திப்பதும் உண்டு.

எரிமலைப் பிரதேசங்களில் தென்படும் கணகணப்பான வெந்நீரூற்றுக்கள் மக்களைத் தம்பால் ஈர்க்கின்றன. அதுவும் குளிர்ப் பிராந்தியங்களில் இந்தக் குளியலுக்கு மவுசு அதிகம். மேலும் எரிமலைகள் கக்கும் குழப்பில் அதிக ஊட்டச் சத்து உள்ளதால் இந்துப் பிராந்தியங்களில் பயிர்ச் செய்கை பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றது.

தவிர காலங்காலமாக பரம்பரை பரம்பரையாக தாங்கள் வாழ்ந்து வந்த வதிவிடங்களை விட்டு வெறுமனே விலகி ஓட மக்களோ தயாரில்லை. இயன்றவரை சூழலோடு தாக்குப் பிடித்து வாழவே அவர்கள் நினைக்கிறார்கள்.

நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளும் சில காட்டு விலங்குகளும் அனர்த்தங்களை ஊகித்து முன்னரே இத்தகைய பிராந்தியங்களிலிருந்து ஓட்டம் எடுக்கின்றன. எனினும் அவற்றை நம்பி ஓட்டம் எடுக்கும்நிலையில் மக்கள் இல்லை. நிகழப் போகும் அனர்த்தங்களின் வலுவை சிதறி ஓடும் விலங்குகளின் தீவிரம் சரிவரக் காட்டும் என்று கருத இயலாது.

சூரியனில் இருந்து தீப்பிழம்பாக பிரிந்து வந்து சுழன்று சுழன்று ஆறி, இறுகி தரையும் கடலும் தோன்றி உருவானது இந்தப் பூமி. தேசிக்காயை வெட்டுவது போல அதனை இரண்டாகப் பிளந்தால் உள்ளே உள்ள நிலைவரம் புரியும்.



மேற்புறத்தில் ஆறி இறுகி ஓடாகி உயிரினங்களின் வாழ்விடமாக பூமி மாறிப் பல மில்லியன் ஆண்டுகள் கழிந்துவிட்டாலும் மேற்புறமாகவுள்ள புவியோட்டின் நடுவில் இன்றும் கொதித்து உருகி குமுறிக்கொண்டிருக்கும் பாறைத் தீப்பிழம்புகளைக் காணலாம்.

இதனால், ஏற்படும் அமுக்கம் புவி ஓட்டுத் தகட்டுச் சந்திப்புக்களில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களின் விளைவாக உருவாகின்ற பூமி அதிர்ச்சி பற்றி விவரமாக ஏற்கெனவே அறிந்துகொண்டோம். அதன் திடீர்த் தாக்கங்களைச் சமாளிக்கும் உத்திகள் பற்றியும் கண்டு கொண்டோம்.

புவியோட்டில் காணப்படும் கீற்றான இடைவெளிகள் ஊடாக அமுக்க மேலீட்டால் இத்தகைய கொதிக்கும் பாறைக் குழப்புகள் பூமியின் மேற்பரப்புக்கு வெளியேறத் துடிக்கின்றன. அவற்றிற்கு வழிவிட்டுக் கொடுத்தால் எரிமலைத் தாக்கம் கொடுக்காவிட்டால் பூமி அதிர்ச்சி என்றெல்லாம் அனர்த்தங்கள் விரிவடையக்கூடும்.

எரிமலை வெடிப்பின்போது பெருமளவு சக்தி வெளிவிடப்படுகின்றது என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதனூடு சீறும் பாரிய பாறைகளின் வேகம் மணிக்கு 1200 கிலோமீற்றர்களைத் தாண்டும் என்றால் அப் பாறைகள் எங்கெல்லாம் சிதறி எப்படி வீசப்படும் என்கின்ற எதிர்வு கூறல்கள் சாத்தியமாவதில்லை.

1815 இல் இந்தோனேஷியாவின் தம்போரா எரிமலை வெடித்தபோது பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். அன்றைய சனத்தொகையுடன் ஒப்பிடும் போது அது பாரிய இழப்பு என்றே கருதப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் எண்பதினாயிரம் பேர் பட்டினி மற்றும் நோய்கள் காரணமாக பின்னர் மேலும் மரணித்துவிட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மீண்டும் 1883 இல் இந்தோனேஷியாவின் Krakatau எரிமலை வெடித்தபோது பெரும்பாலான தீவுப்பகுதிகள் நிலைகுலைந்து போயின. 30 அடி உயரமான சுனாமி அலைகள் கிளம்பிக் கொண்டன. அதில் 36 ஆயிரம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

1985 இல் கொலம்பியாவின் நேவடோ எரிமலையின் மிதமான வெடிப்பில் சுமார் 20 மில்லியன் கன மீற்றர் அளவிற்கு சுடு சாம்பல் குவிக்கப்பட்டிருக்கிறது. இது மலை உச்சியில் தொப்பி போல மூடப்பட்டிருந்த பனிப் படலத்தை உருக்கிவிட அதில் குழைத்த சாம்பல் சேறாகி வழிந்தோட அதற்குள் அகப்பட்ட ஆமெரோ நகர மக்கள் 23 ஆயிரம்பேர் வரையில் மூச்சுத் திணறிப் பரிதாகபமாக இறந்து போனார்கள்.

கி.மு. 1470 இல் கிரேக்கத்தில் வெடித்து பாரிய உயிரழிவுகளைத் தந்துவிட்ட Santorini பற்றிய புள்ளி விவரங்கள் பதியப்படவில்லை. கி.பி. 79 இல் இத்தாலியில் குமுறிய Vesuvious எரிமலை இருபதினாயிரம் மனித உயிர்களைக் காவு கொண்டிருக்கிறது. 1669 இல் இத்தாலியின் பிரபல எரிமலையான Etnaவின் சீற்றம் இருபதினாயிரம் உயிர்களைக் காவு கொண்டிருக்கிறது.

1991 இல் பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவிலிருந்து 90 கிலோ மீற்றர் மட்டும் வடக்கேயுள்ள பினற்றுபோ எரிமலைக் குமுறலின் போது வெளிவிடப்பட்ட கந்தக ஓட்சைட்டின் எடை 20 மில்லியன் தொன் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தின் போது சரியான எதிர்வு கூறல்கள் தெரிவிக்கப்பட்டதால் சுமார் அறுபதினாயிரம் மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டார்கள்; கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 281 மட்டும் என உத்தியோக பூர்வ அறிவிப்புகள் தெரிவித்திருந்தன. உண்மையில் இத்தொகையை விட சற்று அதிகமான இழப்புகள் ஏற்பட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

புதிதாக எரிமலைகள் பிறக்காது என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் கிடையாது. மெக்சிக்கோவின் சோளப் பண்ணை வெளியொன்றில் 1943 இல் ஒரு நாள் ஒரு வெடிப்பு ஏற்பட்டு பூமி சீறலானது. 24 மணிநேரத்தில் அங்கு 45 மீற்றர் உயரமான மேடு உருவாகிவிட்டது. ஒரு வருடம் கடந்த நிலையில் அது 300 மீற்றர் உயரத்துக்கு வளர்ந்து விட்டது.

ஜப்பானிய தீவான Miyake Jima விலிருந்து ஒகஸ்ட் 2000இல் முழுப் பேருமே வெளியேற்றப்பட்டார்கள். அவர்களில் சிலர் தமது வீடுகளைப் பார்க்க ஒரு வருடம் கழித்து அனுமதிக்கப்பட்டாலும் எவரும் அங்கு நிரந்தரமாக வசிக்க மீண்டும் அனுமதிக்கப்படவில்லை.

பூமி அதிர்வுகளை உணரும் ஆய்வு மையங்களே பெரும்பாலும் எரிமலைகள் பற்றிய எச்சரிக்கைகளையும் விடுத்து வருகின்றன. இவற்றை வானிலை அறிக்கைகளைப் போல சுலபமாக எதிர்வு கூறிவிடல் இயலாது என்பது தான் நடைமுறைச் சிக்கலான விடயம்.

எனினும், எரிமலை வெடிப்பதற்கு முன்னதாக பூமிக்கு அடியிலான எரிமலைக் குழம்பு ஓட்டம் இருக்கும். இது எரிமலையின் முகப்பை நோக்கியதாக இருக்கும். இதனால், சிறிய சிறிய நில அதிர்வுகள் உணரப்படும். மேலும் முகப்பில் வாயுக்களின் வெளியேற்றம் அதிகரித்து இருக்கும் தீக்குச்சி மருந்துப்புகையும் வாசனை பிறக்கும். மலைச் சாய்வுகளில் தரைவீக்கம் அல்லது தளம்பல் ஏற்படலாம்.

இரவில் அமைதியாக சுவாலைகளை வெளியிட்டு ஒளிருகின்ற எரிமலைகள் தொலைவில் அழகாகத் தென்படும் . இவற்றின் இந்த அடக்கமான ஒளிரல் பல ஆண்டுகளுக்கு நீடிக்கவும் கூடும். திடீரென உடைப்பெடுத்து ஊரை ரணகளமாக்கவும் கூடும்.


உயிரைப் பணயம் வைத்து எரிமலை உச்சிக்குப் பயணம் செய்து ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களில் பல எரிமலைப் பிரியர்கள் சாம்பலோடு சாம்பலாகிய வரலாறுகளும் உண்டு. இமயமலை ஏறுகின்ற மாதிரியான இனிமையான சமாச்சாரமாக இது இருக்காது.

ஸ்ரான்லி வில்லியம் என்ற பல்கலைக்கழக பேராசிரியர் அவர் ஒரு ஆய்வாளர். அடங்கிப் போயிருக்கும் எரிமலைகள் பலவற்றில் ஏறி அவற்றின் கண்ணுக்குள் நுழைந்து மூக்கால் வெளியேறிய அனுபவசாலி. எரிமலைகளின் உச்சிப் பிராந்தியத்தில் அதன் வெடிப்பு ஏற்படும் இடத்தில் ஒரு புனல் வடிவான பள்ளம் தென்படும். Crater எனப்படும் இது பலநூறு மீற்றர்கள் ஆழமானதாக இருக்கும். இதுவே எரிமலைகளின் முனைப்பு ஆகும். அது வரைக்கும் அவர்களது பயணம் அமையும். கொல்லனின் உலைமுகம்போல அது குமுறிக் கொண்டோ சற்று அடங்கியோ காணப்படும்.

தென் அமெரிக்காவின் அன்டீஸ் மலைத்தொடர்கள், கொலம்பியாவில் பிரவேசிக்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள எரிமலைதான் Galeras. இதனை ஆராய வில்லியம் குழுவினர் 1993 ஜனவரி 12 இல் புறப்பட்டனர். அப்போது விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் அங்கு குவிந்திருந்தனர். இவ்வாறு உலகெங்கும் தினமும் புகைந்து கொண்டிருக்கும் எரிமலை முகடுகளை நோக்கி எவராது ஏறிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அன்றைய வில்லியமின் குழுவில் இருந்த ரஷ்ய வாயு ஆய்வாளர் இகோரின் குடும்பமே எரிமலை ஆராய்ச்சிக் குடும்பம் தான். அவர் தனது தாயாரின் கருவில் இருந்தபோதே எரிமலை ஏற்றம் கண்டவராம். நச்சு வாயுக்களைக் கக்கும் எரிமலை முகப்புக்கு கருவில் குழந்தையைச் சுமந்தபடி அந்தக் தாய் ஆய்வுக்காக சென்று வந்திருக்கிறாள்.

பல பெண்கள் இத்தகைய ஆய்வுகளில் இன்றும் துணிவுடன் இறங்கிவிடுகிறார்கள். ஆராய்ச்சிகள் மூலம் எரிமலைகளின் குணங்குறிகளை வரையறை செய்யவும் வளங்



களை இனங்காணவும் குமுறல்களை எதிர்வு கூறவும் இவர்கள் முயற்சிக்கிறார்கள்.

வில்லியம் குழுவினர் புறப்பட்ட 1993 ஜனவரியில் கலேராஸ் மலையுச்சி அப்பாவித்தனமாகவே இருந்திருக்கிறது. சூழவுள்ள அவதான நிலையங்கள் எந்தவிதமான எச்சரிக்கையையும் விடவில்லை. வழமையான, சாதாரண முறுகல், குமுறல்கள் இருக்கத்தான் செய்தன. ஜீப் வண்டிகள் மலையுச்சி நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தபோது நேரம் காலை 8.00 மணியிருக்கும்.

மலைப் பிராந்தியத்தில் தங்கிக் கொள்ளவும் அங்கு ஏற்படக்கூடிய அவசர நிலைமைகளைச் சமாளிக்கவும் அவர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டார்கள். ஆய்வாளர்களின் சந்திப்பு அவர்களது முன் அனுபவங்களை முதலில் பகிருவதாக அமைகிறது. ஏற்கெனவே கேள்விப்பட்ட அல்லது சந்தித்திருந்த பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கு சேர்ந்து கொண்டனர்.

எனவே, ஆரம்பம் குதூகலமாகவே இருந்தது. கொலம்பியாவின் பஸ்ரோ நகரில் இடம்பெற்ற எரிமலை ஆராய்ச்சி மகாநாட்டைத் தொடர்ந்து இந்த மலையேற்றம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

கடந்த 500 வருடங்களில் 30 முறை கடும் சீற்றம் கொண்ட வரலாற்றை அப்போது கலேராஸ் கொண்டிருந்தது. இது குடிசன நெருக்கடி இல்லாத பிரதேசமாக இருப்பதால் உயிரிழப்புக்கள் பதிவாகியிருக்கவில்லை.

அப் பிராந்தியத்தில் குடியிருக்கும் சுமார் மூன்று லட்சம் மக்களின் நலன்களை தமது ஆய்வுகள் உறுதிப்படுத்தும் என அவர்கள் கருதினார்கள். காலப்போக்கில் சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக அச்சுறுத்தல் உள்ள பிராந்தியங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகிறது.

அதனை ஒரு நெருப்பு மலை என்றே அமெரிக்க ஆதிவாசிகள் அழைத்து வந்திருக்கிறார்கள். கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000 மீற்றர்கள் உயரம்வரை ஓரளவுக்குப் பாதை இருக்கிறது.


வாகனங்களில் பயணித்து உச்சிப் பிரதேசத்தை அவர்கள் காலை 9.45 அளவில் அடைந்து இருந்தனர். அங்கு அடங்கி ஓய்ந்து போன பழைய முகப்பு ஒன்று முதலில் குறுக்கிட்டது. அதனையடுத்து, தற்போது செயற்படும் சுமார் 350 மீற்றர் அகலமானதும் 75 மீற்றர் ஆழமானதுமான உலைமுகப் பிராந்தியத்தை அவர்கள் வந்தடைந்தனர்.

(பொறுத்திருங்கள்)

ஈழத்தமிழ் மக்களிடையே சைவப்பாரம்பரிய பழக்கவழக்கங்கள் அருகிப் போகக் கூடாதென்பதைக் கருத்திற் கொண்டு தமது வாழ் நாளில் பெரும் பகுதியை அதற்காகவே அர்ப்பணித்தவர் சைவப்புலவர் **வ.கந்தசாமி.** இவரது பெரும்பணியைச் சைவ உலகம் உவந்து அடுத்தடுத்துப் பாராட்டி வருகிறது. இவ்வேளையில் வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் முத்தான மூத்தவர்கள் பகுதியில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் எழுபத்தைந்து வயதை எட்டிப் பிடிக்கும் வ.கந்தசாமி ஐயா.

# ஒழுக்கம், நேர்மை, உண்மை இருந்தால்தான் உயர்வான சைவப்பணி ஆற்றமுடியும்

சைவபூஷணம் வ.கந்தசாமி சொல்கின்றார்



சைவத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டும்; அதற்கான நடவடிக்கைகளில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும்; பொதுவான சில தடங்கல்கள் ஏற்பட்டாலும் சளைக்காமல் முன்னின்று உழைக்கவேண்டும்; அதற்காகவே பாடுபடவேண்டும்; என்று தம்மையே முற்று முழுதாக அர்ப்பணித்து வாழ்ந்து வருபவர் தான் வல்லிபுரம் கந்தசாமி.

புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் நெற்றியில் திருநீறு துலங்க சைவப்பழமாகவே காட்சி தருகின்ற இவரை 'முத்தான மூத்தவர்கள்' பகுதிக்காகச் சந்திக்கச் சென்றிருந்தேன். வயது முதிர்ந்த நிலையிலும் சைவப் பாரம்பரியம் பேணி முறைப்படி சந்தியாவந்தனம் முடித்து நின்றிருந்த அவர் 'வணக்கம்' கூறி என்னை வரவேற்றார். நானும் வணக்கம் என்றேன்.

பின்னர் நான் வந்த விடயத்தைக் கூறியதும் பூரண சம்மதத்துடன் என்னை இருக்கையில் அமரச் சொல்லித் தானும் அமர்ந்து கொண்டார். வெள்ளை வெளேரென்ற வேட்டியுடன் காணப்பட்ட அவர் பார்ப்பதற்கும் வெள்ளை மனத்துடனே இருந்தார்.

'சரி தம்பி! என்ன கேட்கப் போகின்றீர்கள்?' என்றார் மெதுவாக

*கேள்வி:* 'ஐயா' சைவப்பணி என்று செய்கின்றீர்கள். இதன் மூலம் தாங்கள் அடையும் திருப்தி என்ன?

*பதில் :* இலாபங்கருதி நான் இதைச் செய்யவில்லை. இதன் பயன் ஆத்ம திருப்தியே! அதாவது உள்ளத்திலே ஓர் அமைதியும் ஆனந்தமும் கிடைக்கிறது. 'அன்பே சிவம்' என்பது ஆன்றோர் வாக்கு. நான் ஆசிரியப்பணி புரிந்த காலத்திலும் அன்பு, பக்தி, கருணை என்பவற்றுக்கே முக்கிய இடம் கொடுத்திருந்தேன். இப்போதும் அப்படியேதான்.

'அறஞ் செய விரும்பு' என்பதற்கு இப்போது தர்மம் கொடுப்பது என்று தான் பொருள் கொள்கின்றார்கள். அதற்கு மற்றொரு அர்த்தமும் கொள்ளலாம் அது என்னவென்றால் "மற்றவர்களிடம் அன்பு காட்டு; பிற உயிர்களிடம் கருணைகாட்டு; இரக்கம் காட்டு என்பதே. உதாரணமாக, நல்ல மத்தியான வெயிலில் ஒரு பசுமாடு தண்ணீர்த் தாகத்துடன் வருகிறது. அப்போது அதற்கு ஒரு வாளி தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால் அதுதான் அறம். பசியில்லாதவனுக்கு அன்னதானம் கொடுப்பதில் பயனேதுமில்லை. உண்மையரகப் பசித்து வருபவனுக்கு உணவு கொடுத்தால் அது தர்மம். இது என்னுடைய கருத்து.

*கேள்வி:* இத்தனை வயதிலும் திடகாத்திரமாக இருக்கின்றீர்களே! உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

*பதில் :* நான் பொலிகண்டி கந்தவனக்கடவையைச் சேர்ந்த கந்தையா வல்லிபுரம்- வள்ளிப்பிள்ளையின் மகனாக 18-01-1931 இல் பிறந்தேன். சிறு வயதிலேயே சைவப்பழக்க வழக்கங்களுடன் வளர்ந்த நான் ஆசிரியத் தொழிலையே விரும்பினேன். தமிழ், சைவசமயம் ஆகிய பாடங்களை விரும்பிக் கற்பித்தேன். நாவலர் ம.வி, பெரிய புலம் பாடசாலை மாணவர்களை நன்னெறிப்படுத்திய பெருமை எனக்குண்டு. பொதுப்பணிகளாகச் சாந்தையர் மடம் பிள்ளையார் கோயில், சைவ சமய அபிவிருத்திக் கழகம், பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் நிர்வாகத்தைக் கவனித்தேன். ஒழுக்கத்துடன் உண்மையாக வாழ்ந்தேன். அதுவே என் வெற்றி. சைவபரிபாலனசபை, சைவப்புலவர் சங்கம், வில்லூன்றிப் புனித தீர்த்தச் சபை என்று பலவற்றிலும் இணைந்து அவற்றின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்தேன். இப்படியே சொல்லப்போனால் சொல்லிக்கொண்டே போகலாம். பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சைவசமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்ற பெருவிருப்புடனேயே செயற்பட்டேன். சைவ சமயப் பாடப் பரீட்சைச் செயலாளராக இருந்து அறப்பணியாற்றியதே மனதுக்கு ஒரு நிறைவைத் தருகின்றது. ஏனென்றால் மாணவ சக்தி மாபெருஞ் சக்தியாகும். அவர்கள் நல்ல நிலையில் சைவ அறிவு பெற்றுத் திகழ்வதற்கு நான் செய்த சேவை உறுதுணையாக இருப்பது மகிழ்ச்சிக்குரிதாகும்.

*கேள்வி:* சமயப்பணி சரி, சமூகப்பணி சரி அது எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

*பதில் :* பொதுப்பணி நல்ல நோக்கத்துடன் நேர்மையை அடிப்படையாக வைத்துச் செய்யப்படவேண்டும். தேர்வுச் செயலாளராக இருந்தபோது எனக்கு நல்ல அனுபவம். பிள்ளையின் முன்னேற்றத்தையே கண்ணாகக் கொண்டு செய்யப்படும் ஒழுங்கான சேவையே நன்மை பயக்கக் கூடியது. இதில் பாரபட்சம் காட்டக்கூடாது. சொந்தம், அறிமுகம், அறவே நீக்கப்படவேண்டும். ஒரு மாணவனின் எதிர்காலம் ஆசிரியரின் கையிலேயே தங்கியிருக்கிறது. நான் இப்படிச் சொல்கிறேன் என்று தப்பாக எண்ண வேண்டாம்.

சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர் உண்மையில் அது பற்றி நன்கு அறிந்தவராக இருப்பது மிகமிக அவசியம். சைவம் சொல்லிக்கொடுக்கும் ஆசான் நெற்றியில் திருநீறு அணிந்திருக்க வேண்டும். அப்போதுதான் மாணவனும் அதை அணியப் பின்னிற்க மாட்டான். தேவாரம் என்னவென்று தெரியாத ஒருவரால் எப்படிச் சமயம் கற்பிக்க முடியும்? அன்பும் அருளும் இருந்தால் தான் நல்லது.

பொலீஸ்காரனுக்குச் சீருடை இருப்பது போல சைவம் கற்பிக்கும் ஆசிரியருக்கும் சிவசின்னம் அவசியமானது.

மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களை மாணவர்கள் அறிந்திருக்கவேண்டும். ஆசிரியரும் தெரிந்திருக்கவேண்டும். அப்போது தான் மாணவருலகம் பெரியோர்களால் நன்கு மதிக்கத்தக்க நற்பிரஜையாகப் பிரகாசிக்க முடியும். எதிர்காலத்தில் நல்லபண்பும் கலாசாரமும் பிரதிபலிக்க வாழ்க்கை சுபீட்சமாக அமையும். வீட்டுக்கு அத்திபாரம் நல்ல பலமாக அமைதல் போல பிள்ளைகளுக்குச் சமய அறிவும் தெளிவாக இருந்தால் தான் சமூகத்தில் மதிப்புள்ளவனாக மிளிரமுடியும். மொத்தத்தில் சிறுபராயத்திலேயே சமயதீட்சை பெற்று சைவப்பிள்ளையாக வளர்ந்தால் தான் பெரியவனாகும்போது அவன் பண்புள்ளவனாகத் திகழ்வான்.

*கேள்வி:* இன்றைய காலகட்டத்தில் இளஞ் சமுதாயத்தினருக்கு நீங்கள் கூறும் புத்திமதி என்ன?

*பதில்:* நல்ல கேள்வி கேட்டீர்கள். இளஞ்சமுதாயத்தினர் இன்று பல வழிகளில் விஞ்ஞானம் வளர்ந்து விட்ட காரணத்தால் பழைய சம்பிரதாயங்களை ஒதுக்குகின்றார்கள். அது கூடாது. எமது மூதாதையர்கள் நமக்கு வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். அதாவது இப்படித்தான் வாழவேண்டும் என்று.

பெரியோரைக் கனம் பண்ண வேண்டும். மூத்தோர் சொல்லைக் கேட்டு நடக்கவேண்டும். அன்பு. இரக்கம்- கருணை நெஞ்சில் இருக்கவேண்டும். எப்போதும் உண்மை பேசவேண்டும். இவைதான் நான் அவர்களுக்குக் கூறும் புத்திமதி.

*கேள்வி:* தேவாரம் பாடும் போது எப்படிப் பாடப்பட வேண்டும்? இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* தேவாரம் என்பது வேதசாரம். அது பிழையின்றி ஓதப்பட வேண்டும். ஆரம்பத்திலும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்று கட்டாயம் சொல்லவேண்டும். அத்துடன் பொருளறிந்து ஓதுதல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பண்ணுடன் ஓதப்படவேண்டும். ஒரு பாடலைப் பிழையாகப் பாடும்போது அதன் கருத்தும் மாறுபட்டு விடும் ஆகவே எழுத்துப்பிழை, சொற்பிழை வரவே கூடாது. ஆலயங்களில் தேவாரம் சரியாக ஓதப்பட்டால் தான் நாட்டில் நன்மை நடக்கும். மாரி பொழியும்.

*கேள்வி:* இன்றைய கல்வி நிலைபற்றி தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* பண்டைத் தமிழர் பண்பாடு பிரதிபலிக்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும். இதிகாசங்கள், புராணங்கள் பற்றி மாணவர்கள் அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் கல்வி நன்கு வளர்ச்சியுறும். முற்காலத்தில் நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களான மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் என்பனபற்றி மாணவர்கள் தெரிந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

*கேள்வி:* தங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது விசேட அனுபவம்....?

*பதில்:* நான் பயன் கருதாமல் இலவசமாகவே சேவை மனப்பான்மையுடன் செயலாற்றினேன். பல்வேறு சபை, சங்கங்களில் உறுப்பினராக இருந்து என்னுடைய கூடுதலான நேரத்தை அவற்றின் வளர்ச்சிக்காகச் செலவிட்டேன். அதன் பிரதி பலன்தான் சைவபூஷணம், சித்தாந்தவித்தகர், சிவநெறிச் செம்பல், சிவனடியார் மணி, சிவநெறிக் கலாநிதி முதலாய பட்டங்கள். இது எனது சைவப்பணிக்குக் கிடைத்த சான்றுகளாகும். யாழ். சிறைச்சாலை, கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலை, கைதடி வயோதிபர் விடுதி ஆகிய இடங்களுக்குச் சென்று சைவச் சொற்பொழிவாற்றி அவர்களை நல்வழிப்படுத்திய பெருமையும் எனக்குண்டு. கைதிகளாக இருப்பவர்கள் திருந்தி நல்லவர்களாக வர நான் காரணமாயிருந்தமை விசேடம் தானே!

*கேள்வி:* இளைய தலைமுறைக்கு வேறு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

*பதில்:* முற்காலத்தில் நாங்கள் எமது குருவை அதாவது ஆசிரியரைக் கண்டவுடன் பணிந்து வணங்கியே செல்வோம். இன்று அப்படியில்லை.

'மூத்தோர் வார்த்தை அமுதம்' என்பது எமது நம்பிக்கை. புது வருஷப்பிறப்பு, தீபாவளி, பிறந்தநாள் என்றால் எனது தாய், தந்தையரை வணங்கி ஆசி பெறுவது வழக்கம். அவர்களும் எம்மை வாழ்த்தி நல்லாசி கூறுவார்கள். முக்கியமாகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கூறும் வாழ்த்துரை நமது வாழ்க்கையையே மாற்றி அமைக்கக்கூடியது.

## முத்தான மூத்தவர்கள் 11

அவர்கள் சொன்னால் சொன்னதுதான். அது நிச்சயம் பலிக்கும். எனவே பெரியோர் கூறும் ஆசியுரை, வாழ்த்துரைகளே நம்முடைய வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்க வல்லன. என்பதை மனதிற்கொள்ள வேண்டும். எனது இன்றைய நிலைக்கு எனது மூத்தோரின் ஆசியே காரணம்.

டாக்டராகக் கடமையாற்றும் ஒருவருக்கு அன்பு பிரதானம். நோயாளியிடம் பரிவு காட்டி உண்மையாகப் பரிசோதித்தால் தான் நோயைக் கண்டுபிடிக்கமுடியும். நோயும் குணமாகும். பாசமில்லாமல் வைத்தியம் செய்தால் பிரயோசனம் இருக்காது. ஒரு டாக்டர் தனது நோயாளியிடம் காட்டும் அன்புதான் அவனைக் குணப்படுத்தும். அதே போலத்தான் சைவப்பணி, பொதுப்பணி என்று புறப்பட்டால் அங்கே உண்மையும் நேர்மையும் பயன்கருதாச் சேவையும் அன்பும் இருக்க வேண்டும். அப்போதுதான். உண்மையான பயன் கிடைக்கும் ஆத்ம திருப்தியும் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் ஒழுக்கம் பிரதானமாகும்.நல்லொழுக்கமும் நற்பண்பும் மனக் கட்டுப்பாடும்தான் ஒருவனை உயர்த்துகின்ற ஏணிப்படிகளாகும். நற்பண்பும் கலாசாரமும் பேணப்பட வேண்டும். சைவப்பண்பும் சைவ கலாசாரமும் என்றும் அழியாதவை. அவற்றைப் பேணிப் பாதுகாப்பது சைவனாக பிறந்த ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

*செவ்வி கண்டவர் :–* சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்**

# “எங்கே நாக்கை நீட்டுங்கள் பார்ப்போம்...”

வைத்தியர்களில் தனியார் வைத்தியர்களே நோயாளிகளிடம் பரிவாகவும் அனுதாபத்துடனும் நடந்துகொள்வது வழக்கம். காரணம் அவர்கள் அவர்களைத்தானே நம்பியிருப்பவர்கள். ஆனால், அதற்கும் விதிவிலக்காகச் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் இருந்தார். அவர் இப்பொழுது வெளிநாட்டில் ‘அந்தச் சேவை’ யைச் செய்து வருவதால் துணிந்து அவரைப் பற்றிச் சொல்லலாம். அவர் எப்பொழுதுமே அவரிடம் செல்பவர்களிடம் ‘சிடுசிடு’ வென்றுதான் நடந்துகொள்வார். ‘சின்னன்- பெரிசு’ என்றில்லை. எல்லாருக்குமே அந்த மரியாதைதான். மருமகள் எதுசெய்தாலும் அதிலே குற்றம் காணும் சில மாமிகள் போலத்தான் அவரும் நோயாளிகளிடம் நடந்துகொள்வார்.

அவருக்கு முன்னர் போல் இருந்துகொண்டு நோயைப் பற்றிச் சொல்லத் தொடங்கினால்.... ‘உமக்கு பெயர் வயது என்று எதுவும் கிடையாது போலிருக்கிறது’ என்பார். மனுசன் அப்படியானவராயிற்றே என்று, அடுத்தமுறை அதை முதலில் சொல்லத் தொடங்கினால் ‘டாப்பு




எழுதுகிறது பிறகு இருக்கட்டும். வருத்தத்தை முதலில் சொல்லும்’ என்பார். அதைச் சொல்லிவரும்போதும் விதண்டாவாதமான வியாக்கியானங்கள்.... ‘இப்படிக் கன காலமாய்...’ என்று சொன்னால்! அம்மாட்டைப் பால் குடித்த காலத்திலிருந்தா? என்பார். இப்படியெல்லாம் நடந்து கொள்வதில் அந்த மனுசனுக்கு அப்படியோர் ஆத்மதிருப்தி...

எது எப்படி இருந்தபோதிலும் அவர் இங்கிருக்கும் வரை எல்லாரும்(அதைப் பெரிதுபடுத்தாமல்) அவரைத் தான் நாடினார்கள். அவர் ஒரு கைராசிக்காரராம். நோயை இனம் கண்டு சிகிச்சை செய்வதில் அவரை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலை...

இந்த மனிதரைப் போலவே கொழும்பிலே ஒரு ‘மனிசி’யும் இருக்கிறா.. வெளிநாட்டு வதிவிட விசா சம்பந்தமான வைத்திய பரிசோதனை அறிக்கை வழங்கக்கூடியவர்களின் பட்டியலில் அவரது பெயரும் இருக்கிறது. தமிழ் டாக்டராயிற்றே என்று நம்மவர்களும் அப்படியான அறிக்கைகளுக்காக அவரையே நாடுவதுண்டு.

வசதியான வீடு, விசாலமான வரவேற்பு மண்டபம் எல்லாம் இருந்தும் என்ன பயன்? கூடச்செல்பவர்கள் மறந்தும் அங்கே இருந்துவிடக் கூடாது. அவர்கள் உள்ளே போனவர்கள் திரும்பி வரும் வரை தெருவில் நின்றுதான் தூங்கவேண்டும்.

உள்ளே செல்லும் விண்ணப்பதாரிக்கும் ‘முதல் மரியாதை’ அவமதிப்பாகத்தான் இருக்கும். ‘எங்கேயிருந்து எப்படி வந்தாய்?’ என்ற முதற் கேள்விக்குத் தப்பித்தவறி உண்மையைச் சொல்லிவிட்டால் போதும். மட்டக் குளியிலிருந்து இங்கே வரத்தெரியாதவ எப்படி வெளிநாடு போகப்போகிறாய்? என்றெல்லாம் சினந்து கொள்வார். கேள்விகளுக்கு எவ்வளவுதான் விவேகமாகப் பதிலளித்தாலும் கிடைப்பதென்னவோ கேலியும் கிண்டலும்தான்.

இருந்தாலும் சும்மா சொல்லக்கூடாது. அவர் வழங்குகின்ற வைத்திய அறிக்கையில் மட்டும் அந்தக் கோபமோ வெறுப்புணர்வோ ‘மருந்துக்கும்’ இருக்காது. எல்லாமே சரியாகவும் ஒழுங்காவும் தான் இருக்கும்.

ஒரே துறையில் விற்பன்னர்கள் என்று ஒன்றுக்கு மேற்பட்ட வைத்திய நிபுணர்கள் இருந்தால் அவர்களுக்கென்று வெவ்வேறு சிகிச்சைப் பிரிவுகளும் (Clinic) தனித்தனி வார்ட்டுக்களும் இருப்பதுண்டல்லவா? ஏற்கனவே ஒரு நோயாளி அத்தகைய வைத்திய நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெற்றிருந்தால் அவர் எக்காரணம் கொண்டும் மற்றைய வைத்திய நிபுணரிடம் ஆலோசனை பெறமுடியாது என்றிருக்கிறது.

திடீரென்று ஒருவர் அத்தகைய வார்ட் ஒன்றில் அனுமதிக்கப் பட்டாலும் அதுதான் கதை. வார்ட்டிலே மேற்கொள்ளப்பட்ட சோதனைகள்- விசாரணைகளிலிருந்து நோயாளி முன்னர் மற்றவரிடம் சிகிச்சை பெற்றவர் என்பது கண்டறியப்பட்டால் அடுத்தபடியாக அவர் அந்த வைத்திய நிபுணரின் வார்ட்டுக்கு மாற்றப்படுவார். நோயாளி ஒரு குறிப்பிட்ட வைத்திய நிபுணரிடம் ‘நுட்பமான திறமை’ இருப்பதாகக் கருதி அவரை விரும்பினாலும் அந்த ஆசையை அடக்கித்தான் வாசிக்க வேண்டும்.

நீல பத்மநாதன் எழுதிய ஒரு புகழ்பெற்ற நாவல் ‘உறவுகள்’ என்பது. இந்த நாவல் அரச வைத்தியசாலை ஒன்றையே களமாகக்கொண்டு முழுக்கமுழுக்க வைத்தியசாலையில் நடப்பவைகளையே விலாவாரியாக விவரிக்கிறது. இதய நோயாளியாக அங்கு அனுமதிக்கப்படுகின்ற ஒருவர்- அவ்வப்போது இதய வலியால் அவதிப்படுவதிலிருந்து உயிர்பிரிவது வரையிலான கதை. நோயாளியின் உறவுகள் நிழல் நினைவுகளாக வந்து போகின்றனவே தவிர எல்லாமே வைத்தியசாலை விவரிப்புக்கள் தாம். இரவின் அமைதியைக் குலைத்தவாறு ‘ஸ்ரைச்சர்’ ‘கிறீச் கிறீச்’ என்று ஓடுவது... பக்கத்துக் கட்டில் நோயாளி உயிரிழப்பது.. எல்லாமே மனதை உறையவைக்கும் வகையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேதான் இதுவும்....

அங்கே இன்னுமொரு பெயர் பெற்ற இருதய வைத்திய நிபுணரின் பெயரும் அடிபடுகிறது. உறவுக்காரர்களுக்கு கடைசி முயற்சியாக நோயாளியை அவரிடம் காட்டினால் என்ன என்றதோர் அற்ப ஆசை ஏற்படுகிறது. ஆனால், அங்கும் ‘இது போன்றதொரு’ நடைமுறை உள்ளதாலும் - இவர் ஏற்கனவே வேறொருவருக்கு ‘வாழ்க்கைப்பட்டு’ விட்டதாலும் அவர்களது அந்தமுயற்சி தோல்வியடைகிறது. அந்த இடத்தில் அந்த ‘நடைமுறை’ கடுமையாக விமர்சனத்துக்குள்ளாகிறது. வைத்தியர்கள் பல வகை என்றேன். அதிலே இதுவும் ஒரு வகை. தமிழகப் பருவ இதழ் ஒன்றிலே எப்போதோ படித்தது-

டாக்டரின் அறைக்குள் அந்த இளம் பெண்ணும் அவளது வயோதிபத் தாயாரும் நுழைகிறார்கள். பெயர், விவரம் சொல்லாமலே இளம்பெண் நோய் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். டாக்டர் ஸ்டெதஸ்கோவ்வைச் சரிசெய்தவாறே அவளை அணுகி ‘எங்கே சட்டைப் பின்’ களைக் கழற்றுங்கள் ....’ என்றார்.

இளம் பெண் சொன்னாள் “அத்தனையும் எனக்கல்ல டாக்டர், அம்மாவுக்குத்தான்”

“அப்படியா? “என்ற டாக்டர் தாயார் பக்கம் திரும்பி எங்கே அம்மா நாக்கை நீட்டுங்கள் பார்ப்போம்” என்றார்.

**சண் அங்கிளீ**

## தனிநாடு போல ...

(11 பக்கத் தொடர்ச்சி)

இப்போது குடாநாடாக இருக்கும் யாழ்ப்பாணம் முன்னொருகாலத்தில் அதாவது கிறிஸ்துவுக்கு அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கில் நாகதீபம், மணி நாகதீபம், மணிபுரம், மணிபல்லவம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்ட பெருந்தீவாகவும் கிழக்கில் எருமை முல்லைத்தீவு, எருமைதீவு எனப் பெயர் கொண்ட சிறிய தீவுமாக இரு பகுதிகளாக இருந்துள்ளது.

இது காலந்தோறும் ஏற்பட்ட இயற்கையின் சீற்றங்களினால் அழிக்கப்பட்டு மேற்கில் ஒன்றிருந்த பெருந்தீவகம் பல தீவுகளாகப் பிரிவானது. நயினாதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, மண்டைதீவு, வேலணை, நெடுந்தீவு, காரைதீவுகளும் வலிகாமமும் இதன் பகுதிகளேயாகும் (யாழ்ப்பாணச் சரித்திரம் முதலியார் செ.இராசநாயகம் 1933). கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் இடம் பெற்ற கடல் கோளினால் இவை நிகழ்ந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இரு தடவைகள் கடல் கோள் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

பூமியின் தோற்றம் குறித்த புவியியல் ஆய்வுகள் ஒரு புறம் இருக்க, அதன் தோற்றங்கள் குறித்த இதிகாசக் கதைகளும் இல்லாமல்லை. நெடுந்தீவும் அதற்கு விலக்காக முடியுமா? இதிகாசம் கதை பின்வருமாறு சொல்கின்றன.

திருகதாயுகத்தில் அதாவது இராம-இராவண யுத்தம் நிகழ்ந்த காலத்தில் இந்திரஜித்துடான போரின்போது இலக்குவன் உட்பட இராமபிரானின் படையில் பெரும்பகுதி அறிவுமயங்கி- மூர்ச்சையற்றது- கிடந்ததாகவும் அவர்களைக் காப்பாற்ற அனுமன் விந்திய பர்வதம் சென்று சஞ்சீவி மூலிகையைத் தேடியதாகவும்-

-அனுமனுக்கு சஞ்சீவி மூலிகைகள் எப்படி என்பது தெரியாதாகையால் அங்கிருந்த மலையின் மருங்கில் உள்ள சஞ்சீவி மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு இலங்காபுரியை நோக்கி விரையும் போது மலை உடைந்து விழுந்ததாகவும்-

அப்படி விழுந்த துண்டுகளில் ஒன்றே நெடுந்தீவு எனவும் நெடுந்தீவின் மீது மலையின் ஒரு பகுதி விழுந்ததினால் அது பின்னர் மூலிகை நிறைந்த ஒரு தீவாக மாறியது எனவும்-

அனுமானது கச்சையில் இருந்து விழுந்த ஒரு துண்டே கச்சதீவு எனவும் செவிவழிக்கதைகளாக முன்னோர்கள் கூறுவதுண்டு.

கரையோரப் பகுதிகள் உயர்ந்தும் உட்பகுதிகள் தாழ்ந்தும்காணப்படும் இத் தீவு ஓர் இணைகர வடிவில் அமைந்தள்ளதாகும். ♦

# 2014 இல் மற்றொரு சுனாமி?

**இன்னும் சரியாக 9 ஆண்டுகளில் பாரிய எரிகோள் ஒன்று பூமியில் விழுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவ்வாறு விழ நேர்ந்தால் பூமியே சுனாமி அலைகளால் கழுவப்பட வாய்ப்புக்கள் உள்ளனவாம். எரிகோள் பூமிமீது விழுவதற்கான வாய்ப்புக்கள், அவ்வாறு விழ நேர்ந்தால் ஏற்படவுள்ள அனர்த்தங்கள் குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.**

கடலின் அடிப்பரப்பின் கீழ் உள்ள நிலத்தடியில் இடம்பெற்ற பாறைகளின் அசைவுகள் காரணமாகக் கடல்நீர் பொங்கி எழுந்ததால் அண்மையில் சுனாமி அலைகள் உருவாயின. இருப்பினும், கடலின் அலைகள் பொங்கி எழுவதற்குக் கடலடிப் பாறைகளின் அசைவுகள் மாத்திரம் காரணம் அல்ல. எனவே எதிர்காலத்தில் பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்துதான் சுனாமி அலைகள் உருவாகும் எனக் கூறமுடியாது.

பெரிய அளவிலான எரிநட்சத்திரம் எரிந்து கடற்பரப்பில் விழும்போது கடல் கொந்தளித்துப் பாரிய சுனாமி அலைகள் உருவாகலாம் . எனவே பெரிய அளவிலான எரிநட்சத்திரம் (அஸ்ரெறோயிட்ஸ்– Asteroids) கடற்பரப்பின் மீது விழும் நாளன்று அடுத்த சுனாமி உருவாகும்.

தற்போது இவ்வாறான பாரிய அளவைக் கொண்ட எரிநட்சத்திரம் விண்வெளியிலிருந்து பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2003 கியு.கியு.47(2003QQ .47) எனப் பெயரிடப் பட்டுள்ள இந்த எரிநட்சத்திரம் தொடர்பாகப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பூமி மீது மோதவுள்ள இந்த எரிநட்சத்திரம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள பிரிட்டிஷ் அரசு ‘நியோ’ (Neo-Near Earth Information Centre) அமைப்பை உருவாக்கியது. அந்த அமைப்பைச் சேர்ந்த வல்லுநரான கலாநிதி அலன் பிட்சிமோன்ஸ் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த எரிநட்சத்திரம் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதியன்று பூமிமீது விழ வாய்ப்பு உண்டு.

ஆனால், அமெரிக்காவில் நியுமெக்சிக்கோ நகரில் அமைக்கப்பட்டுள்ள ‘நியர்’ ( Near-Near Eart Asteroicd Reserch Pro Gram) நிலையம் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த எரிநட்சத்திரம் பூமி மீது வீழ்வதற்குள்ள வாய்ப் புகள் மிகமிக அரிதாகும். அதாவது ஒன்பது லட்சத்து ஒன்பதாயிரத்திற்கு ஒன்று என்ற மிகமிகக் குறைந்த அளவிலான வாய்ப்புக்களே உள்ளன.

இதன் அர்த்தம் இந்த எரி நட்சத்திரமானது பூமியில் விழாது என்பதல்ல எனவும் பூமி மீது வீழ்ந்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் எனவும் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்த எரிநட்சத்திரம் பூமி மீது வீழ்ந்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

“இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா நகர் மீது போடப்பட்ட அணுகுண்டால் ஏற்பட்ட அழிவுகளைப் போல இரண்டு கோடி மடங்கு அழிவுகள் ஏற்படலாம்”

எனவே இந்த எரிநட்சத்திரம் பூமியை நெருங்கும் போது மக்கள் நிறைந்த நகர்ப்புறங்கள் மீது விழுமா அல்லது பாலைவனப் பிரதேசங்கள் மீது விழுமா அல்லது கடற்பரப்பின் மீது விழுமா என விஞ்ஞானிகளால் எதிர்வு கூற முடியாமலுள்ளது. இருப்பினும், பூமியின் மேற்பரப்பானது மூன்றில் ஒரு பங்கு தரைப்பரப்பையும் மூன்றில் இரண்டு பங்கு கடற்பரப்பையும் கொண்டிருப்பதால் விண்ணில் இருந்து விழும் எந்த நட்சத்திரமும் நிலப்பரப்பில் விழுவதை விடக் கடற்பரப்பில் விழுவதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்த எரி நட்சத்திரம் கடற்பரப்பில் விழ நேர்ந்தால் அதன் மூலம் உருவாகக் கூடிய சுனாமி (பேரலை) குறித்து சேர். ஆர்தர்.சீ.கிளாக் மதிப்பீடு செய்துள்ளார். பிரித்தானியாவில் வெளியாகும் உயர் கல்விக்கான ‘ரைம்ஸ்’ சிறப்பிதழுக்கு (Times - Higher Educational Suppliment) சேர். ஆர்தர் சீ.கிளாக் எழுதியுள்ள கட்டுரையில் விஞ்ஞானியான டங்கள் ஸ்டீலின் மதிப்பீடு குறித்து ஞாபகப்படுத்தியுள்ளார்.

இதன்படி 200 மீற்றர் விட்டத்தைக் கொண்ட எரிநட்சத்திரமானது வினாடிக்கு 19 கிலோ மீற்றர் வேகத்தில் (மணிக்கு சுமார் 68 ஆயிரம் கி.மீ) பூமியை நோக்கி வந்து சமுத்திரத்தில் விழுமானால்



எரிகோள் கடற்பரப்பில் விழும்போது உருவாகும் சுனாமி அலைகள் கரையை நெருங்கும்போது 120 அடி உயரத்திற்கு கொலை அலைகளாக உருவாகின்றன.

தொகுப்பு : கஜனி

சக்திமிக்க பத்து அணுகுண்டுகள் வெடிப்பதற்குச் சமமான அதிர்ச்சி உருவாகும். இந்த அதிர்வில் பத்தில் ஒரு பங்கை கடல்நீர் உறுஞ்சினால் கூட அதனால் சுனாமி அலைகள் உருவாகுமேயானால் அது உலகிலுள்ள அதிகமான கரையோரங்களை நோக்கிக் கொலை அலைகளை ( Killer Waves) எடுத்துச் செல்லும்.

இந்தக் கொலை அலைகள் எந்த அளவிற்குப் பாரியத் தன்மை கொண்டதாக அமையும் என்பது குறித்து ‘ஸ்பேஸ் பொற்கொம்’ (Space.com என்னும் இணையத்தளம் எரிநட்சத்திரங்களும் சுனாமிகளும் (Asteroids and Tsunamis)என்ற தலைப்பிலான கட்டுரையில் பிரபல விஞ்ஞானக் கட்டுரையாளரான மைக்கல் ஜேன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவரது கணிப்பின்படி பொதுவான அளவைக் கொண்ட – அதாவது சுமார் 500 யார் விட்டத்தைக் கொண்ட எரிநட்சத்திரமொன்று முன்னர் கூறப்பட்டது போன்று மணிக்கு 68 ஆயிரம் கி.மீ. வேகத்தில் கடலில் விழுமேயானால் 600 அடி உயரத்திற்குச் சுனாமி அலைகள் உருவாகும். இவ்வாறு உருவாகும் கொலை அலைகள் அவை உருவாகும் இடத்தில் – ஆழ் கடலில் – சுமார் ஒரு மீற்றர் உயரத்தைக் கொண்டதாக இருப்பினும் அவை கரையை அடையும்போது சுமார் 120 அடி உயரத்தைக் கொண்டதாக அமையும். கடந்த டிசம்பர் மாதத்தில் எமது நாட்டில் அனர்த்தத்தை ஏற்படுத்திய சுனாமி அலைகளை விட நான்குமடங்கு உயரத்தைக் கொண்டதாக அமையும்.

இவ்வாறான பாரிய எரிகோள்கள் 80 ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறையே பூமி மீது வந்து விழுவதாக ‘நாசா’ நிறுவனம் (National Aerointies And Space Agency) தெரிவிக்கிறது. இருப்பினும் சேர். ஆர்தர்.சீ.க... க்கின் கருத்துப்படி இந்த எரிகோள்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு ஒரு முறை பூமி மீது வந்து விழுகின்றன.

1908 ஆம் ஆண்டு ஜின் 30 ஆம் திகதியும் 1947 ஆம் ஆண்டும் பெரிய அளவிலான எரிகோள்கள் சைபீரியாவில் வீழ்ந்தன. இருப்பினும் வரலாற்றில் இடம்பெறாத அனர்த்தங்களாக அவை அமையாததற்குக் காரணம் அவை பனிப்படலங்களைக் கொண்ட பகுதியில் வீழ்ந்ததே ஆகும். ஆனாலும் அந்த எரிகோள்கள் குடிசனம் செறிந்த நகரப் பகுதிகளிலோ அல்லது கடற்பரப்பிலோ வீழ்ந்திருந்தால் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை விடப் பாரிய அனர்த்தங்களாக அமைந்திருக்கும்.

எரிகோள்கள் பூமியில் விழ நேர்ந்த சந்தர்ப்பங்கள் மயிரிழையில் தப்பியுமுள்ளன. 1997 இல் சுமார் 500 யார் விட்டத்தைக் கொண்ட எரிகோள் ஒன்று பூமியிலிருந்து 4 லட்சத்து 50 ஆயிரம் கிமீ தூரத்தில் பயணம் செய்து கொண்டிருந்தது.

அந்த எரிகோளின் பருமனை வைத்துப் பார்க்கும்போது நாம் மயிரிழையில் தம்பினோம் என்றே கூற வேண்டும். 2002 ஜின் மாதத்தில் மற்றுமொரு எரிகோளிடமிருந்து பூமி மயிரிழையில் தப்பியது ‘1950DA’ எனப் பெயரிடப்பட்ட அந்த எரிகோளானது பூமியில் இருந்து 75 ஆயிரம் கி.மீ தூரத்திற்கு அப்பால் சென்றுகொண்டிருந்தது. இந்த இரு எரிகோள்களும் விண்வெளியில் லட்சக்கணக்கான ஆண்டுகளாகப் பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் ஏதோ ஒரு காரணத்தால் அவற்றின் பயணப் பாதையில் நூலளவு மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் அவை பூமியின்மீது மோதியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறு நேர்ந்திருந்தால் மோதலால் ஏற்படும் அதிர்வு காரணமாக உலகம் அழிந்திருக்கக்கூடும். அல்லது அந்த எரிகோள்கள் கடலில் வீழ்ந்திருந்தால் பாரிய சுனாமி அலைகளால் உலகமே கழுவப்பட்டுப் போயிருக்கும்.

ஆனால், எப்போதும் மயிரிழையில் தப்புவதற்கான வாய்ப்புகள் கிடைக்கமாட்டா என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். என்றோ ஒரு நாள் பூமியில் விழும் எரிகோள் காரணமாக அடுத்த சுனாமி உருவாகக் கூடும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறான அனர்த்தம் ஏற்படும் என விஞ்ஞானிகள் சந்தேகிக்கும் நாள் 2014 ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதியாகும்.

♦ ♦ ♦


SUPIRIVICKY
AYURVEDIC Herbal TOOTHPASTE
சுப்பிரிவிக்கி
சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை
SUMUDU
சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.
ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை
சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு
An ISO 9001, ISO 14001 & GMP Certified Company


ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் நீடித்த பாவனைக்கு
TOSHIBA
உத்தரவாதமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்
கிங் பௌரட்ஸ்
கொடிகாமம் வீதி, நெல்லியடி
தொ.பே. : 077 - 6679629
Sierra
இலக்ரோனிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
இல. 15, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 04,
தொ.பே. : 2553631-2, பக்ஸ் : 2507169
ஈ-மெயில் : selsales@sierra.lk


24 மணி நேரமும்
அழைக்கக் கூடிய
அழைப்பு நிலைய
சேவை.

# Western Union மூலம் பணம் அனுப்புவோருக்கு தங்கப்பரிசில்களை வழங்க புதிய நடவடிக்கை



MMBL Money Transfer Pvt. Ltd. இன் பணிப்பாளரும், பொதுமுகாமையாளருமான அத்ரியன் பெரேரா.

நாட்டுக்கு நாடு பணம் பரிமாற்றச் சேவையில் ஈடுபட்டிருக்கும் Western Union நிறுவனத்தின் இலங்கை கவர் நிறுவனமான MMBL நிறுவனம் இலங்கையில் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது.

அதன் சேவைபற்றியும், எதிர்காலத்திட்டம் பற்றியும் விளக்குகின்றார் MMBL நிறுவனத்தின் பணிப்பாளரும், பொது முகாமையாளருமான அத்ரியன் பெரேரா:—

''MMBL நிறுவனம் Western Union இன் கவர் நிறுவனமாக 10 வருடங்களாக இலங்கையில் இயங்கிவருகின்றது. நாளுக்கு நாள் அதிகளவான வாடிக்கையாளர்கள் எம்முடன் இணைந்தாலும், சிலருக்கு எமது சேவைபற்றிய தெளிவான விவரங்கள் இன்னும் தெரியாது. அவர்களுக்கு இதுபற்றித் தெளிவாக விளக்க முற்படுகிறேன்.

MMBL
MONEY TRANSFER

Western Union என்பது ஒரு பணப்பரிமாற்றச்சேவையை நடத்தும் ஒரு நிறுவனமே. வெளிநாடுகளில் உள்ளவர்கள் இலங்கையில் உள்ள தங்களின் உறவினர்களுக்கு அல்லது வேறுயாருக்காவது Western Union ஊடாகப் பணம் அனுப்பினால் அவற்றை MMBL நிறுவனம் உரியவரிடம் சேர்க்கின்றது. இதுதான் எமது பணப்பரிமாற்றச் சேவை.

'உலகில் எந்த நாட்டில் உள்ளவராயினும் அவர் இலங்கைக்கு எந்தப் பிரதேசத்திற்கும் பணம் அனுப்பமுடியும். அந்தப்பணம் உரியவரிடம் 5 நிமிடத்திற்குள் சேர்க்கப்பட்டு விடும்.

வெளிநாட்டிலுள்ள ஒருவர் Western union இற்குச் சென்று பணம்பெற வேண்டியவரின் விவரத்தைக்கொடுத்து தனது பணத்தை அப்படியே ஒப்படைக்கலாம். பிறகு அந்த நபர் பணம் பெறவேண்டியவர்க்குத் தொலைபேசி மூலம் அறிவித்துவிட்டால் போதும் அவர் வசிக்கும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் MMBL கவர் நிறுவனத்திற்குச் சென்று உரிய விவரங்களைச் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

'பணம் அனுப்பி வெறும் ஐந்தே நிமிடத்திற்குள் பணத்தை உரியவர் பெற்றுக்கொள்ளலாம். இதற்காகப் பணத்தைப் பெறவருபவரிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

பணத்தைப் பெறுபவர் தன்னை அடையாளப்படுத்தக் கூடியவாறு தேசிய அடையாள அட்டையை மாத்திரம் காட்டி பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.'

'தேசிய அடையாள அட்டை இல்லாவிடினும் பரவாயில்லை. தன்னை அடையாளப் படுத்தக்கூடிய வேறு ஏதேனும் ஆதாரங்களைக் காட்டிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

'இது ஒரு வங்கி முறையைக் கொண்டதல்ல. அனுப்பப்படும் தொகை அப்படியே வழங்கப்படும். வங்கியைப்போல் ஒரு சதமேனும் அறவிடமாட்டாது.'

வெளிநாட்டில் உள்ளவர்கள் வங்கிகள் மூலம் தமது பணத்தை அனுப்புவதைவிட Western Union மூலமாக அனுப்பினால் வாடிக்கையாளர்களுக்கு அதிக நன்மையுண்டு.

'வங்கிகள் மூலம் அனுப்பினால் பணம் வந்துசேர எப்படியும் ஒரு கிழமையாவது செல்லும். பணத்தை மீளப்பெற குறிப்பிட்ட வங்கியில் பணம் எடுப்பவர் கணக்கை வைத்திருக்கவேண்டும். அப்பணத்தொகைக்கு ஏற்ப தரகுக்கூலி அறவிடப்படும். அதுவும் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரங்களில் மாத்திரமே.

வங்கி விடுறை நாட்களில் பணத்தைப்பெறமுடியாது. வங்கி நாட்களிலும்கூட எல்லா நேரங்களிலும் பணத்தை மீளப்பெற முடியாது. வங்கிகளில் பணத்தை மீளப்பெறும்போது இவ்வாறான அசெளகரியங்கள் நிறையவே உள்ளன.

WESTERN
UNION
MONEY TRANSFER

ஆனால், Western Union மூலம் பணம் பெறுவதென்றால் இந்த மாதிரியான அசெளகரியங்கள் ஏதும் கிடையாது.

Western Union மூலம் பணம் அனுப்பி வெறும் ஐந்தே நிமிடத்தில் உரியவர் பணத்தைப் பெறமுடியும். பணத்தை மீளப்பெற வங்கிக் கணக்கு ஏதும் தேவையில்லை. தேசிய அடையாள அட்டை அல்லது பொருத்தமான வேறு சான்றிதழ் போன்றவற்றைக் காண்பித்துப் பணத்தைப் பெறலாம். இலங்கையில் உள்ள எமது MMBL கிளைகள் மூலம் எல்லா நாட்களிலும் பணத்தைப் பெறலாம். காலை 8.30 தல் இரவு 10மணிக்கு மேல் எமது கிளைக் காரியாலயங்கள் திறந்திருக்கும்.

யாழ்ப்பாணம், மானிப்பாயில் உள்ள எமது MMBL கிளைக்காரியாலயம் ஒன்று வாரம் முழுவதும் 24 மணிநேரம் திறந்திருக்கின்றது. பம்பலப்பிட்டியிலுள்ள தலைமைக் காரியாலயம் காலை 8 முதல் இரவு 12மணி வரை திறந்திருக்கும்.

நாடளாவிய ரீதியில் எமது சேவையை சிறந்தமுறையில் வழங்குவதற்காக நாம் நாடு முழுவதிலும் MMBLஇன் 300 கவர்களை நியமித்துள்ளோம்.

MMBL நிறுவனம் Western Union இன் கவராக தெரிவுசெய்யப்பட்டு 10வருடங்கள் ஆகின்ற போதிலும் கடைசி இரண்டரை வருடங்களில்தான் நாம் மிகவும் தீவிரமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டோம்.

2002ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் வெறும் 25 கிளைகளை மாத்திரம் கொண்டிருந்த நாம் இப்போது 300 கிளைகளைக்கொண்டிருக்கிறோம். எமது அர்ப்பணிப்புடன் கூடிய சேவையை இது நன்கு புலப்படுத்துகின்றது. விரைவில் 500 கிளைகளாக மேலும் உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

எமது MMBL நிறுவனம் சட்ட ரீதியானது, மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டது. நாம் முறையாக வரி செலுத்துகின்றோம். மாதந்தோறும் மத்திய வங்கிக்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

இது தவிர பரிசளிப்புத்திட்டம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளோம். 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2005ஆம் ஆண்டு ஜனவரி வரை Western Union மூலம் பணம் பரிமாற்றம் செய்தவர்களுள் 75 அதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு, இவர்களுக்கு 500 கிராம் தங்கம் பரிசாக வழங்கப்படும். முதல் பரிசு 50கிராம் தங்கக்கட்டியாகும் எனக் கூறினார்.

Western Union 198 நாடுகளில் 20 லட்சக் கிளைகளைக் கொண்டுள்ளது.

# கொழும்பில் 'எனது திருமணம் 2005' கண்காட்சி

செலிங்கோ கண்காட்சி மற்றும் மாநாடுகள் நிறுவனம்(CEC) வழங்கும் இரண்டாவது வருடாந்த திருமணம் தொடர்பான விழாவான 'எனது திருமணம் 2005' இம்மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை கொழும்பு பி.எம்.ஐ.சி.எச்.(புதியகட்டம்)இல் இடம் பெறவுள்ளது. ஒருவரின் சகலவிதமான திருமண தேவைகளையும் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தும் 'எனது திருமணம் 2005'ஆனது ஒவ்வொரு விடயமும் கவனமாகப் பார்க்கப்பட்டு நிபுணத்துவ மிக்க விதத்தில் வழங்கப்பட்டு அதன் எண்ணக்கருவின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

CEC இன் பொதுமுகாமையாளர் மோகன் பத்திரன கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தப் பிரத்தியேக நிகழ்வானது திருமண உடை தயாரிப்பாளர்கள், ஆபரண தயாரிப்பாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள், அழகு நிலையங்கள், அழகுக் கலை நிபுணர்கள், கேக் அலங்கரிப்பாளர்கள், உணவு வழங்குநர்கள், வடிவமைப்பாளர்கள், அழகு நிலைய உற்பத்திகள், ஆரோக்கிய உற்பத்திகள், அலங்காரப் பொருட்கள், அச்சகங்கள் மற்றும் ஹோட்டல்கள் உட்பட பலவிதமான பிரிவுகளை உள்ளடக்கியதாக சகலவிதமான துறைசார் நிறுவனங்கள் மற்றும் முன்னணி உற்பத்தி மற்றும் சேவைகள் வழங்குநர்கள் போன்றோரை நூற்றுக்கும் அதிகமான காட்சிக்கூடங்களில் பி.எம்.ஐ.சி.எச்.இல் ஒன்றுசேர்க்கும்.


'எனது திருமணம் 2005' ஒருபடி மேலே போய் வங்கிகள், காப்புறுதி முகவர்கள், பயண முகவர்கள் மற்றும் ஏனைய துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் காட்சிக்கூடங்களையும் கொண்டிருக்கும். வேறுவிதமாகக் கூறுவதானால் உங்களின் நிறுவனம் திருமணத்துக்கு மாத்திரம் சம்பந்தமுடையதாக இல்லாமல் (திருமணத்துக்குப் பிந்திய) எதிர்காலத்திற்குரிய வாழ்க்கைக்கு சம்பந்தமுடைய உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்குவதாயின் இந்த நிகழ்வு உங்களுக்காகவும்தான் என பத்திரன அழுத்தமாகக் கூறினார்.

'எனது திருமணம் 2005' இன் கவர்ச்சிகரமான அம்சமாக பூர்ணி ரம்படகால்ல வழங்கும் கொழும்பின் முன்னணி உடை வடிவமைப்பாளர்களின் உற்பத்திகளை இலங்கையின் முன்னணி ஆண், பெண் மொடல்களின் உதவியுடன் காட்சிப்படுத்தும் தினசரி மாலை நேர பெஷன் ஷோ காணப்படும். இதற்கு சமாந்திரமாக திருமண ஆடைகளின் போட்டிகளும் ரம்படகால்லவினால் நடத்தப்படவுள்ளதுடன் இவை இக்கண்காட்சிக்கு மேலும் கவர்ச்சியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பார்வையாளர்களின் செளகரியத்துக்காக பி.எம்.ஐ.சி.எச். இன் பெளத்தாலோக மாவத்தை வாயிலிலிருந்து கண்காட்சி இடம்வரையான வாகனப் போக்குவரத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச கண்காட்சிகள், வர்த்தக சந்தைகள், நுகர்வோர் சந்தைகள், உற்பத்தி அறிமுகங்கள் மற்றும் ஏனைய விசேட நிகழ்வுகளையும், ஊக்குவிப்புகளையும் வருடம் முழுவதும் ஏற்பாடுசெய்வது போன்ற பலதரப்பட்ட துறைகள் உள்ளடங்கலாக நிகழ்வு முகாமைத்துவத்தில் விசேஷித்த சேவையை வழங்குவதே CEC இன் இலக்காகும் என பத்திரன தெரிவித்தார்.

'எனது திருமணம் 2005' ஆனது எமது நாட்டின் பிரத்தியேகமானதும் வருடத்தின் உயர் நோக்கைக் கொண்ட திருமண நிகழ்வாகவும் பதியப்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய திருமண கண்காட்சிகள் வழமையாக வழங்குவதற்கு அதிகமான வாய்ப்புகளை வாடிக்கையாளர்களுக்கு இது வழங்கும். ''உயர் கொள்வனவு சாத்தியம் மற்றும் மனோதிடத்துடனான வாடிக்கையாளர்களை கவர்வதும் சிறப்பானதும் முன்னோடியானதுமான ஊக்குவிப்பு பிரசாரங்களை அவர்களுக்கு வழங்குவதுமே எமது பிரதான நோக்கமாகும். வாழ்நாள் முழுவதும் நினைக்கப்படக்கூடிய ஒருவரின் திருமணத்தில் நீங்கள் பிரதான பங்கு வகிக்க முடியுமாயின் இந்த கவர்ச்சிகரமான நிகழ்வில் பங்குபற்றுவதை நீங்கள் தவிர்க்கக்கூடாது.'' என பத்திரன மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
வாகனக் காப்புறுதி
அழையுங்கள்
(011) 2 357 357



உடனடி
சேத மதிப்பீடு
மற்றும்
பழுது பார்த்தலுக்கான
அனுமதி

இதற்கும் மேலாக
• 75% நஷ்டஈடு 24 மணிநேரத்திற்குள்
• பொலிஸ் அறிக்கை தேவையில்லை
• காப்புறுதி உங்கள் இல்லத்திற்கே வந்துசேரும்
• முழு நஷ்டஈடும் 3 நாட்களுக்குள் வழங்கப்படும்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
21, [illegible] வீதி, கொழும்பு 02.
தொலைபேசி: 2357457 பெக்ஸ்: 2447742
மின்னஞ்சல்: slic@srilankainsurance.com
இணையத்தளம்: www.srilankainsurance.com


இதோ,
மிருதுவான மென்மைச்
சருமத்தின் சொகுசை,
உங்கள் மேனிக்கு இப்போது
வெல்வட் தருகிறது
சருமத்துக்குத் தேவையான A, C, E விற்றமின்கள் சேர்ந்த அற்புத ஈரலிப்புச் சேர்வை கொண்டு, செழுமையூட்டிய வெல்வட் உங்கள் மேனியின் இயற்கை ஈரலிப்பைப் பேணி, வெல்வற்றின் மென்மையையும், பூ இதழின் மிருதுத் தன்மையையும் தருகிறது.
புதிய வெல்வட் பாவித்து உங்கள் மேனியின் பொலிவை மீளப் பெறுங்கள்.
ரோஸ், மில்க், ஹனி என்ற மூன்று போஷணைகளில்.
Moisturising Vitamin Complex
வெல்வட்
சருமம் மென்மேலும் மென்மை பெற
Velvet
Velvet
With Milk
Velvet
With Honey
Moisturising Vitamin Complex

# கடந்த வருட நிதிக்கட்டமைப்பில் கொமர்ஷல் வங்கி சாதனை

2004ஆம் ஆண்டுடன் முடிவடைந்த தளம்பல் நிறைந்த நிதியாண்டுக்கு மத்தியில் கொமர்ஷல் வங்கி தனது நிதிக்கட்டமைப்பால் சாதனை படைத்துள்ளது.

கடந்த வருடம் கொமர்ஷல் வங்கி வரிக்கு முந்திய லாபமாக 250 கோடி ரூபாவைப் பெற்றுள்ளது. இம்மாதம் வங்கி வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 இற்கான இந்த அறிக்கை இம்மாதம் 7 ஆம் திகதி கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்வின்போது கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் தலைவர் மஹேந்ர அமரசூரிய கூறுகையில்:—

கடந்த வருட நிதியாண்டில் கொமர்ஷல் வங்கி நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் சாதனையை நிலைநாட்டி இலங்கையின் சிறந்த தனியார் வங்கி என்ற பெயரை மீண்டும் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

வரிக்கு முந்திய லாபத்தை 250 கோடி ரூபாவாகப் பெற்றதோடு இதன் முழு வளர்ச்சி 27.24 வீதமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் பணவைப்பு 27.25 வீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணவழங்கல் நிலையில் 34.75 வீதம் பதியப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்தத் தொகை 9,620 கோடி ரூபாவாகும். வங்கியின் மொத்த சொத்துக்கள் 14,180 கோடியாகும். இது 25.68 வீதமாகப் பதியப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் கூட்டு நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய லாபம் 8,674 லட்சம் ரூபாவாகும். இது 51.67 வீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்லா நிலையிலும் கொமர்ஷல் வங்கி சாதனையை நிலைநாட்டியுள்ளது. எதிர்காலத்திலும் வங்கி மேம்பட்டு நிற்கவே முயற்சிசெய்யும். — என அவர் கூறினார்.




## சிறந்த சேவைக்கு SLIM விருதுகள் Leo Burnett நிறுவனம் வென்றது

Leo Burnett Solutions Inc.விளம்பர நிறுவனம் இலங்கையில் இவ்வருடத்திற்கான முதல்தர விளம்பர நிறுவனமாகத் தெரிவுசெய்யப்பட்டு SLIM விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்திற்கு மொத்தம் 33 விருதுகள் கிடைத்துள்ளன. 12 தங்க விருதுகளும், 13 வெள்ளி விருதுகளும் மற்றும் 8 வெண்கல விருதுகளும் இவற்றுள் அடங்குகின்றன.

இவற்றுள் 12 விருதுகள் பத்திரிகைப் பிரசுரங்களுக்கு கிடைத்தன. இதில் 4 விருதுகள் தங்கவிருதுகளாகும். 10 விருதுகள் வானொலி விளம்பரத்திற்குக் கிடைத்தன. 7 விருதுகள் தொலைக்காட்சி விளம்பரத்துக்குக் கிடைத்தன. 3 விருதுகள் சந்தைத் தொடர்பாடல் நிகழ்ச்சிக்குக் கிடைத்தன.

உணவு, தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம், தனிப்பட்ட கவனிப்பு, களியாட்டம் மற்றும் உல்லாசம், வீட்டுக் கவனிப்பு, நிறுவன மதிப்பு ஆகிய விடயங்களில் உள்ள தரத்திற்கே இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் Hilton, Colombo SLT- CLI, Cargills Magic, KFC, Tulipse By Koluus, Colombo Jewellery Stores, NDB Group, BOI மற்றும் Lanka IOC போன்ற நிறுவனங்களில் இருந்து பெற்றப்பட்டதாகும்.

Leo Burnett Solutions Inc. நிறுவனம் தனது 5 வருட செயற்பாட்டில் இவ்வாறு விருதுகளைப் பெற்றமை அதன் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளையும், சேவைத்தரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிறுவனம் இதற்கு முன் இரண்டு தங்க விருதுகளையும், Odel நிறுவனத்திற்கு மேற்கொண்ட விளம்பர நடவடிக்கைக்காக ஒரு வெள்ளி விருதையும் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு மேற்கொண்ட விளம்பர நடவடிக்கைக்கு ஒரு வெண்கல விருதையும் வென்றுள்ளது.

இந்நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரணில்.டீ.சில்வா இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களின் கடின உழைப்புக்கும் மற்றும் சிறந்த யோசனைக்கும் கிடைத்த பெறுபேறே இந்த விருதுகள்.

நாம் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றோம். ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்ற உடனே நாம் செயலில் இறங்கினோம். பாதிக்கப்பட்ட பகுதியில் 67 வீடுகளை மீள அமைத்துக்கொடுக்கப் பொறுப்பேற்றுள்ளோம்.

எமது நிறுவனம் 81 சந்தைகளில் 200 இயக்க அலகுகளைக் கொண்டு சர்வதேச வலையமைப்பு ஒன்றை இயக்குகின்றது. இவற்றுள் 92 முழு சேவை விளம்பர நிறுவனங்கள் அடங்குகின்றன. அத்தோடு விசேட சந்தைப்படுத்தும் சேவைகளும் இதில் உள்ளன.

"சர்வதேச மட்டத்திலுள்ள எமது Leo Burnett விளம்பர நிறுவனத்தின் உள்ளூர் அலகே இந்த நிறுவனம். இது 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. மிகச்சிறந்த 60 ஊழியர்கள் இதில் கடமைபுரிகின்றனர்"- என்றார்.

